பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்
PUBLIC LIBRARY
JAFFNA


# எங்கள் தேசம்

மாதம் இரு முறை

QD/13/NEWS/2014

மனிதம் வாழுமிடமெல்லாம் எங்கள் தேசமே!

Engal Thesam එංගල් දේසම්

மலர்: 13 | இதழ்: 23 | டிசம்பர் 01-14 ஹிஜ்ரி: 1436 | பக்கங்கள்: 20 | விலை: ரூபா 30.00 | 282


## இலங்கை மீது பொருளாதார தடை?

இலங்கை அரசாங்கம் சர்வதேச விசாரணையாளர்களை நாட்டிற்குள் அனுமதிக்காவிடின் இலங்கைக்கு எதிராக பொருளாதார தடை விதிக்கும் யோசனையை பிரித்தானிய பாராளுமன்ற உறுப்பினர்கள் முன்வைத்துள்ளனர்.

பிரித்தானிய பொதுச் சபையின் வெளிவிவகார குழுவே இந்த யோசனையை முன்வைத்துள்ளது.


சர்வதேச விசாரணைகள் ஆரம்பமாகி சில மாதங்களாகி விட்டதையும் அந்த விசாரணை மீது ஏற்படுத்தப்பட்டுள்ள முட்டுக்கட்டைகளையும் கருத்தில் கொள்ளும்போது, இலங்கை அரசாங்கம் சர்வதேச விசாரணையாளர்களை தனது நாட்டிற்குள் அனுமதிக்கச் செய்வதற்காக, பொருளாதார தடைகள் உட்பட சகல சாத்தியப்பாடுகளையும் பிரித்தானியா பரிசீலிக்க வேண்டும்.

➡16

**முஸ்லிம் கட்சிகளின் அரசியல் தெரிவு சமூக நலன் பேணுமா?** 05



**ஜனாதிபதி தேர்தல் அதிரடித் திருப்புமுனை** 07



## மேற்கொள்ளும் முடிவில் எல்லோரும் ஒன்றுபட்டிருக்க வேண்டும்

### அமைச்சர் ரவூப் ஹக்கீம்

எந்த முடிவை மேற்கொண்டாலும் எல்லோரும் ஒற்றுமையாக இருக்க முடியும் என்றால் அதில்தான் சமூகத்திற்கு நிம்மதியும் விமோசனமும் இருக்கும் என்று ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவரும் நீதியமைச்சருமான ரவூப் ஹக்கீம் தெரிவித்தார்.

ஜனாதிபதித் தேர்தல் பற்றி அறிவிக்கப்பட்டுள்ள நிலையில் அமைச்சர் ஹக்கீம் கொழும்பில் நடைபெற்ற நிகழ்வொன்றில் உரையாற்றும் போதே இதனைக் கூறினார்.

இது ஒரு வித்தியாசமானதும் மிகவும் சூடானதுமான காலகட்டமாகும். இந்தச் சந்தர்ப்பத்தில் எதிர்க்கட்சிக்கு வந்துள்ள குதூகலத்தைப் பார்க்கின்ற போதே மிகவும் ஆச்சரியமாக இருக்கின்றது. ஏங்கிப் போய், ஏக்கப் பெருமூச்சு விட்டுக் கொண்டிருந்த ஒரு சாராருக்கு இன்று ஏற்பட்டுள்ள குதூகலத்தைப் பார்த்தால் இது

➡16

## முஸ்லிம்களுக்கு எதிராக 350 தாக்குதல்கள் கிறிஸ்தவர்களுக்கு எதிராக 150 தாக்குதல்கள்



### ஐ.நா. பிரதிநிதி தெரிவிப்பு

பொதுபல சேனா அமைப்பு கடந்த இரண்டு வருடங்களில் முஸ்லிம்களுக்கு எதிராக 350 தாக்குதல் சம்பவங்களை மேற்கொண்டுள்ளதாக தெரிவித்துள்ள சிறுபான்மையின பிரச்சினைகள் தொடர்பான ஐ.நா. வின் பிரதிநிதி ரீடா ஐசாக், கிறிஸ்தவர்களுக்கு எதிராக 150 தாக்குதல் சம்பவங்களை மேற்கொண்டு சிறுபான்மையின சமூகத்துக்கு எதிரான வன்முறைகளை கட்டவிழ்த்து விட்டுள்ளதாகவும் தெரிவித்துள்ளார்.

ஜெனீவாவில் நடைபெற்ற சிறுபான்மையினரின் பிரச்சினைகள் தொடர்பான மாநாட்டில் முன்வைத்துள்ள அறிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

பௌத்த இனவாத அமைப்பான பொதுபலசேனா ஏனைய சில குழுக்களுடன்

➡16

## பொதுபல சேனாவுக்கு பின்னால் கோதபாய ராஜபக்ஷ உள்ளார்

### எச்.எம்.எம். ஹரீஸ் எம்.பி.



இனவாத அமைப்பான பொதுபல சேனா அமைப்புக்குப் பின்னால் பாதுகாப்புச் செயலாளர் கோதபாய ராஜபக்ஷ உள்ளார் என்பதை ஆளும் தரப்பு பாராளுமன்ற உறுப்பினரான என்னால் உறுதியாகக் கூற முடியும் என ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸின் அம்பாறை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சட்டத்தரணி எச்.எம்.எம். ஹரீஸ் தெரிவித்துள்ளார்.

தனியார் தொலைக்காட்சி நிகழ்ச்சி ஒன்றில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

காலியில் பொதுபல சேனா அமைப்பினர்காரியாலயத்தை கோதபாய திறந்து வைத்தார். பொதுபல சேனா அமைப்பினர் அமைச்சர் றிஷாட் பதியுதீனின் அமைச்சுக்குள் புகுந்து அட்டகாசம் செய்து அங்கு அல்லோலகல்லோலப் படுத்தினர். இதுவரைக்கும் எவரும் கைது செய்யப்படவில்லை.

பர்மாவில் முஸ்லிம்களை கொன்று

➡16

## குடும்ப ஆட்சியிலிருந்து நாட்டைக் காக்கவே போட்டி

### மைத்திரிபால



வினாசர் ராஜா

குடும்ப ஆட்சியிலிருந்து நாட்டைக் காப்பாற்ற வேண்டும். இன்று ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியின் ஆதரவாளர்கள் புறக்கணிக்கப் பட்டுள்ளனர். பொதுமக்கள் புறக்கணிக்கப் பட்டுள்ளனர். நாட்டின் ஜனநாயகம், சட்டம்-ஒழுங்கு சீர்குலைந்துள்ளன. இந்த அழிவிலிருந்தும் நாட்டை காப்பதற்காகவே தான் பொது வேட்பாளராக ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுகின்ற தீர்மானத்தை எடுத்ததாக மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார்.

எதிர்க்கட்சிகளின் பொது வேட்பாளராக போட்டியிடுகின்ற மைத்திரிபால சிறிசேன,

➡16

## பேராசிரியை லோனா தேவராஜின் மறைவு: இலங்கையின் வரலாற்றுத் துறைக்கு மாபெரும் இழப்பு



### இலங்கை ஜமாஅத்தே இஸ்லாமி அனுதாபம்

இலங்கையின் வரலாற்றுத் துறைக்கும் இனங்களுக்கிடையிலான வரலாற்றுப் பாரம்பரியத்திற்கும் அளப்பரிய சேவையாற்றிய பிரசித்தி பெற்ற வரலாற்றுப் பேராசிரியை லோனா தேவராஜ் அவர்களின் மறைவு இலங்கையின் வரலாற்றுத் துறைக்கு மட்டுமன்றி, சமூகங்களுக்கிடையிலான இணக்கப்பாட்டுக்கும் மாபெரும் இழப்பாகவே கருதப்படுகிறது என அவரது மறைவையொட்டி இலங்கை ஜமாஅத்தே இஸ்லாமி வெளியிட்டுள்ள அனுதாபச்

➡16

## மஹிந்தவுக்கு முஸ்லிம்கள் அளிக்கும் வாக்கே பொதுபல சேனாவுக்கு சாட்டையடி கொடுக்கும்

### பிரதியமைச்சர் எம்.எஸ்.ஏ.எம். ஹிஸ்புல்லாஹ்



பழுலுல்லாஹ் பர்ஹான்

பொதுபல சேனா போன்ற பௌத்த தீவிரவாத அமைப்புகளுக்கு சாட்டையடி கொடுக்க வேண்டுமானால் முஸ்லிம்கள் வரிந்துகட்டிக் கொண்டு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கு வாக்களிக்க வேண்டும் என பிரதியமைச்சர் ஹிஸ்புல்லாஹ் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

காத்தான்குடியில் நடைபெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு கூறியுள்ளார்.

பொதுபல சேனாவின் விருப்பம் முஸ்லிம்கள் மஹிந்த ராஜபக்ஷவுக்கு எதிராக வாக்களிக்க வேண்டும் என்பதாகும். முஸ்லிம்களின் வாக்கினால்தான் மஹிந்த ராஜபக்ஷ வெற்றி

➡16

## ஜம்இய்யத்துல் உலமா எந்தவொரு கட்சிக்கும் ஆதரவாக செயற்படாது

### அ.இ.ஜ.உ. அறிக்கையில் தெரிவிப்பு

அகில இலங்கை ஜம்இய்யத்துல் உலமா எந்தவொரு கட்சிக்கும் ஆதரவாகவோ அல்லது எதிராகவோ செயற்பட மாட்டாது. எனவே எவரும் ஜம்இய்யாவின் பெயரைப் பயன்படுத்தி பிரசாரங்கள் செய்ய வேண்டாம் என அவ்வமைப்பு விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது;


ஜனநாயக நாடொன்றில் பல தரப்பட்ட கட்சிகள் தேர்தலில் போட்டியிடலாம் என்பது அனைவரும் அறிந்ததே. எவரும் தான் விரும்பும் வேட்பாளரை ஆதரிப்பது அவரது உரிமையாகும். இந்நிலையில், 90 வருடங்களை கடந்து இயங்கி வரும் அகில இலங்கை ஜம்இய்யத்துல் உலமா எந்தவோர் அரசியல் சாயத்தையும் பூசிக் கொள்ளாத நிறுவனம் என்பது அனைவரும் அறிந்த உண்மையாகும்.

காலத்தின் தேவையை கருத்திற் கொண்டும் முஸ்லிம்களின் உரிமைகளையும் நலன்களையும் பெற்றுக் கொள்ளவும் ஆட்சியிலுள்ள, ஆட்சியில் இருந்த அரசாங்கங்கள் மற்றும் முஸ்லிம் அரசியல்வாதிகள் என்று பல தரப்பினரையும் அகில

➡16

Des: Shafeek

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வெளியேறியவர்களின் கோப்புகள் உள்ளன ஆனால் பழிவாங்கப் போவதில்லை

## ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ

அரசாங்கத்தை விட்டு வெளியேறிய நபர்களின் தகவல்கள் அடங்கிய ஆவணங்கள் தன் வசம் இருப்பதாக கூறிய ஜனாதிபதி ராஜபக்ஷ, அவற்றைப் பயன்படுத்தி பழிவாங்கும் நடவடிக்கைகளில் ஈடுபட தான் தயாரில்லை எனவும் கூறியுள்ளார்.

மஹிந்த ராஜபக்ஷவை எதிர்த்துப் போட்டியிடுவதற்காக மைத்திரிபால சிறிசேன தலைமையிலான தரப்பினர் அரசாங்கத்திலிருந்து வெளியேறியுள்ள சூழ்நிலையிலேயே ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அனுராதபுரத்தில் கூட்டமொன்றில் உரையாற்றிய மஹிந்த ராஜபக்ஷ, தனது அரசாங்கத்தை விட்டு வெளியேறவோ, இணையவோ எந்தவொரு நபருக்கும் சுதந்திரம் உள்ளதாகவும் தான் அதனை தடுக்கப் போவதில்லை என்றும் கூறியுள்ளார்.

ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியின் வரலாற்றில் பல தலைவர்கள் கட்சியை விட்டு வெளியேறியுள்ள போதிலும் அதனால் கட்சிக்கு எந்த விதமான பாதிப்பும் ஏற்படவில்லை என்றும் அவர் இங்கு கூறியுள்ளார்.



# தென் மாகாண சபையின் ஆட்சி மாறும்?

தென் மாகாண சபையில் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசாங்கத்தை வீழ்த்திவிட்டு ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கமொன்றை அமைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுவதாக அரசியல் வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

ஐ.தே.க. இன் தென் மாகாண சபை உறுப்பினர் விஜேபால ஹெட்டியாராச்சி இது குறித்து கருத்துத் தெரிவிக்கையில்,

ஐ.ம.சு.மு. இன் ஆட்சிக் காலம் முடிந்துவிட்டது. தென் மாகாண சபையின் உறுப்பினர்கள் இருவரும் அமைச்சர்கள் நால்வரும் எதிர்க் கட்சிக்கு வரவுள்ளனர். இன்னும் பலருடன் பேச்சுவார்த்தையில் உள்ளோம். அடுத்து வரும் நாட்களில் அரசாங்கம் வீழ்ச்சியடையும் எனவும் அவர் கூறினார்.

# கோப்புகளைக் காட்டுவது எதிர்விளைவையே ஏற்படுத்தும்

## அமைச்சர் ரெஜிநோல்ட் குரே



அரசாங்கத்திலிருந்து செல்பவர்களின் பைல்களை வைத்து பயங்காட்டும் செயற்பாடு எதிர்வினையாக காட்டுபவர்களையே திருப்பித் தாக்கும் என அமைச்சர் ரெஜிநோல்ட் குரே தெரிவித்தார்.

கொழும்பில் நடைபெற்ற ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் அரசாங்க அமைச்சர்கள் கலந்து கொண்ட ஊடகவியலாளர் சந்திப்பில் ஊடகவியலாளர்களின் கேள்விக்குப் பதிலளிக்கையிலேயே அமைச்சர் இவ்வாறு கூறினார்.

பைல்களைக் காட்டி பயம் காட்டும் செயற்பாடு செல்லுபடியற்றது. ஏனெனில், தவறு செய்கின்றார் எனத் தெரிந்தும் வெளியேறும் வரையில் பைல்களை மறைத்து வைத்திருந்த குற்றத்துக்கு பைல்களை காட்டுபவர் ஆளாக வேண்டி வரும்.

தாங்கள் இவ்வளவு காலமும் அரசாங்கத்துக்கான எதுவித கருத்துக்களையும் தெரிவிக்காது ஒதுங்கியிருந்து விட்டு, ஜனாதிபதி பைல்களை வெளியிடுவதாக கூறியவுடன் அரசாங்கத்துக்கு சார்பாக கருத்துத் தெரிவிக்க வெளியாகியுள்ளீர்கள் என ஊடகவியலாளர் ஒருவர் அமைச்சரிடம் தெரிவித்த போதே அமைச்சர் இதனைக் கூறினார்.

# தூய்மையான அரசியல்வாதிகள் சென்றால் கொள்ளைக்காரர்களே கட்சியில் எஞ்சியிருப்பர்



எதிர்க்கட்சிகளின் ஜனாதிபதி பொது வேட்பாளர் மைத்திரிபால சிறிசேன தூய்மையும் நேர்மையும் கொண்ட அரசியல்வாதி என ஆளும் கட்சியின் மேல் மாகாண சபை உறுப்பினர் ஹிருணிக்கா பிரேமச்சந்திர ஊடகங்களுக்கு தெரிவித்துள்ளார்.

மைத்திரிபால சிறிசேனவும் ராஜித சேனாரத்னவும் தனது தந்தையின் மரணத்தின்போதும் மரணத்தின் பின்னரும் தனது தந்தைக்காக அச்சமின்றி குரல் கொடுத்தவர்கள். அவர்கள் இருவரும் கட்சியை விட்டு சென்று விட்டனர். அவர்கள் மீண்டும் திரும்பி வர மாட்டார்கள் என்பதால், கட்சியில் இருக்கும் ஏனைய நபர்களை பாதுகாக்க கட்சி முன்வர வேண்டும்.

இது எமக்கு பாடத்தை கற்றுக் கொடுக்கின்ற காலம். உண்மையான, தூய்மையான அரசியல்வாதிகள் கட்சியை விட்டும் சென்றால் கட்சியில் ஹெரோயின்காரர்கள், எத்தனோல்காரர்கள், கொள்ளைக்காரர்கள், வியாபாரிகள் மாத்திரமே எஞ்சியிருப்பர் எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# சர்வாதிகாரத்திற்கு எதிரான சக்தியுடன் இணைந்து செயற்பட தயார்

## மாவை சேனாதி ராஜா



வடக்கு - கிழக்கின் இன அழிப்பிற்கு எதிராகவும் அரசியல் உரிமைக்காகவும் போராடி வரும் தமிழ்த் தேசிய கூட்டமைப்பு தென்னிலங்கையிலே இன அடக்குமுறைக்கும் சர்வாதிகாரப் போக்கிற்கும் எதிராக எழுந்துள்ள எழுச்சிமிக்க சக்தியோடு இணைந்து செயற்படுவதற்கு தயாராக இருக்கிறது என்று அக்கூட்டமைப்பின் செயலாளரும் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தலைவரும் யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான மாவை சேனாதிராஜா பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

யாழ்தேவி என்றும் வீதி நிர்மாணிப்பு என்றும் அபிவிருத்தி என்ற பேரிலும் வடக்கு-கிழக்கு தமிழ் மக்களை அடக்கி ஒடுக்கி அடிமைப்படுத்த ஒரு போதும் இடமளிக்க மாட்டோம் என்றும் அவர் கூறினார்.

பாராளுமன்றத்தில் இடம்பெற்ற 2015 ஆம் ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்டத்தின் நிதி அமைச்சு மீதான குழுநிலை விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

# நாட்டில் பாரியளவில் ஊழல் மோசடிகள் இடம்பெறுகின்றன

## அநுரகுமார திஸாநாயக்க



ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவைத் தவிர்ந்த வேறு எவருக்கேனும் வாக்களிக்க முடியும். நாட்டில் பாரியளவில் ஊழல் மோசடிகள், குற்றச் செயல்கள் இடம்பெற்று வருகின்றன. மஹிந்த ராஜபக்ஷ குடும்ப ஆட்சிக்கு முடிவு கட்ட வேண்டும் என ஜே.வி.பி. கட்சியின் தலைவர் அனுரகுமார திஸா நாயக்க தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

மேலும் அங்கு உரையாற்றிய அவர், ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ நீதிமன்றத்தை கட்டுப்படுத்தி வருகிறார். ஜனாதிபதித் தேர்தல் நடத்துவது குறித்த உச்ச நீதிமன்றின் சட்ட விளக்கத்தை ஏற்றுக் கொள்ள முடியாது.

சட்ட சம்பிரதாயங்களை புறந்தள்ளி ஜனாதிபதி மஹிந்த நீதிமன்றக் கட்டமைப்பை கட்டுப்படுத்தியுள்ளார். இந்த ஜனாதிபதித் தேர்தல் சட்டவிரோதமானது. அரசியல் அமைப்பின் அடிப்படையில் மஹிந்த ராஜபஷவினால் மீண்டும் தேர்தலில் போட்டியிட முடியாது. இரண்டாம் தவணைக்காக பதவிப் பிரமாணம் செய்து கொண்டு நான்கு ஆண்டுகளில் ஜனாதிபதித் தேர்தலை நடத்த முடியாது. எனினும் மிகவும் தந்திரமான முறையில் ஜனாதிபதி மஹிந்த உச்ச நீதிமன்றின் சட்ட விளக்கத்தை கோரி பெற்றுக் கொண்டுள்ளார்.

ஜனநாயகம், சுதந்திரம் தொடர்பில் சர்ச்சைகள் எழுந்துள்ளன. நாட்டின் பொருளாதாரம் வீழ்ச்சியடைந்துள்ளது. பெரும் எண்ணிக்கையிலான நாட்டு மக்கள் வாழ்க்கையை கொண்டு நடத்த முடியாத நிலைக்கு தள்ளப்பட்டுள்ளனர் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

# மைத்திரி அழைத்துள்ளார்

## பொதுபல சேனா



ஜனாதிபதித் தேர்தல் தொடர்பான கலந்துரையாடல் ஒன்றிற்கு எதிர்க்கட்சிகளின் பொது வேட்பாளர் மைத்திரிபால சிறிசேன தமக்கு அழைப்பு விடுத்துள்ளதாக பொதுபல சேனா அமைப்பு தெரிவித்துள்ளது.

சில வேண்டுகோள்கள் தொடர்பில் தாம் எதிர்க்கட்சிகளின் பொது வேட்பாளருடன் கலந்துரையாடல்களில் ஈடுபடவுள்ளதாக பொதுபல சேனா அமைப்பின் பொதுச் செயலாளர் கலகொட அத்தே ஞானசார தேரர் தெரிவித்துள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேசம் காண்போம் நேசமுடன் உடன்பாடு வளர்ப்போம் உறுதியுடன்

## இலங்கை ஜமாஅத்தே இஸ்லாமியின் தேசிய மாநாட்டில் பிரகடனம்



சமூகங்கள் மற்றும் நாகரிகங்களுக்கிடையிலான புரிந்துணர்வு, கலந்துரையாடல் என்பவற்றை அதிகமாக வலியுறுத்தும் ஒரு காலப் பகுதியில் நாம் இன்று வாழ்ந்து கொண்டிருக்கிறோம். அந்தப் புரிந்துணர்வு முன்னெப்போதும் இல்லாதளவு நலிவுற்றிருப்பதே இதற்குக் காரணம். அதனால் உலக அமைதி கேள்விக் குறியாக மாறியுள்ளது. ஐ.நா. விசேடமாகவும் அமெரிக்கா போன்ற வல்லரசுகள் குறிப்பாகவும் உலக அமைதியைப் பாதுகாக்கத் தவறிவிட்டன. தீவிரவாதங்கள், வன்முறைக்ள் உலக அரங்கில் செல்வாக்குச் செலுத்துகின்றன. மதங்கள் மீதான நம்பிக்கைகள் மக்கள் மனங்களில் சரிந்து கொண்டிருக்கின்றன. எமது நாட்டில் போர்ச் சப்தம் ஓய்ந்து சகவாழ்வும் நல்லிணக்கமும் அபிவிருத்தியும் நல்லாட்சியும் பேசுபொருளாக மாறியிருக்கின்றன. இது சிதைந்து போயிருக்கும் உலக அரங்கில் எமது தேசத்துக்குக் கிடைத்திருக்கும் ஓர் அரிய வாய்ப்பு என்றே கொள்ளப்பட வேண்டும் என இலங்கை ஜமாஅத்தே இஸ்லாமியின் தலைவர் ரஷீத் ஹஜ்ஜுல் அக்பர் தெரிவித்தார்.

இலங்கை ஜமாஅத்தே இஸ்லாமியின் 62 ஆவது வருடாந்த தேசிய மாநாடு கடந்த 15.11.2014 ஆம் திகதி சாய்ந்தமருது லீ மரிடியன் வரவேற்பு மண்டபத்தில் நடைபெற்ற போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இலங்கை ஜமாஅத்தே இஸ்லாமியின் தலைவர் ரஷீத் ஹஜ்ஜுல் அக்பரின் தலைமையில் நடைபெற்ற இந்த வருடாந்த தேசிய மாநாட்டில் ஜமாஅத்தே இஸ்லாமியின் பகுதிகள் மற்றும் துணை அமைப்புகளின் கடந்த வருட செயற்பாடுகள் குறித்து அறிக்கைகள் சமர்ப்பிக்கப்பட்டதோடு, அங்கத்தவர்களைத் தகைமைப்படுத்தும் நிகழ்ச்சி, ஆளுமை விருத்தி நிகழ்ச்சி, தலைவர் தெரிவு, மஜ்லிஸுஷ் ஷுரா தெரிவு, பிராந்திய நாஸிம்கள் தெரிவு, பிரமுகர் அமர்வு மற்றும் கலை, கலாசார நிகழ்ச்சிகளும் இடம்பெற்றன. இந்நிகழ்வில், மாநாட்டு பிரகடனம் ஒன்றும் வெளியிட்டு வைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. அதில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

01. யுத்த சூழ்நிலையை இல்லாமல் செய்து பயங்கரவாதத்தை முற்றாக துடைத்துவிட்ட மகிமைக்கு அண்மைக்கால உலகில் சிறந்த எடுத்துக் காட்டாக விளங்கும் ஒரே நாடு நம் நாடு என்ற வகையிலும் நல்லாட்சி, அபிவிருத்தி, தார்மீகம் போன்றவற்றில் முன்னேறுவதற்கான அனைத்து வாய்ப்புகளும் அமையப் பெற்ற ஒரு சூழ்நிலை எமக்கு முன்னால் நெருக்கமாக இருக்கிறது என்ற வகையிலும் தேசத்தை கட்டியெழுப்பும் பணியில் நல[illegible] அனைவரையும் ஒன்றிணைத்து சிறுபான்மை சமூகங்களையும் அரவணைத்து, நிபுணத்துவங்களைக் கூட்டிணைத்து செயற்பட வேண்டும் என இலங்கை அரசை மாநாடு வினயமாக வேண்டி நிற்கின்றது.

02. தேசத்தை கட்டியெழுப்பும் பணியில் மதங்களினதும் அவை போதிக்கும் விழுமியங்களினதும் வகிபாகத்தைப் புறக்கணித்து செயற்படுகின்ற சூழல் உருவாகுவதை அனைத்து மதங்களினதும் போதகர்கள் மற்றும் தலைவர்கள் கண்டிக்க வேண்டும் எனவும் மதங்களால் மட்டுமே மனிதர்களைப் புனிதர்களாக மாற்றலாம் என்ற எண்ணக்கரு அழிந்து விடாமல் அவர்கள் பாதுகாக்க வேண்டும் எனவும் மாநாடு வேண்டுகோள் விடுக்கின்றது.

03. காலநிலை, இட அமைவு, நேர வலயம், இயற்கை வளங்கள், இயற்கையான சுபாவம் கொண்ட மனிதர்கள் எனப் பல்வேறு சிறப்புக் கூறுகள் அரிதாகக் கூட்டிணைந்திருக்கும் ஓர் அற்புதமான தேசம் இலங்கை என்ற வகையில், இலங்கையை ஆசியாவின் அதிசயமாக மட்டுமல்ல, உலகின் அதிசயமாகவே பரிணமிக்கச் செய்யலாம். அத்தகையதொரு தேசத்தின் சிற்பிகளை இன, மத, கட்சி வேறுபாடுகளுக்கு அப்பால் சென்று இனம் காண்பதும் அந்த தேச [illegible] மகிமை உயர்ந்து ஓங்க வேண்டும் என்றும் மாநாடு தனது தேசப்பற்றை பிரகடனம் செய்கிறது.

04. நான்கு உலக மதங்கள், இரண்டே மொழிகள் என வேறுபாடுகளின் எண்ணிக்கை குறைந்து காணப்படும் எமது நாட்டில், முரண்பாட்டுச் சூழலை வளர்த்து நாட்டை சின்னாபின்னப்படுத்தாமல் உடன்பாட்டுச் சூழலை உருவாக்குவதன் மூலம், நம்பிக்கைகளை அதிகரிக்கச் செய்து வினைத் திறனையும் விளைதிறனையும் கூட்டுவதற்கு அரச மற்றும் அரச சார்பற்ற அனைத்து சக்திகளும் அயராது உழைக்க வேண்டுமென மாநாடு கேட்டுக் கொள்கிறது.

05. முஸ்லிம் சமூகம் பல்வேறு சோதனைகளுக்கு முகம் கொடுத்திருக்கும் ஒரு சூழலில் நாம் இன்று வாழ்கிறோம். முஸ்லிம் சமூகம் எதிர்கொள்ளும் உள், வெளிப் பிரச்சினைகள் பல. இந்நிலையில் முஸ்லிம் சமூகத்தின் தலைவர்கள், பொறுப்பாளர்கள், புத்திஜீவிகள், உலமாக்கள் அனைவரும் சமூகத்தை வழிநடத்தும் தமது பொறுப்பை செவ்வனே உணர வேண்டும். தமக்கிடையே இருக்கும் வேறுபாடுகளைப் பெரிதுபடுத்தாமல், உலக இலாபங்களை முற்படுத்தாமல் அல்லாஹ்வின் திருப்தியை நாடி உடன்பாட்டுப் புள்ளிகளில் ஒன்றிணைந்து செயற்பட முன்வர வேண்டும் எனவும் மாநாடு சம்பந்தப்பட்டவர்களை பணிவாக வேண்டிக் கொள்கிறது.

06. மத்திய கிழக்கில் இன்று ஏற்பட்டுள்ள கொந்தளிப்பான சூழ்நிலை தொடர்பில் மாநாடு தனது ஆழ்ந்த கவலையை வெளிப்படுத்துகின்றது. இஸ்லாத்தின் எதிரிகளது சதிவலைகளில் சிக்கி இஸ்லாத்தின் பெயரால் வன்முறைகளை வளர்க்கும் கலாசாரத்தை வளர்ப்பதற்கு முஸ்லிம் சமூகத்தின் இளைஞர்கள் துணைபோகக் கூடாது என்றும் மாநாடு வேண்டுகோள் விடுக்கின்றது.

07. அதேநேரம் பலஸ்தீன் உட்பட, உலகில் ஆக்கிரமிக்கப்பட்டுள்ள அனைத்துப் பூமிகளும் அவற்றின் பூர்வீக மக்களிடம் ஒப்படைக்கப்பட வேண்டும். அந்தப் பூமிகளில் அடக்கி ஒடுக்கப்பட்டுள்ள மக்களின் உரிமைகளையும் சுதந்திரத்தையும் பாதுகாக்க சர்வதேச சமூகம் ஒன்றுபட வேண்டும் என்று மாநாடு கேட்டுக் கொள்வதோடு, அவ்வாறு அடக்கி ஒடுக்கப்பட்ட மக்களின் விடுதலைக்காக மாநாடு பிரார்த்திக்கின்றது.

08. கொலைகள், ஆள் கடத்தல்கள், இலஞ்சம், ஊழல், மோசடி, நிர்வாக சீர்கேடுகள், பணிப் புறக்கணிப்புகள், மாணவர், தொழிலாளர் ஆர்ப்பாட்டங்கள், சமூகங்களுக்கிடையிலான விரிசல்கள் என்பன தொடர்வதையிட்டு மாநாடு ஆழ்ந்த கவலையை வெளியிடுகிறது. அண்மையில் நாட்டை உசுப்பிவிட்ட கொஸ்லாந்த மண்சரிவு அனர்த்தம் எம்மை சோகத்தில் ஆழ்த்தின. இயற்கையாகவோ, செயற்கையாகவோ துயரங்கள் இந்த நாட்டைத் தொடராதிருக்க நாம் அல்லாஹ் விடம் இருகரமேந்தி பிரார்த்திக்கின்றோம். அதேவேளை, சம்பந்தப்பட்ட தரப்பினர் இத்தகைய துயரங்களிலிருந்து மக்களைப் பாதுகாக்கும் முயற்சிகளில் மும்முரமாக ஈடுபட வேண்டும் என மாநாடு வேண்டுகோள் விடுக்கின்றது.





09. இறுதியாக, நாட்டின் ஒவ்வொரு மைந்தனும் ஒவ்வோர் அதிகாரியும் ஒவ்வொரு தலைவனும் இதய சுத்தியோடு செயற்பட்டு எமது தாய் நாட்டை நன்மைகளின் பக்கம் இட்டுச் செல்வதற்குப் பங்களிப்புச் செய்பவர்களாகவும் அதன் வளமான, சுபிட்சமான எதிர்காலத்திற்காக உழைப்பவர்களாகவும் மாறவேண்டும் என்ற ஆவலை மாநாடு வெளிப்படுத்துகின்றது. நீண்ட வரலாற்றுப் பாரம்பரியத்தைக் கொண்ட ஒரு தேசம் அதன் வரலாற்று மகிமைகளை கௌரவித்து முன்னேறுவதற்கான பாடங்களை கற்றுக் கொள்வதில் கவனம் செலுத்த வேண்டும் எனவும் மாநாடு தனது எதிர்பார்ப்பை வெளிப்படுத்துகின்றது. தூய தேசம் காண விரும்பும் சக்திகளுக்கு மாநாடு தனது முழுமையான ஆதரவை வழங்குகின்றது.

தேசிய மாநாட்டில் ஓர் அங்கமாக நடைபெற்ற பிரமுகர் அமர்வில், விசேட அதிதிகளாக அம்பாறை மற்றும் மட்டக்களப்பு மாவட்டங்களைச் சேர்ந்த சிரேஷ்ட அரச அதிகாரிகள், இராணுவம் மற்றும் பொலிஸ் உயரதிகாரிகளும் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எங்கள் தேசம்

மலர் : 13 இதழ் : 22 டிசம்பர் 01- 14

77, ஸ்ரீ வஜிரஞான மாவத்தை, கொழும்பு- 09, இலங்கை
தொலைபேசி: 0112 698771 / 0777 412561, பெக்ஸ்: 0112 686030,
மின்னஞ்சல்: engalthesamnews@gmail.com

# மக்கள் கைகளில் இறைமை

அரசு என்பது எல்லைகளைக் கொண்ட நாடு, அங்குள்ள மக்கள், அவர்களை ஆளும் அரசாங்கம், அந்த அரசாங்கத்தில் உள்ள உச்ச அதிகாரம் என்ற நான்கையும் கொண்டது என்று அரசறிவியலாளர்கள் விளக்கியுள்ளனர். பிரதிநிதித்துவ ஜனநாயக முறையில் இறைமை என்ற உச்ச அதிகாரம் மக்களின் வாக்குகளால் தெரிவு செய்யப்பட்ட அரசாங்கத்திடம் குறிப்பிட்ட காலத்துக்கு வழங்கப்படுகிறது.

நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறை நிலவும் நாடுகளில் இறைமையின் முக்கிய பகுதியான நிறைவேற்று நிர்வாகம் ஜனாதிபதியின் கையிலேயுள்ளது. சட்டமியற்றும் பாராளுமன்றமும் நிறைவேற்று நிர்வாகமும் நீதி பாரிபாலனமும் பிரிக்கப்பட்டிருந்தாலும் நிறைவேற்று அதிகார முறையில் நடைமுறையில் அது ஜனாதிபதியிடம் குவிக்கப்பட்ட ஒன்றாகவே காணப்படுகிறது. பிரதம நீதியரசர் முதல் நீதிபதிகளை நியமிக்கும் அதிகாரம், கபினட்டின் தலைவர் என்ற வகையில் நிர்வாக அதிகாரமும் சட்டமூலங்களைக் கொண்டு வந்து தனது கட்சி பாராளுமன்ற உறுப்பினரின் மூலம் நிறைவேற்றி சட்ட ஆக்கத்தில் செல்வாக்குச் செலுத்தும் அதிகாரமும் ஜனாதிபதியிடம் குவிக்கப்பட்டுள்ளன.

இந்நிலையில் யாப்பின்படி ஆறு வருடங்களுக்கு ஒரு முறை மக்களின் கைகளில் வரும் இறைமைதான் ஜனாதிபதி ஒருவரைத் தெரிவு செய்யும் அதிகாரம். அதனை புத்திஜீவியான வாக்காளர்களாய் நின்று புள்ளடி மூலம் பயன்படுத்தும் மக்கள் கூட்டமே எந்த நாட்டிலும் வெற்றிகரமான ஜனநாயகத்தின் அடிப்படையாகும். ஒருவரை ஜனாதிபதியாகத் தெரிவு செய்து விட்டால் யாப்பின் ஏற்பாடுகளின்படி அவரை பதவி நீக்கம் செய்வது மிகவும் கடினமான அல்லது நடைமுறையில் சாத்தியமில்லாத ஒரு விடயம். பாராளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பொரும்பான்மை பெற்று மக்கள் வாக்கெடுப்புக்குச் செல்லும் அரசியல் குற்றப் பிரேரணை நடைமுறை ஒரு ஜனாதிபதியைப் பதவி விலக்க முடியாது என்ற அளவுக்கு கடினமாக உள்ளது.

அவ்வாறாயின் ஜனாதிபத் தேர்தல் ஒன்றுதான் அதற்கான சந்தர்ப்பம். இன்றைய ஜனாதிபதி மூன்றாவது தடவை பதவிக்காக அரசியல் யாப்பில் 18 ஆவது திருத்தத்தை கொண்டு வரும் முயற்சியில் பாராளுமன்றத்தைப் பயன்படுத்தியமையும் யாப்பு ரீதியான பிரச்சினை வந்தபோது, தான் நியமித்த பிரதம நீதியரசரிடம் விளக்கம் பெற்றுச் சாதித்ததையும் கண்டோம். 2005 இல் மிகக் குறைந்த பெரும்பான்மையுடன் தெரிவு செய்யப்பட்டாலும் இந்த நாட்டில் புரையோடியிருந்த யுத்தத்தை முடிவுக்கு கொண்டு வந்து வரலாற்று நாயகனாக மஹிந்த முத்திரை பதித்தார்.

இரண்டாவது தடவை யுத்த வெற்றியின் கதாநாயகனாக நின்று இலகுவாக ஜனாதிபதித் தேர்தலில் வெற்றி பெற்றாலும் இந்தியாவுக்கு வாக்களித்தபடி 13 ஆவது திருத்தத்தை அமுல் நடத்தவோ, தமிழ் மக்களுக்கு வாக்களித்தபடி இனப் பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காணவோ இல்லை. இலங்கையில் இனிமேல் நாட்டுப் பற்றுள்ளோர், நாட்டுப் பற்றற்றோர் என்ற இரு இனங்களேயுண்டு என்று உரத்துக் கூறினாலும் வரலாற்றில் மிகக் கூடுதலாக இன முறுகல்கள், பள்ளிவாசல் உடைப்புகள், இனக் கலவரங்கள், தீ வைப்புகள் இடம்பெற்ற ஆட்சியாகவே அதனைக் காண முடிந்தது. கிறிஸ்தவ தேவாலயங்கள் இந்து கோயில்கள் இடிக்கப்பட்ட, வடக்கு–கிழக்கு மக்களின் பரம்பரைக் காணிகள் இராணுவத்துக்கு தாரை வார்த்துக் கொடுக்கப்பட்ட நிலைமை களைத்தான் கண்டோம். நாட்டில் இந்த அளவு இன முரண்பாடுகள் தோன்றினாலும் அதனை யார் செய்தார்கள் என்று தெரிந்தும் அவற்றுக்கான வீடியோ சாட்சியங்கள் கூட இருந்தும் இதுவரையும் ஒருவரும் கைது செய்யப்படவோ, விசாரிக்கப்படவோ இல்லை என்ற ஆதங்கத்துடன் சிறுபான்மையினர் காலம் தள்ளும் ஓர் ஆட்சியைத்தான் கண்டோம். இந்நிலையில் இறைமையைப் பயன்படுத்தும் அதிகாரத்தை தற்காலிகமாக பெற்றுள்ள மக்கள் அதனை எவ்வாறு பயன்படுத்த வேண்டும் என்பதை சிந்திக்க வேண்டும்.

# சர்வதேச பலஸ்தீன் ஒருமைப்பாட்டு தினம்

ஒலுவில் இஸட். அப்துர் ரஹ்மான்

*பலஸ்தீன் என்றாலே நினைவுக்கு வருவது பாவப்பட்ட மக்களுள்ள பிரதேசம் என்பதாகும். ஆனால் அது பலப்படுத்தப்பட்ட, தூய்மைப்படுத்தப்பட்ட முஸ்லிம்களைக் கொண்ட புனித பூமியாகும். ஏனெனில், பலஸ்தீனில் மக்களை நேர்வழிப்படுத்தும் இறைத்தூதர்கள் பலர் வாழ்ந்தார்கள். இந்த வகையில் இப்பூமி இறைவனின் அருள் நிறைந்ததும் வரலாறுமிக்கதுமாகும்.*

*சுமார் 1200 வருடங்கள் முஸ்லிம்களால் ஆளப்பட்ட பலஸ்தீன் பிரித்தானியர்களால் 1918-1948 வரை ஆளப்பட்டது. பின்பு 1948 மே 14 இல் சியோனிஸவாதிகள் இஸ்ரேல் நாட்டை பிரகடனப்படுத்தினர். 1967 ஜூன் மாதம் 330000 பலஸ்தீனர்கள் சொந்த மண்ணிலிருந்து விரட்டியடிக்கப்பட்டனர். 1969 ஆகஸ்ட் மாதம் 21 ஆம் திகதி மஸ்ஜிதுல் அக்ஸா பள்ளிவாசல் இஸ்ரேலர்களால் எரிக்கப்பட்டது. இவ்வாறு பலஸ்தீன் மக்களுக்கு எதிரான அநீதிகள் இஸ்ரேலர்களால் மேற்கொள்ளப்பட்டதால் பலஸ்தீனில் போராட்ட இயக்கங்கள் தோன்றின. இதனடிப்படையில் 1957 ஆம் ஆண்டு அல் பதாஹ் இயக்கம் தொடங்கப்பட்டது. பின் 1964 ஆம் ஆண்டு பலஸ்தீன் விடுதலை இயக்கம் (PLO) தோற்றுவிக்கப்பட்டது. இதேபோன்று மறைமுகமாக இயங்கிய ஹமாஸ் இயக்கம் 1988 ஆம் ஆண்டு பகிரங்கமாக இயங்கத் தொடங்கியது. இவர்களின் போராட்டங்களால் சர்வதேசம் விழித்துக் கொண்டது என்பது உண்மை.*

*ஏனைய நாடுகளிலிருந்து விரட்டியடிக்கப்பட்டு பலஸ்தீனில் வந்து குடியேறிய யூதர்களுக்கு பிரித்தானியாவின் உதவி ஒரு யூத நாட்டை பலஸ்தீனில் உருவாக்க உதவியது. இதனால் அப்போது ஐக்கிய நாடுகள் சபை ஆரம்பித்து இரண்டு ஆண்டுகளின் பின்னர், அதாவது 1947 நவம்பர் 29 ஆம் திகதி, ஐக்கிய நாடுகள் அமைப்பின் பொதுச் சபை அதன் 181 வது தீர்மானத்தை வெளியிட்டது. அதில் பலஸ்தீன் நாடு பின்வருமாறு பிரிக்கப்பட்டது 54% யூதர்களுக்கும் 45% பலஸ்தீன் முஸ்லிம்களுக்கும் வழங்கப்படும். 1% சர்வதேச நிர்வாகத்தின் கீழ் இயங்கும். இத்தீர்மானமானது பலஸ்தீன் மக்களுக்கு மிகவும் அநீதியாக காணப்பட்டாலும் இதனை ஏற்றுக்கொள்வதை தவிர பலஸ்தீனர்களுக்கு வேறு வழி இருக்கவில்லை. காரணம் பிரித்தானியா, அமெரிக்கா போன்ற நாடுகள் இஸ்ரேலர்களுக்கு மிகவும் உதவின.*

*ஐக்கிய நாடுகள் சபை மேற்படி தீர்மானத்தை எடுத்தபோதும் இஸ்ரேல் இதனை கருத்தில் கொள்ளாது 1948 ஆம் ஆண்டு பலஸ்தீனின் மேற்கு ஜெருசலத்தை கைப்பற்றியது. பின் 1967ஆம் ஆண்டு (06 நாள் யுத்தத்தின் பின்) பலஸ்தீனின் கிழக்கு ஜெருசலத்தை கைப்பற்றியது. இங்குதான் முஸ்லிம்களின் மூன்றாவது பள்ளிவாசலான பைத்துல் அக்ஸா காணப்படுவது குறிப்பிடத்தக்கது. பின்பு 1980.07.30 ஆம் திகதி இஸ்ரேல் பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட அடிப்படை சட்டத்துக்கு அமைய ஜெருசலம் இஸ்ரேலின் பிரிக்கப்படாத தலைநகரம் எனப் பிரகடனம் செய்யப்பட்டது. ஆனால் இத்தீர்மானத்தை ஐக்கிய நாடுகள் பாதுகாப்புச் சபை நிராகரித்தது. இருந்தபோதிலும் யூதர்கள் பலஸ்தீனர்களுக்கு தொடர்ந்தும் தொல்லை கொடுத்துக் கொண்டே இருக்கின்றனர்.*

*பலஸ்தீனர்களுக்கு இஸ்ரேலர்களால் நிகழ்த்தப்படும் அநீதிகளையும் அதனால் அம்மக்கள் படும் துயரங்களையும் உலக நாடுகள் புரிந்து கொள்ளும் பொருட்டு ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச் சபை 1977 டிசம்பர் மாதம் சர்வதேச பலஸ்தீன் ஒருமைப்பாட்டு தினத்தை ஒவ்வோர் ஆண்டும் நவம்பர் 29 ஆம் திகதி அனுஷ்டிப்பது என தீர்மானம் மேற்கொண்டது. இதற்கமைய இத்தினம் முதல் முதலாக 1978 நவம்பர் 29 ஆம் திகதி அனுஷ்டிக்கப்பட்டது. இவ்வாறு இத்தினம் கடந்த 36 ஆண்டுகளாக அனுஷ்டிக்கப்பட்டு வந்தாலும் அவை வெறும் எழுத்துக்களாகவும் பேச்சுக்களாகவுமே காணப்பட்டன. பலஸ்தீனர்களின் கவலைகள் போக்கப்படவுமில்லை; இஸ்ரேலர்களின் அநியாயங்கள் குறையவும் இல்லை என்பது பகிரங்கமான உண்மையாகும்.*

*இஸ்ரேலால் பல யுத்தங்கள் பலஸ்தீன் மக்களுக்கு எதிராக மேற்கொள்ளப்பட்டுள்ளன. 2014 ஆம் ஆண்டு ஜூலை மாதம் இஸ்ரேல்-பலஸ்தீன் அப்பாவி மக்கள் மீது மேற்கொண்ட தாக்குதல் குறிப்பிடத்தக்கது. 360 சதுர பரப்பளவு கொண்ட காஸாப் பகுதி மீது 8600 இஸ்ரேல் இராணுவத்தை பயன்படுத்தியது. இதனால் சுமார் 2000 அப்பாவிப் பொதுமக்கள் கொல்லப்பட்டனர். 6000 பேர் காயப்பட்டனர். 3 இலட்சம் மக்கள் அகதிகளாக்கப்பட்டனர். 10000 வீடுகள் சேதமாக்கப்பட்டன. 160 பள்ளிவாசல்கள் அழிக்கப்பட்டன. இதற்கு எதிராக இஸ்ரேலுக்கு எந்த நடவடிக்கையும் சர்வதேசம் மேற்கொள்ளவில்லை. ஆனால் ஐக்கிய நாடுகள் சபை இந்த யுத்தம் பற்றி சர்வதேச விசாரணையை மேற்கொள்ள முடிவு எடுத்தும் அதனை செயற்படுத்தவில்லை. இது 2014 ஆம் ஆண்டின் சர்வதேச பலஸ்தீன் ஒருமைப்பாட்டு தினத்திற்கு கிடைத்த துக்கமான பரிசாகும்.*

*இருந்தபோதிலும் 2014 ஆம் ஆண்டில் சர்வதேச பலஸ்தீன் ஒருமைப்பாட்டு தினத்துக்கு சந்தோஷமான பரிசும் கிடைத்துள்ளது. அதாவது, ஐரோப்பிய நாடான சுவீடன் பலஸ்தீனத்தை அங்கீகரித்துள்ளதுடன் ஐரோப்பிய ஒன்றியமும் அங்கீகரித்துள்ளது. இது பலஸ்தீனுக்கு சாதகமான விளைவுகளை ஏற்படுத்துமென நம்பப்படுகிறது. மிகவும் கவலைக்குரிய விடயம் என்னவென்றால் தற்போது (கட்டுரையை எழுதும்போது) இஸ்ரேல் முஸ்லிம்களின் புனித தலமான மஸ்ஜிதுல் அக்ஸாவை முழுமையாக மூடியுள்ளதுடன் ஜெருசலத்தில் யூதக் குடியேற்றங்களை நிறுத்தப் போவதில்லை என இஸ்ரேலின் வெளிநாட்டு அமைச்சர் லீபமேன் சூளுரைத்துள்ளார். இது பலஸ்தீன் முஸ்லிம்களுக்கு மட்டுமல்ல, உலக முஸ்லிம்கள் அனைவருக்கும் கவலை தரும் விடயமாகும். இருந்தபோதிலும் முஸ்லிம் நாடுகள் மௌனமாக இருப்பது வேதனையளிக்கிறது.*

*பலஸ்தீனின் உரிமைகளை வென்றெடுக்க முஸ்லிம் சமூகம் ஒன்றுபட வேண்டும். அதேபோன்று ஏனைய மனித நேயமுள்ள நாடுகளும் நீதியின் பால் முடிவுகளை எடுக்க வேண்டும். இதற்கு 2014 ஆம் ஆண்டின் சர்வதேச பலஸ்தீன் ஒருமைப்பாட்டு தினம் வழிவகுக்க வேண்டும் இந்நிலையில் 1948 ஆம் ஆண்டு இஹ்வானுல் முஸ்லிமீன் அமைப்பின் ஸ்தாபகர் ஹஸனுல் பன்னாஹ் (றஹ்) அவர்கள் உலக முஸ்லிம்கள் அனைவருக்குமாக தனது குத்பாப் பேருரையில் விடுத்த அறிவிரையை ஞாபகப்படுத்துவது பொருத்தமாகும். ஸ்பெய்னை இழந்துவிட்ட முஸ்லிம் சமூகம் பலஸ்தீனையும் இழந்துவிடக் கூடாது.*

➡16

எங்கள் தேசம் சந்தா விபரம்

உள்நாடு
தனிப்பிரதி: 30.00
வருட சந்தா: 1200.00
ஆறு மாதங்கள்: 600.00

வெளிநாடு
இந்தியா, பாகிஸ்தான், மாலைதீவு, மலேஷியா, சிங்கப்பூர்: 3600.00
மத்திய கிழக்கு நாடுகள்: 3750.00
அவுஸ்திரேலியா, தென்கொரியா: 4700.00
இங்கிலாந்து: 5750.00, அமெரிக்கா, கனடா: 6900.00, ஜப்பான்: 4800.00

எங்கள் தேசத்துக்கு காசுக்கட்டளை அனுப்ப விரும்புபவர்கள்: காசுக்கட்டளை பெறுவோர், Engal Thesam, தபால் நிலையம் Dematagoda எனவும் குறிப்பிட்டு அனுப்பவும். முகவரி: 77, Dematagoda Road, Colombo - 09.
Accont Name: SLJEI | Bank Account No: BOC 372132 | Commercial Bank: 1320009182

தொடர்புகளுக்கு: 077 2992220

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# முஸ்லிம் கட்சிகளின் அரசியல் தெரிவு சமூக நலன் பேணுமா?





இலங்கையில் தேர்தல் இல்லாத ஆண்டே இல்லை என்றளவுக்கு தேர்தல்கள் நடத்தப்பட்டன. இதனால் கடந்த 2010 இல் நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலின் பின்னர் தேர்தல் என்றால் மக்களுக்கு ஒரு வகை பிடிப்பின்மை காணப்பட்டது. இதனை கடந்த காலங்களில் நடைபெற்ற தேர்தல்களில் வாக்களிப்பு வீதத்தை எடுத்து நோக்கும்போது தெளிவாக விளங்கிக் கொள்ள முடியும்.

இலங்கை ஜனநாயக சோஸலிசக் குடியரசின் 7 ஆவது ஜனாதிபதித் தேர்தலுக்கு அறிவிப்பு விடுக்கப்பட்டதும் ஒரு விசித்திரமான தேர்தல் உந்துதல் நாட்டில் களை கட்டியிருக்கிறது. அது ஜனாதிபதித் தேர்தல் ஒன்றுக்கான அறிவிப்பு என்பதாலோ என்னவோ அவ்வாறானதொரு தேர்தல் களை கட்டியிருக்கிறது. இதற்கு இந்நாட்டு மக்கள், ஒன்றில் ஆட்சி மாற்றத்தையோ அல்லது அரசியல் மாற்றத்தையோ எதிர்பாக்கிறார்கள் என்பதையே இது எடுத்துக் காட்டுகிறது.

ஜனாதிபதித் தேர்தல் அறிவிக்கப்பட்டதைத் தொடர்ந்து நம்ப முடியாத தடாலடி அரசியல் மாற்றங்களும் நிகழ்ந்து வருகின்றன. 2015 ஜனவரி 8 ஆம் திகதி நடைபெறவுள்ள தேர்தலில் ஆளும் கட்சி சார்பாக மஹிந்த ராஜபக்ஷவும் எதிர்க்கட்சிகளின் பொது வேட்பாளராக மைத்திரிபால சிறிசேனவும் போட்டியிடவுள்ளனர். இவர்கள் இருவருக்குமான, தமக்கான ஆதரவை அரசியல் மட்டங்களிலிருந்து ஈர்த்துக் கொள்வதற்கு பல்வேறு பிரயத்தனங்கள் மேற்கொள்ளப்படுகின்றன. இதன் காரணமாக உள்ளூராட்சி மன்ற பிரதிநிதிகள் தொடர்க்கம் பாராளுமன்ற பிரதிநிதிகள் வரை கட்சித் தாவல்கள் நடந்தேறிய வண்ணமுள்ளன.

இந்நிலையில் சிறுபான்மைக் கட்சிகளின் ஆதரவு யாருக்கு என்பதில் பல்வேறு எதிர்பார்ப்புக்கள் நாட்டில் காணப்படுகின்றன. இதுவரைக்கும் உத்தியோகபூர்வமாக பிரதான சிறுபான்மைக் கட்சிகள் தமது நிலைப்பாடு குறித்து தெரிவிக்கவில்லை. த.தே.கூ. மற்றும் மு.கா. ஆகியன தாம் ஆதரவு வழங்குவது குறித்த நிலைப்பாடுகளை அறிவிப்பதில் காலத்தை தள்ளிப் போட்டு வருகின்றன.

இந்த ஜனாதிபதித் தேர்தலில் சிறுபான்மையினரின் ஆதரவு முக்கியமான ஒன்றாகப் பார்க்கப்படலாம். சிலவேளை சிறுபான்மை மக்களின் வாக்குகளே ஜனாதிபதி வேட்பாளர்களின் வெற்றியைத் தீர்மானிக்கும் சக்தியாகக் கூட இருக்கலாம். ஏலவே யுத்த வெற்றியின் மூலமான ஜனாதிபதி மஹிந்தவின் ஆதரவுத் தளமும் அவரது ஆட்சியில் அதிருப்தி கொண்டுள்ள மைத்திரியின் ஆதரவுத் தளமும் ஏட்டிக்குப் போட்டியான ஆதரவுத் தளத்தை கொண்டிருக்கலாம். இதனடிப்படையில் சிறுபான்மை மக்களின் ஆதரவு, இவர்களது வெற்றியை தீர்மானிக்க கூடியதாக இத்தேர்தல் அமையும்.

ஆனால், சிறுபான்மைக் கட்சிகள் தமது ஆதரவு தொடர்பில் எவ்வகையான முடிவுகளை எடுக்கப்போகிறது என்பதில் தான் அச்சமூகத்தினதும் இந்த நாட்டின் ஆட்சியினதும் எதிர்காலம் தங்கியிருக்கிறது. சிறுபான்மைக் கட்சிகள் இச்சந்தர்ப்பத்தை சரிவரப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும். த.தே.கூ. உம், மு.கா. வும் அண்மையில் சந்திப்புகளை மேற்கொண்டுள்ளன. இரு கட்சிகளும் இணைந்து தமது கோரிக்கைகளை இத்தேர்தலில் முன்வைப்பதினூடாகவும் சிறுபான்மை மக்களின் உரிமைகளை வென்றெடுக்கும் வாய்ப்பை பயன்படுத்திக் கொள்ள முடியும்.

எது, எப்படியாயினும் தமது தனிப்பட்ட கட்சி சார்ந்த நலன்களுக்கு அப்பால் கோரிக்கைகளை முன்வைத்து பெற்றுக் கொள்ள கட்சிகள் முனைய வேண்டும். இக்கால கட்டத்தில் த.தே.கூ. இன் அங்கத்தவர்களின் நிலைப்பாடு ஒரு வகையில் உறுதியாக இருந்தாலும் மு.கா. அங்கத்தவர்களின் நிலைப்பாடு கேள்விக்குறியாக அமைகின்றது.

ஏ. முஹம்மத் பாயிஸ்

மு.கா. அரசோடிருந்த கட்சி என்ற வகையிலும் அது மேற்கொள்ளும் அபிவிருத்தி மற்றும் அரசின் அண்மைய நிலைப்பாடுகளாலும் முஸ்லிம்கள் மத்தியில் ஏற்பட்டுள்ள அதிருப்திகளாலும் இரண்டு துருவங்கள் கட்சிக்குள் காணப்படுவதாக தெரிகிறது. சிலபோது ஜனாதிபதித் தேர்தலில் யாரை ஆதரிக்கின்ற விடயத்தில் கட்சிக்குள் பிளவுகள் ஏற்படலாம் என்ற கருத்தும் முக்கிய அரசியல் வட்டாரங்களிலிருந்து தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை, அ.இ.ம.கா. இல் பிளவுகள் ஏற்பட்டுள்ளன. இக்கட்சியின் தேசிய ஒருங்கிணைப்பாளரும் வன்னி மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினருமான ஹுனைஸ் பாருக் ஐ.தே.க. இல் இணைந்து கொண்டார்.

➡17

# அதிகரித்து வரும் இனவாத செயற்பாடுகளும் அலட்டிக் கொள்ளாத முஸ்லிம் தலைமைகளும்

- முகுசீன் றயீசுத்தீன் -



சுதந்திரத்திற்குப் பின்னர் முதற் தடவையாக இலங்கை முஸ்லிம்களுக்கு சோதனையும் வேதனையும் நிறைந்த காலம் தற்போது உருவாகியிருக்கிறது. பிரித்தானியர் ஆட்சிக் காலத்தில் தேசியவாத ஏகாதிபத்திய எதிர்ப்புப் பிரசாரத்துடன் இணைந்ததாக முஸ்லிம் இன விரோதப் போக்கைக் கடைப்பிடித்து வந்தவர் அநகாரிக தர்மபால.

பிரிட்டிஷ் ஆட்சிக் காலத்திலேயே முஸ்லிம்களுக்கு எதிரான இன உணர்வுகளை பேச்சுக்களாலும் எழுத்துக்களாலும் தூண்டிவிட்ட அநகாரிக தர்மபால, முன்னர் எந்தவொரு வருடமும் இல்லாத வகையில் இவ்வருடம் ஆளுந் தரப்பினாலும் பௌத்த அமைப்புகளாலும் அரசசார்பு ஊடகங்களாலும் அதிகளவு நினைவு கூறப்படுகிறார். இந்தியா ஒருபடி மேல் சென்று அநகாரிக தர்மபாலவிற்கு நினைவு முத்திரை வெளியிட்டு இலங்கை அரசைக் குளிர வைத்துள்ளது.

1915 ஆம் ஆண்டு சிங்கள-முஸ்லிம் கலவரத்தில் பிரித்தானியர் முன்னிலையிலேயே முஸ்லிம்களுக்கு எதிராகக் கட்டவிழ்த்து விடப்பட்ட வன்முறைகள் கட்டுக்கடங்காத ஒரு கட்டத்தைத் தாண்டிய நிலையிலேயே பிரிட்டிஷார் இராணுவச் சட்டத்தைப் பாவித்து அதனை கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வந்திருந்தனர். அப்போது அது நூறு இருண்ட நாட்களாக வரலாற்றில் பதிவு பெற்றது.

நாட்டில் விரும்பிய மதத்தைப் பின்பற்றவும் அதனை தனியாகவோ, கூட்டாகவோ, பகிரங்கமாகவோ, அந்தரங்கமாகவோ வழிபடவும் சொந்தக் கலாசாரத்தை அனுபவிக்கவும் அரசியலமைப்பு ரீதியாக உத்தரவாதம் அளிக்கப்பட்டிருந்தும் முஸ்லிம்கள் இன்று தமது சமய, கலாசாரத்தை பின்பற்றுவதற்கு எதிராக போர்க்கொடி தூக்கப்படுகின்றது.

குறிப்பாக, பொதுபல சேனா அமைப்பின் பொதுச் செயலாளர் கலகொட அத்தே ஞானசர தேரர் இத்தகைய செயற்பாடுகளில் பிரதம பாத்திரம் வகிக்கிறார்.

மன்னார், மறிச்சுக்கட்டியில் மீள்குடியேறி வரும் முஸ்லிம்களை அச்சுறுத்தியது முதல் அளுத்கமை ஜூன் வன்முறை மற்றும் அதனை தொடர்ந்தும் முஸ்லிம்களை நிம்மதியாக வாழ விடுவதில்லை என்பது போல் ஞானசார குழுவினர் கங்கணங்கட்டித் திரிகின்றனர். இவர்களையும் இவர்களது இவ்வினவாதப் பேச்சுக்களையும் இனத்துவேஷ செயல்களையும் கட்டுப்படுத்தக் கூடிய ஆட்சியாளர்களோ, சட்டங்களோ இந்த நாட்டில் இருப்பதாகத் தெரியவில்லை.

சுதந்திரத்திற்கு முன்னர் முஸ்லிம்களுக்கு எவ்வளவுதான் அநீதிகள் இழைக்கப்பட்ட போதிலும் 1948 ஆம் ஆண்டு சுதந்திரம் வழங்கப்பட்டபோது முஸ்லிம்கள் எவ்வித நிபந்தனைகளுமின்றியே பெரும் பான்மை சிங்கள ஆட்சியாளர்களோடு கைகோர்த்துக் கொண்டார்கள். அப்போது தமிழர்கள் தெரிவித்த அச்சத்தின் காரணமாகவே சோல்பரி அரசியலமைப்பில் சிறுபான்மையினரான தமிழ், முஸ்லிம்களைப் பாதுகாக்கக் கூடிய 29(2) எனும் உறுப்புரை சேர்க்கப்பட்டு நிபந்தனையுடன் கூடிய சுதந்திரம் வழங்கப்பட்டது. நாட்டின் சுதந்திரத்திற்காகவும் இன ஐக்கியத்திற்காகவும் முஸ்லிம் தலைவர்கள் பலர் ஆளும் கட்சியோடு எப்போதுமே ஓர் இணக்க அரசியலை நடத்தி வந்திருக்கின்றனர்.

குறிப்பாக, சுதந்திரத்திற்குப் பின்னர் TB ஜாயா, டாக்டர் MCM கலீல், சேர். ராஸிக் பரீத், பதியுதீன் மஹ்மூத், எம்.எச்.எம். அஷ்ரப் போன்றோர் அதில் குறிப்பிடத்தக்கவர்கள். இவர்கள் தமிழ், சிங்கள சமூகங்களோடும் நாட்டின் ஆட்சியாளர்களோடும் இணக்கப்பாட்டை ஏற்படுத்திக் கொண்டு தமது சமுதாயத்தின் பாதுகாப்பைப் பேணி அபிலாஷைகளையும் நிறைவேற்ற பாடுபட்டனர். தமது சமுதாய நலன் குறித்த விடயங்களில் இவர்கள் தூரநோக்குச் சிந்தனையோடு காணப்பட்டனர். இதனாலேயே இவர்களை சகல சமுதாயத்தினரும் மதிப்பதுடன் இவர்கள் வரலாறுகளிலும் இடம்பிடித்துக் கொண்டுள்ளனர்.

ஆனால் இன்று முஸ்லிம்கள் இந்த நாட்டில் அநாதரவாக விடப்பட்டிருக்கிறார்கள். கடந்த செப்டெம்பர் 28 ஆம் திகதி கொழும்பில் நடைபெற்ற பொதுபல சேனாவின் மாநாட்டில் புனித அல்குர்ஆனை ஞானசார தேரர் மிகக் கடுமையாக விமர்சித்தார். முழுக்க முழுக்க முஸ்லிம்களுக்கு எதிராகவே கூட்டப்பட்டது போன்ற அக்கூட்டத்திற்கு மியன்மாரில் ரோஹிங்ய முஸ்லிம்களை வகை தொகையின்றி கொன்று குவித்த '969' இயக்கத்தின் தலைவர் அஸின் விராது கலந்து கொண்டார். கடந்த ஆண்டு டைம்ஸ் சஞ்சிகை அஸின் விராது தேரரை பௌத்த பயங்கரவாதியாக சித்திரித்தது.

உலகில் நூறு கோடிக்கும் அதிகமான முஸ்லிம்களும் சுமார் 50 இற்கும் மேற்பட்ட முஸ்லிம் நாடுகளும் இருக்கின்றன. இந்நாடுகள் அனைத்துமே புனித அல்குர்ஆனை ஏற்றுக் கொண்ட மக்களைப் பெரும்பான்மையாகக் கொண்ட நாடுகள் மட்டுமன்றி, உலகம் முழுவதிலுமுள்ள நாடுகளில் புனித அல்குர்ஆனை ஏற்றுக் கொண்டவர்களாக முஸ்லிம்கள் வாழ்கின்றனர்.

➡16

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கால்நடை பண்ணையாளர்களுக்கு வாழ்வாதார உதவிகள்

மன்னார் மாவட்டத்தின் முசலி, மாந்தை மேற்கு, நானாட்டான், அடம்பன், மன்னார் ஆகிய பிரதேச செயலகப் பிரிவுகளைச் சேர்ந்த, தெரிவு செய்யப்பட்ட 27 கால்நடை பண்ணையாளர்களுக்கு வாழ்வாதார உதவிகள் வழங்கி வைக்கும் நிகழ்வு உயிலங்குளம் கால்நடை அபிவிருத்தி திணைக்களத்தில் நடைபெற்றது.

வட மாகாண சபை உறுப்பினர் அ. அஸ்மின் அவர்களின் பன்முகப்படுத்தப்பட்ட நிதியில் இருந்து ஒரு பண்ணையாளருக்கு 10 ஆயிரம் ரூபா வீதம் இரண்டு இலட்சத்து எழுபதாயிரம் ரூபா செலவில் கோழிக் குஞ்சுகள், கோழிக் கூடுகளுக்கான பொருத்துகள், ஆடு மற்றும் சீமெந்து ஆகியன வழங்கி வைக்கப்பட்டன. திணைக்களத்தின் துணைப் பணிப்பாளர் டாக்டர் கேதீஸ்வரி தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் வட மாகாண சபை உறுப்பினர் அ. அஸ்மின் கலந்து கொண்டு பயனாளிகளுக்கு பொருட்களை வழங்கி வைத்தார்.

# கல்முனை பஸ் நிலைய வளாகத்தை சீரமைக்க உடனடி நடவடிக்கை

அஸ்லம் எஸ். மௌலானா



மழை காரணமாக பாதிக்கப்பட்டுள்ள கல்முனை மாநகர பிரதான பஸ் நிலைய வளாகத்தை சீரமைக்க மாநகர முதல்வர் எம். நிஸாம் காரியப்பர் உடனடி நடவடிக்கை எடுக்க கட்டளை பிறப்பித்துள்ளார்.

கடந்த சில நாட்களாக இப்பகுதியில் பெய்து வரும் மழை காரணமாக கல்முனை மாநகர பிரதான பஸ் நிலைய வளாகம் வெகுவாக பாதிக்கப்பட்டுள்ளதுடன், பயணிகளும் பஸ் நிலைய நிர்வாகத்தினரும் பெரும் அசௌகரியங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

இதனை உடனடியாக நிவர்த்தி செய்து தருமாறு முதல்வரிடம் விடுக்கப்பட்ட வேண்டுகோளை அடுத்து அதிகாரிகள் சகிதம் சென்று நிலைமைகளை நேரடியாக ஆராய்ந்த முதல்வர், பஸ் நிலைய வளாகத்தை உடனடியாக சீரமைக்குமாறு பணிப்புரை விடுத்ததுடன் அதற்கு வேண்டிய அறிவுறுத்தல்களையும் வழங்கினார்.

# கிண்ணியா பொது நூலகத்துக்கு நூல்கள் அன்பளிப்பு

கிண்ணியா பொது நூலகத்துக்கு சுமார் ஐம்பதாயிரம் ரூபாய் பெறுமதியான நூல்கள் கிண்ணியா நகர சபை உறுப்பினர் பாஜில் குத்தூஸினால் வழங்கப்பட்டுள்ளன.

இந்நூல்களைக் கையளிக்கும் நிகழ்வு கிண்ணியா பொது நூலக மண்டபத்தில் நடைபெற்றது. கிண்ணியா நகர சபை தவிசாளர் கிண்ணியா பொது நூலகத்தின் பிரதம நூலகரிடம் இந்நூல்களை கையளித்தார்.

கிழக்கு மாகாண வீதி அபிவிருத்தி அமைச்சர் எம்.எஸ். உதுமாலெப்பையிடம் நகர சபை உறுப்பினர் கேட்டுக் கொண்டதற்கிணங்க வழங்கப்பட்ட நிதி மூலமே இந்நூல்கள் கொள்வனவு செய்யப்பட்டுள்ளன.

# ‘பாராளுமன்றத்தில் 50 முத்துக்கள்’ நூல் வெளியிட ஏற்பாடு

களுத்துறை மாவட்ட எழுத்தாளர் ஒன்றியத்தின் செயலாளர் அல் ஹாஜ் எம். பாஸி ஸுபைரினால் ‘பாராளுமன்றத்தில் 50 முத்துக்கள்’ என்ற நூல் மிக விரைவில் பூங்காவனம் பதிப்பகத்தினால் கொழும்பில் வெளியிடப்படவுள்ளது. இலங்கை பாராளுமன்றத்தில் அன்று முதல் இன்று வரை சபாநாயகராக, அமைச்சர்களாக, பாராளுமன்ற உறுப்பினர்களாக இருந்த முஸ்லிம்களைப் பற்றிய அவர்களது சுய விபரங்கள் அடங்கிய தொகுப்பு நூல் வடிவில் வெளியிடப்படவுள்ளது. இந்நூலில் விபரங்கள் இடம்பெற விரும்பும் முன்னாள் எம்பிக்கள், இந்நாள் எம்பிக்கள் தாம் பற்றிய விபரங்களை உடன் அனுப்பி வைக்குமாறு அல்லது தொடர்பு கொள்ளுமாறு நூலாசிரியர் வேண்டுகோள் விடுத்துள்ளார். அல்ஹாஜ் எம். பாஸி ஸுபைர், இல 35, ஸாவியா லேன், மஹகொட, பேருவலை. தொ.பே. இல: 077 6074575 என்ற முகவரியுடன் தொடர்பு கொள்ளுமாறு வேண்டப்படுகின்றனர்.

# கட்டடத்திற்கான அடிக்கல் நடும் நிகழ்வு



ஜனாதிபதியின் 69 ஆவது பிறந்த தினத்தை முன்னிட்டு அட்டாளைச்சேனை அறபா வித்தியாலயத்தில் சுமார் 45 இலட்சம் ரூபா நிதியில் 3 மாடிக் கட்டடத்துக்கான அடிக்கல் நடும் நிகழ்வு வித்தியாலத்தில் இடம்பெற்றது.

பாடசாலை அதிபர் ஏ.எல். எம். பாயில் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில், பிரதம அதிதியாக கிழக்கு மாகாண சபை கல்வி அமைச்சர் விமலவீர திஸாநாயக்க மற்றும் கௌரவ அதிதியாக வீதி அபிவிருத்தி அமைச்சர் எம்.எஸ். உதுமாலெப்பை மற்றும் மாகாண சபை உறுப்பினர் ஏ.எல்.எம். நஸீர், அட்டாளைச்சேனை பிரதேச சபை உறுப்பினரும் அம்பாறை மாவட்ட பொதுப் பணிகள் அமைப்பின் தலைவருமான எஸ்.எல். முனாஸ் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

அறபா வித்தியாலய 3 மாடிக் கட்டடத்துக்கான அடிக்கல்லினை பிரதம அதிதி மற்றும் கௌரவ அதிதிகள் இணைந்து நட்டி வைத்து கட்டட ஆரம்ப பணியை துவக்கி வைத்தனர்.



காத்தான்குடி நவ இலக்கிய மன்றத்தின் 55 ஆவது வருட நிறைவையொட்டி கவிஞர் அப்துல் காதர் லெவ்வை ஞாபகார்த்த இலக்கியப் பெரு விழா காத்தான்குடி ஹிஸ்புல்லாஹ் மண்டபத்தில் நடைபெற்றது. இதில் இடம்பெற்ற நிகழ்வுகளைப் படங்களில் காணலாம்.

ஜுனைத் எம். பஹாத்

# வருடாந்த பரிசளிப்பும் கலை நிகழ்ச்சியும்

‘மீட்ஸ்’ சமூக சேவை அமைப்பு பிரமாண்டமான பரிசளிப்பு மற்றும் கலை விழா நிகழ்ச்சி ஒன்றையும் எதிர்வரும் 2014 டிசம்பர் 24 ஆம் திகதி சனிக்கிழமை தெல்தோட்டை பீலிக்கரை பொது மைதானத்தில் நடத்த ஏற்பாடு செய்துள்ளது.

இதில் பிரதான நிகழ்ச்சிகளாக ஊர் முதியோர்களை கௌரவித்தல், நடைபெற்று முடிந்த பெருநாள் விளையாட்டு போட்டிகளுக்கான பரிசளிப்பு, கிராம பாடசாலை மாணவர்களை ஊக்கப்படுத்துவதற்கான பரிசளிப்பு மற்றும் கலை நிகழ்ச்சி என்பன நடைபெறவுள்ளன.

தெல்தோட்ட பீலிக்கரை இளைஞர்கள் மற்றும் சமூக சேவகர்களினால் ‘மீட்ஸ் பீலிக்கரை’ சமூக சேவை அமைப்பு உருவாக்கப்பட்டது. இவ்வமைப்பு மிக குறுகிய காலத்தில் பல சமூக சேவைகளை வெற்றிகரமாக நிறைவேற்றியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# ‘குரலாகி’ இறுவட்டு வெளியீட்டு விழா



எஸ். ஜனூஸ் எழுதிய ‘குரலாகி’ கவிதை ஒலி, ஒளி இறுவட்டு வெளியீட்டு விழா கொழும்பு தபால் தலைமையக கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் குரலாகி இறுவட்டை நீதி அமைச்சர் ரவூப் ஹக்கீம் வெளியிட்டு வைத்ததுடன் முதற் பிரதியை பிரபல தொழிலதிபர் எஸ்.எம்.எம். சப்ரி பெற்றுக் கொண்டார்.

மணிப்புலவர் மருதூர் ஏ. மஜீத் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் பிரதம அதிதியாக நீதி அமைச்சர் ரவூப் ஹக்கீம் கலந்து கொண்டதுடன், கௌரவ அதிதியாக வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் உனைஸ் பாரூக் மற்றும் மாகாண சபை உறுப்பினர்கள், கலைஞர்கள், எழுத்தாளர்கள், ஊடகவியலாளர்கள், பொதுமக்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

ஷபீக் ஹுஸைன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அரசியல் பார்வை



எம்.எச்.எம். ஹஸன்

# ஜனாதிபதி தேர்தல்

# அதிரடித் திருப்புமுனை

நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறையை இல்லாதொழிக்கும் முயற்சியின் வரலாறு 20 ஆண்டுகளையும் கடந்தது. 1994 இன் ஜனாதிபதித் தேர்தலில் சந்திரிகா பண்டார நாயக்கவின் தேர்தல் விஞ்ஞாபனத்தில் இந்த முன்மொழிவு இருந்தது. 1999 இல் நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலின் போதும் சந்திரிகா இந்த வாக்குறுதியை அளித்திருந்தார். மஹிந்த ராஜபக்ஷ தனது மஹிந்த சிந்தனை வேலைத் திட்டத்தில் நிறைவேற்று ஜனாதிபதி முறையை ஒழிப்பதாக தேர்தல் விஞ்ஞாபனத்தில் குறிப்பிட்டிருந்தார்.

ஜனாதிபதி முறையை நீக்கும் கொள்கையில் படிப்படியாக புத்திஜீவிகள், அரசியல்வாதிகள், பல்கலைக்கழக விரிவுரையாளர்கள், கலைஞர்கள், எழுத்தாளர்கள் மட்டுமன்றி, ஆளுங்கட்சி, எதிர்க்கட்சி எம்பிக்களும் இணையத் தொடங்கவே அந்த அணி பலம் பெற்றது. மாதுலுவாவே சோபித தேரர் இந்த விடயத்தில் காத்திரமான பங்கை ஆற்றினார். பிற்காலத்தில் அதுருலியே ரத்ன தேரர், நல்லாட்சிக்கான அமைப்பு, சரத் பொன்சேகாவின் கட்சி, ஜே.வி.பி. ஹெல உறுமய என்று வித்தியாசமான உள்ளடக்கத்தில் நிறைவேற்று ஜனாதிபதி முறையை ஒழிப்பதில் ஆர்வம் காட்டத் தொடங்கின.

இப்போது அதன் உச்சகட்டமாக ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியின் பொதுச் செயலாளர் மைத்ரிபால சிறிசேன நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறையை ஒழிக்கும் முன்னோடியாக, பொது வேட்பாளராக களமிறங்கியிருப்பது பெரும் துணிச்சலான நடவடிக்கையாகும்; இலங்கை அரசியல் வரலாற்றில் ஒரு திருப்பு முனையாகும். அடுத்த பிரதமர் என்று எதிர்வுகூறப்பட்ட நிலையில் மிக முக்கியமான அமைச்சின் பொறுப்பாளராகவும் கட்சியின் செயலாளராகவும் இருந்தவர் மைத்திரிபால சிறிசேன. கட்சியின் நிறைவேற்று அதிகார ஜனாதிபதியையும் மூன்றில் இரண்டு பலமுள்ள பாராளுமன்றத்தையும் கொண்டுள்ள கட்சியின் செயலாளர் நாட்டின் ஜனநாயக நல்லாட்சி நலனில் அக்கறை கொண்டு இப்படியொரு முடிவுக்கு வந்திருப்பது பலருக்கு நம்ப முடியாததும் அரசுக்கு அதிர்ச்சி தருவதுமான முடிவாக இருக்கும் என்பதில் ஐயமில்லை. அவருடன் கபினட் அமைச்சர்கள், பாராளுமன்ற உறுப்பினர்கள், மாகாண சபை, உள்ளூராட்சி சபை உறுப்பினர்களும் இதே நோக்கில் களமிறங்கத் தயாராக இருக்கின்ற செய்தியும் இந்நாட்டில் நல்லாட்சியைக் கனவு காண்பவர்களுக்கு ஓர் இனிப்பான செய்தியாகவே இருக்கும்.

அதுரலியே ரத்ன தேரரின் முன்னெடுப்பும் சம்பிக்க ரணவக்க, உதய கம்மன்பில ஆகியோரின் இராஜினாமாவும் வசந்த சேனநாயக எம்பியின் கட்சி மாறலும் அரசியல் வானில் நிகழப்போகும் மாற்றங்களுக்குக் கட்டியம் கூறுவதாகவே அமைந்தது. இரண்டு வாரங்களுக்கு முன் பொலன்னறுவையில் நடைபெற்ற ஒரு கூட்டத்தில் அமைச்சர் மைத்திரிபால சிறிசேன தேர்தல் பற்றியும் அதில் ஒருவர் மட்டும் தன்னிச்சையாக எடுக்கும் முடிவின் விபரீதம் பற்றியும் மட்டுமன்றி, பொலன்னறுவை மக்கள் எதற்கும் தயாராக இருப்பதாகவும் கூறியிருந்தார். சென்ற வெள்ளிக்கிழமை காலையில் பத்தரமுல்லையில் நடந்த ஒரு கூட்டத்தில் ஜனாதிபதியின் முன்னிலையிலேயே தான் இதுவரை சுகாதார துறைக்குச் சேவையாற்றினாலும் இனிமேல் முழு நாட்டுக்கும் பணியாற்றப் போவதாகக் கூறியிருந்தார். அன்றியும் நான்கு வருட முடிவில் ஜனாதிபதித் தேர்தல் நடத்தப்பட இருப்பதாக அறிந்தவுடன் இன்று இரண்டு வருடங்கள் எஞ்சியிருக்கும் நிலையில், பொதுமக்களுக்கு வாக்களித்த விடயங்கள் பல நிறைவேற்றப்படாதிருக்கும் நிலையிலும் எதற்காக இப்போது ஒரு ஜனாதிபதித் தேர்தல்? என்று அவர் ஜனாதிபதிக்கே கடிதம் எழுதியிருந்தார். இடதுசாரி அமைச்சர்களும் இதே பாணியில் எதிர்ப்பைத் தெரிவித்திருந்தும் விலகும் முடிவை எடுக்குமளவுக்கு அவர்களுக்கு முதுகெலும்பு இருக்கவில்லை.

மைத்திரிபால சிறிசேனவின் இந்த முடிவுடன் ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி இரு கூறுகளாகப் பிளவுபடும் நிலை தோன்றியுள்ளது. இப்போது சிலரின் பெயர்களே இருந்தாலும் ஜனாதிபதித் தேர்தலுக்கிடையில் பல ஆளுங்கட்சி அமைச்சர்கள் மற்றும் பிரதி அமைச்சர்கள் மைத்திரிபால சிறிசேனவுடன் இணையும் வாய்ப்பு இருப்பதாக கூறப்படுகிறது. 18 வது அரசியல் யாப்பை ஒழித்து, மீண்டும் 17 வது யாப்புத் திருத்தத்தை நடைமுறைப்படுத்தல், வெஸ்ட் மினிஸ்டர் முறையிலான பாராளுமன்ற ஜனநாயக ஆட்சியை ஸ்தாபித்தல் போன்ற முக்கிய மாற்றங்களை தான் ஜனாதிபதியாக வந்து 100 நாட்களில் நிறைவேற்றப் போவதாக மைத்திரிபால இப்போதே அறிவித்துள்ளார்.

ஐக்கிய தேசியக் கட்சி இந்த விடயத்தில் மிகவும் அர்ப்பணிப்புடன், பெருந் தன்மையுடன் நடந்து கொண்டுள்ளது. தனது கட்சியின் தேசியத் தலைவரையும் கட்சியின் யானைச் சின்னத்தையும் விட்டுக் கொடுத்து சுதந்திரக் கட்சியின் செயலாளருக்கு வாக்களிக்கத் தீர்மானித்திருக்கின்றமை 20 வருடங்களாக எதிர்க்கட்சியாக இருக்கும் ஒரு கட்சியிடம் எதிர்பார்க்க முடியாத ஒன்றாகும். ஜனாதிபதித் தேர்தல் முடிந்தகையோடு இப்போதிருக்கும் பாராளுமன்றத்தில் புதிய யாப்புத் திருத்தத்துக்கு மூன்றில் இரண்டு பெரும்பான்மை கிடைக்காதபோது பாராளுமன்றத்தைக் கலைத்து புதிய பாராளுமன்ற யாப்புத் திருத்தத்தை முன்வைக்கும் யோசனையும் இருப்பதாகக் கூறப்பட்டுள்ளது.

எப்படியும் கடந்த ஒரு வருட காலமாக சூடாகப் பேசப்பட்ட ஒரு விடயம் சாதகமான முடிவை எட்டியிருப்பதும் அது அரசாங்கத்தில் அதிர்ச்சியையும் ஆச்சரியத்தையும் ஏற்படுத்தியுள்ளதும் தெரிகிறது. ஜனாதிபதி அடுத்த தேர்தலுக்கான ஏற்பாடுகளைச் செய்யும்படி தேர்தல் ஆணையாளருக்கு உத்தியோகபூர்வமாக அறிவிக்கும் வரை பொது வேட்பாளர் விடயத்தை இரகசியமாக வைத்திருந்தமையும் வேறு பலரின் பெயர்களை ஊடகங்களில் உலாவ விட்டு அரசாங்கத்தைத் திசை திருப்பியமையும் ஒரு முதிர்ச்சியான அரசியல் உத்தியாகவே கருதப்படுகிறது. மைத்திரிபால சிறிசேனதான் பொது வேட்பாளர் என்று தெரிந்திருந்தால் அநேகமாக உடனடி ஜனாதிபதித் தேர்தலுக்குப் போவதில் இருந்து மஹிந்த ராஜபக்ஷ பின்வாங்கியிருக்கவும் கூடும். அதனைத் தொடர்ந்து பல இடர்பாடுகளுக்கு முகம் கொடுக்க வேண்டியேற்பட்டிருக்கும். பின்னர் தேர்தல் நாடகத்தின் காட்சிகள் தலைகீழாக மாறினாலும் மாறும். புத்திசாதுரியமாக இவ்வளவு ஊடகங்களும் துருவித் துருவிக் கேட்கும்போதும் பொய்யைக் கூறாமலும் பிடி கொடுக்காமலும் எதிர்க்கட்சிக் கூட்டணி இம்முறை சிறப்பாகச் சாதித்திருப்பதாகவே தோன்றுகின்றது. இது வெற்றிக்கான முதற் படியாகவும் அமையலாம்.

இந்த முயற்சியில் சந்திரிகா பண்டார நாயக்க திரைமறைவில் பாரிய பணிகளை மேற்கொண்டிருக்கிறார் என்று தெரிகிறது. அவர் எதிர்க்கட்சிகளின் கூட்டணியின் பின்னணியில் இருப்பதால் இன்று இலங்கையின் பிரதான கட்சிகளான ஐ.தே.க. யும் சுதந்திரக் கட்சியும் கூட்டணியமைத்து பொது வேட்பாளராக நிற்குமளவுக்கு விடயங்கள் வெற்றிகரமாக நடந்தேறியுள்ளன. ரணில் விக்கிரமசிங்கவும் சந்திரிகாவும் மைத்திரிபாலவும் வேறு பலரும் மேற்கொண்ட பல சந்திப்புகளின் விளைவாகவே இந்த முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது.

ஏலவே ஜனாதிபதித் தேர்தலின் வன்முறை தெரியத் தொடங்கியுள்ள நிலையில் இன்னும் பல கசப்பான, விரும்பத்தகாத நிகழ்வுகளை எதிர்பார்க்கலாம். ரத்ன தேரரின் சதஹம் செவன விகாரை காடையர்களால் தகர்க்கப்பட்டிருப்பதும் சம்பிக்க ரணவக்கவுக்கு எதிராகக் கூறப்பட்டுள்ள குற்றச்சாட்டும் பொது வேட்பாளர் நடத்திய ஊடகச் சந்திப்புக்கு ஏற்படுத்தப்பட்ட தடைகளும் அங்கு இடம்பெற்ற சீருடைத் தாக்குதல்களும் அடுத்த சில நாட்களில் என்ன நடைபெறப் போகிறது என்பதை படம் பிடித்து காட்டுவதாக அமைகிறது.



> எப்படியும் கடந்த ஒரு வருட காலமாக சூடாகப் பேசப்பட்ட ஒரு விடயம் சாதகமான முடிவை எட்டியிருப்பதும் அது அரசாங்கத்தில் அதிர்ச்சியையும் ஆச்சரியத்தையும் ஏற்படுத்தியுள்ளதும் தெரிகிறது. ஜனாதிபதி அடுத்த தேர்தலுக்கான ஏற்பாடுகளைச் செய்யும்படி தேர்தல் ஆணையாளருக்கு உத்தியோகபூர்வமாக அறிவிக்கும் வரை பொது வேட்பாளர் விடயத்தை இரகசியமாக வைத்திருந்தமையும் வேறு பலரின் பெயர்களை ஊடகங்களில் உலாவவிட்டு அரசாங்கத்தைத் திசை திருப்பியமையும் ஒரு முதிர்ச்சியான அரசியல் உத்தியாகவே கருதப்படுகிறது.

இரண்டு அமைச்சர்களையும் இரண்டு பிரதியமைச்சர்களையும் ஜனாதிபதி நீக்கியுள்ளார். ஏலவே ஓர் அமைச்சர் இராஜினாமா செய்துள்ளார். இதுபோன்ற இன்னும் பல நிகழ்வுகளும் நடக்கலாம். ஜனாதிபதித் தேர்தலுக்கான திகதி அறிவிக்கப்பட்ட அன்றே நடைபெற்றுள்ள நிகழ்வுகளைப் பார்க்கும்போது, இது இலங்கையில் நடைபெறும் இறுதி நிறைவேற்று முறை ஜனாதிபதித் தேர்தலாக இருப்பதற்கும் கடைசி ஜனாதிபதியாக மைத்திரிபால சிறிசேனவின் பெயர் வரலாற்றில் இடம்பெறுவதற்கும் மட்டுமன்றி, புதிய ஜனாதிபதியாக மைத்திரிபால சிறிசேன பாப்பரசரை வரவேற்பதற்கும் வாய்ப்புள்ளன என்றும் சொல்லி வைக்கலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நபிகளாரின் சுன்னாவும் சட்டவாக்கமும்



மூலம்: கலாநிதி யூசுப் அல்கர்ளாவி
மொழியாக்கம்: அஷ்ஷெய்க் எம்.எப். ஸைனுல் ஹுஸைன் (நளீமி)

(தொடர் 53)

கலாநிதி யூஸுப் அல்கர்ளாவி அவர்கள் எழுதிய "அஸ்ஸுன்னா மஸ்தரன் லில் மஃரிபா வல் ஹழாரா" (அறிவுக்கும் நாகரிகத்திற்குமான அடிப்படை என்ற வகையில் சுன்னா) என்ற நூலின் மொழிபெயர்ப்புத் தொடர்.

"இப்னுஸ் ஸலாஹ்வுடன் நல்லறிஞர்களும் பெரும் எண்ணிக்கையினரும் முரண்படுகின்றனர்" என்ற இமாம் நவவியின் கூற்றை விமர்சித்து, இப்னுஸ் ஸலாஹ்வை ஆதரித்து ஹதீஸ் துறை விற்பன்னர் இப்னு ஹஜர் பின்வருமாறு எழுதுகின்றார்:

"அதிகமானோர் முரண்படுகின்றனர் என்ற நவவியின் கூற்றை எம்மால் சரியென ஏற்றுக் கொள்ள முடியும். ஆனால் நல்லறிஞர்கள் முரண்படுகின்றனர் என்பதை ஏற்றுக் கொள்ள முடியாதுள்ளது. ஏனெனில் நல்லறிஞர்கள் பலர் இப்னுஸ் ஸலாஹ்வின் கருத்துடன் உடன்பட்டுள்ளனர் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது."

இன்னும் இப்னு ஹஜர்: 'அந்நுகிபா' என்ற நூலுக்கான விளக்கவுரையில் ஆஹாதான ஹதீஸ் துணை ஆதாரங்களுடன் இணைந்து வந்தாலும் உறுதியான அறிவை தரமாட்டாது என்ற கருத்தை மறுத்து தனது கருத்தை முன்வைத்துள்ளார். ஆஹாதான ஹதீஸ்கள் பல்வகைப்படும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

### சர்ச்சைக்குரிய இடத்தை சரியாக இனங்காணல்

இரு தரப்பினருக்கும் இடையிலான முரண்பாடு சரியாக விபரிக்கப்படவில்லை என்பதை ஆழ்ந்த அவதானத்திற்கும் ஆய்விற்கும் பின்னர் நான் கண்டு கொண்டேன். முரண்பாடு சரியாக அடையாளங் காணப்பட்டு விபரிக்கப்பட்டிருந்தால் பெருமை கொண்டோரையும் நீதியிலிருந்து பிறழ்ந்தோரையும் தவிர, இரு தரப்பினரைச் சேர்ந்த அனைவரும் உடன்பாடான கருத்துக்கு வந்திருப்பர் என்பது திண்ணம். அதிலும் குறிப்பாக, ஆஹாதான ஹதீஸ் துணை ஆதாரமில்லாது உறுதியான அறிவை தர மாட்டாது. நம்பிக்கை சார் விடயங்களை உறுதி செய்வதற்கு உறுதியான அறிவை தரக் கூடிய ஹதீஸ்கள் அவசியம் என்ற கருத்தை நாம் மிகைத்த கருத்தாக ஏற்றுக் கொண்டிருக்கும் நிலையில் அவர்கள் மத்தியில் கருத்து முரண்பாடு ஏற்பட்டிருக்க மாட்டாது.

### அல்குர்ஆன் மூலம் உறுதிப்படுத்தப்பட்டுள்ள அடிப்படை நம்பிக்கை கோட்பாடுகள்

ஆஹாதான ஹதீஸ்கள் மூலம் அகீதா (நம்பிக்கை சார்) விடயங்களை உறுதி செய்ய முடியுமா, முடியாதா? என்ற கூற்றில் 'அகீதா' என்ற சொல்லின் மூலம் நாம் நாடும் கருத்து யாது?

இதன் மூலம் அகீதாவின் அடிப்படைகளும் பிரதான கூறுகளும் நாடப்படுகின்றதெனில், அவை அல்குர்ஆன் வசனங்கள் மூலம் உறுதி செய்யப்படுள்ளன என்பதை கவனத்திற் கொள்க. பின்வரும் அம்சங்களை உதாரணமாகக் குறிப்பிடலாம்:

அல்லாஹ் இருக்கின்றான். அவன் ஏகன். தனித்தவன். தேவையற்றவன். அவன் எவரையும் பெறவில்லை. எவராலும் பெற்றெடுக்கப்படவுமில்லை. அவனுக்கு நிகராக எவருமில்லை. மேலும் அவன் ஆதியில்லாத ஆரம்பமானவன். அந்தமில்லா இறுதியானவன். யாவற்றையும் அறிந்தவன். அனைத்தின் மீதும் ஆற்றல் பெற்றவன். சம்பூரணமானவன். எக்குறையுமற்ற தூயவன்.

"அவனைப் போன்று எப்பொருளும் இல்லை. அவனே யாவற்றையும் செவியேற்கின்றவன், பார்கின்றவன்"

(அஷ்ஷுஃரா: 11)

இன்னும் முஹம்மத் நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் அல்லாஹ்வின் தூதராவார். நபிமாரில் இறுதியானவர். அல்லாஹுத் தஆலா அவர் மீது அல்குர்ஆனை தெளிவான அத்தாட்சியாகவும் நிரந்தர அற்புதமாகவும் இறக்கி வைத்தான். அதற்கு முன்னிருந்தோ, பின்னிருந்தோ பொய் அவரிடம் வராது. அல்குர்ஆன் தீர்க்கமான அறிவுடைய மிக்க புகழுக்குரியவனிடமிருந்து இறக்கப்பட்டதாகும்.

மரணத்தின் பின்னர் மீள உயிர் கொடுத்து எழுப்பப்படுவோம் என்ற நம்பிக்கையும் அவற்றில் ஒன்றாகும். அல்லாஹ் மண்ணறையில் இருப்போரை உயிர் கொடுத்து எழுப்புவான். சந்தேகத்திற்கு அப்பாற்பட்ட, சாத்தியமான மறுமை நாளில் அனைவரையும் ஒன்று திரட்டி, உலகில் அவர்கள் செய்த செயல்கள் குறித்து விசாரிப்பான். அவர்களது நற் செயல்களுக்கும் தீய செயல்களுக்கும் தக்க கூலியைக் கொடுப்பான். அங்கு இறையச்சம் உள்ளவர்களுக்கென தயார்படுத்தப்பட்ட சுவனம் உண்டு. அதில் அவர்களுக்கு சடரீதியான, உளரீதியான இன்பங்கள் உண்டு. நிராகரிப்பாளர்களுக்கு நரகம் தயார்படுத்தப் பட்டுள்ளது. அங்கு அவர்களுக்கு உடல், உள ரீதியான துன்பங்கள் உண்டு. அல்லாஹ்விற்கு அவனது கட்டளைக்கு மாறு செய்யாத வானவர்கள் உண்டு. அவர்களுக்கு ஏவப்படுகின்றவற்றை அவர்கள் செய்கின்றனர். அல்லாஹ் அவனது தூதர்களை நற்செய்தி கூறுகின்றவர்களாகவும் எச்சரிக்கையாளர்களாகவும் அனுப்பி வைத்தான். அவர்களில் சிலர் குறித்து அல்குர்ஆன் எங்களுக்கு கூறியுள்ளது. பலர் பற்றி குறிப்பிடவில்லை. இன்னும் அல்லாஹ் இறக்கி வைத்த வேதங்களில் சிலது குறித்தும் அல்குர்ஆன் பேசியுள்ளது.

இந்த அடிப்படை நம்பிக்கைகளைப் பொறுத்தவரை இவை குறித்து எந்த ஒரு முஸ்லிமும் முரண்பாடு கொள்ள மாட்டார். ஏனெனில் இவை அனைத்தும் தெளிவான கருத்தைக் காட்டக் கூடிய, தீர்க்கமாக உறுதி செய்யப்பட்ட அல்குர்ஆன் வசனங்கள் மூலம் நிரூபணமான விடயங்களாகும். இவை அனைத்தையும் முஸ்லிம் உம்மத் ஏகமனதாக ஏற்றுக் கொண்டுள்ளது. இவற்றை ஒவ்வொரு முஸ்லிமும் அறிந்திருப்பது இன்றியமையாததாகும். இவற்றை உறுதி செய்ய சுன்னாவை ஆதாரம் காட்ட வேண்டிய அவசிம் இல்லை. சுன்னாவில் இவை குறித்து வந்துள்ள விடயங்கள் அல்குர்ஆன் கூறியுள்ளவற்றை உறுதி செய்யக் கூடியவனாகவும் விவரணமாகவும் அமைந்துள்ளன.

# பலதார திருமணங்கள் செய்ய அனுமதித்திருப்பது இஸ்லாம் மட்டுமே

நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்களின் காலத்தில் ஃகைலான் ஸகஃபீ என்பவர் இஸ்லாத்தை தழுவினார். அப்போது அவர் பத்து பெண்களை திருமணம் செய்திருந்தார். அப்பெண்களில் நால்வரைத் தேர்ந்தெடுத்துக் கொண்டு மற்றவர்களை மணவிலக்கு செய்திடுமாறு அவருக்கு நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் கட்டளை இட்டார்கள்.

கைஸ் இப்னு ஹாரிஸ் (ரழியல்லாஹு அன்ஹு) அவர்கள் சொல்கிறார்கள், நான் இஸ்லாத்தை தழுவினேன். அப்போது என்னிடம் எட்டு மனைவியர் இருந்தனர். நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்களிடம் வந்து விவகாரத்தை கூறினேன். அவர்களில் நால்வரைத் தேர்ந்தெடுத்துக் கொள் என்று நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் கூறினார்கள்.

இன்றைய உலகிலே இருக்கும் பல்வேறு மதங்களும் சட்டங்களும் ஒன்றுக்கு மேற்பட்ட திருமணங்களை தடை செய்துள்ளன. அவ்வாறான நிலை காணப்படுவதால் சிலர் தங்களது வாழ்வில் பல பெண்களோடு தவறான உறவு கொண்டவர்களாக இருக்கின்றார்கள். ஆனால், இவர்கள் இதை வெளிப்படுத்துவதில்லை. இதை நாம் பரவலாக காண்கின்றோம்.

இஸ்லாம் ஒன்றுக்கு மேற்பட்ட திருமணங்களுக்கு தடை விதித்திருந்தால் நிலைமை இப்படித்தான் ஆகியிருக்கும். இஸ்லாம் ஒரு நடைமுறை செயற்றிட்டம். ஆகவே, அது ஒன்றுக்கு மேற்பட்ட திருமணங்களை தடை செய்யவில்லை. அதே நேரம் மனிதர்கள் இதில் அத்துமீறிடா வண்ணம் தடுத்திட சில நிபந் தனைகளையும் விதித்தது இஸ்லாம்.



முஸ்லிம் ஒருவர் தனது விருப்பப்படி எத்தனை பெண்களை வேண்டுமானாலும் திருமணம் செய்து கொள்ளலாம்; அதற்கு எந்த வரையறையுமில்லை என்று கூறுவது தான் தோன்றித் தனத்திற்கும் அநீதிக்கும் வழிவகுத்து விடும். மனைவியரின் உரிமைகளை, ஆசாபாசங்களை நிறைவேற்ற இயலாத நிலையை ஏற்படுத்திவிடும்.

இதேபோன்று, ஒரு மனிதன் ஒரு பெண்ணை மட்டும்தான் திருமணம் செய்ய வேண்டும் என்று கட்டுப்படுத்துவதும் தீமைக்குத்தான் வழிவகுக்கும். விலக்கப்பட்ட, தவறான வழிமுறைகளில் அவனது இச்சைகளை தீர்த்துக் கொள்ளுமாறு அவனைத் தூண்டும்.

இந்நிலையில் இஸ்லாம் ஒன்றுக்கு மேற்பட்ட திருமணத்திற்கு அனுமதியளித்தது. ஆனால் நான்கு பெண்களை மட்டும் என்று வரையறுத்தது. ஏனெனில், ஒருவன் இந்த வரையறைக்குள் நின்று நீதி, நேர்மைகளைக் கடைப்பிடிக்க முடியும். மனைவியின் உரிமைகளை நிறைவேற்றுவதும் சாத்தியமாகும்.

அல்லாஹ் கூறுகின்றான் "உங்களுக்கு விருப்பமான இரண்டு பெண்களையோ மூன்று பெண்களையோ, நான்கு பெண்களையோ மணம் முடித்துக் கொள்ளுங்கள். ஆனால் (அவர்களிடையே) நீதமாக நடந்திட முடியாது என்று நீங்கள் அஞ்சுவீர்களாயின் ஒரு பெண்ணை மட்டும் மணம் முடித்துக் கொள்ளுங்கள்." (4:3)

பிறப்பினால் அல்லது இயற்கை மரணத்தினால் அல்லது போர், போராட்டம் போன்ற செயற்கை மரணத்தினால் ஆண்களின் விகிதாசாரம் குறைந்து பெண்களின் விகிதாசாரம் அதிகரித்துக் கொண்டே செல்கிறது. இது தொன்று தொட்டு இருந்து வருகிறது. இந்த நிலையை சீர் செய்வதற்காகவும் ஓர் ஆண் ஒன்றுக்கு மேற்பட்ட பெண்களை திருமணம் செய்து கொள்வது தேவையாகின்றது.

அத்தோடு, இஸ்லாத்தில் முதல் மனைவியின் அளவுக்கு மற்றைய மனைவிகளுக்கும் சம உரிமைகள் உள்ளன. முதல் மனைவிக்கு என்னென்ன உரிமைகள் உள்ளனவோ, என்னென்ன சலுகைகள் உள்ளனவோ அவற்றில் அணுவும் குறைந்திடாமல் அடுத்த மனைவிக்கு தரப்பட வேண் டும். இது ஒரு முக்கியமான நிபந்தனையாகும். எல்லா நிலைகளிலேயும் மனைவியருக்கிடையில் பாரபட்சம் இன்றி நடந்து கொள்வது கணவனின் கடமையாகும்.

ஒன்றுக்கு மேற்பட்ட திருமணங்களை அனுமதித்தால் தீமைகளே மிகைத்திடும் என்பது உண்மையாக இருந்தால், அனைத்தும் அறிந்த இறைவன் அதனை அனுமதித்திருக்க மாட்டான்; தடை செய்திருப்பான்.

"அவனை விட அதிகமாக மனித நலனில் அக்கறை உடையவர் யார்? அவனே பூரணமானவன் ஞானம் நிறைந்தவன்" என்று அல் குர்ஆன் கூறுகிறது.

இஸ்லாம் தந்திருக்கும் தீர்வு நிச்சயமாக நடைமுறையிலிருக்கும். கட்டாயமான ஒரு திருமணத்தை விட சிறந்ததேயாகும். ஆண், பெண் உறவுகளில் நடக்கும் அத்துமீறல்களுக்கு சிறந்த மாற்று வழியாகும். இக்கட்டானதோர் இடரில் மாட்டித் தவிக்கும் ஆண்களும் பெண்களும் இந்தப் பரிகாரத்தால் பயன் பெறுகின்றனர்.


அல்ஹாஜ் எம்.எப்.எம். இக்பால் (ஜே.பி.)
யாழ்ப்பாணம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜனாதிபதி தேர்தல்: மீளாய்வு செய்யுமா இ.தொ.கா.?




-மலைஞானி



எவருமே எதிர்பார்த்திருக்க முடியாத ஒரு திருப்பு முனையை இலங்கை எதிர்க்கட்சிகள் வெற்றிகரமாக அரங்கேற்றி, தேசிய அரசியலில் ஒரு மெகா அரசியல் சுனாமியை ஏற்படுத்தியிருக்கின்றன. எங்கே, நான் வெற்றிலைச் சின்னத்தில் போட்டியிடக் கிளம்பிவிட்ட பின்னரும் பொதுவேட்பாளரைக் காணோமே! என ஜனாதிபதி தனிக் காட்டு ராஜாவாக வலம் வந்த சமயத்தில் கடந்த மாதம் 21 ஆம் திகதி வெள்ளிக்கிழமை, ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியின் பொதுச் செயலாளராக விளங்கிய சுகாதார அமைச்சர் மைத்திரிபால சிறிசேன கட்சியை விட்டு வெளியே வந்து நான்தான் எதிர்க்கட்சிகளின் பொது வேட்பாளர் என்று அறிவித்தபோது அதிர்ந்து போகாத அரசியல் வட்டாரங்களே இல்லை என்றுதான் சொல்ல வேண்டும்.

யார் அந்த பொது வேட்பாளர்? அவரா, இவரா? என பலரையும் சுட்டிக் காட்ட வைத்துவிட்டு கடைசியில் சுதந்திரக் கட்சியின் முக்கிய பிரமுகரையே பொது வேட்பாளராக்கியதில் எதிர்க்கட்சிகளின் கூட்டணி பெரு வெற்றி பெற்றிருக்கிறது. சபாஷ், சரியான போட்டி எனச் சொல்ல வைத்திருக்கிறது.

வரவு-செலவு திட்ட விவாதம் இறுதிக் கட்டத்தை நெருங்கிக் கொண்டிருந்த போதே, அரசியல் வட்டாரங்களில் சூடு கிளம்பிவிட்டிருந்தது. கட்சித் தாவல்கள் அரங்கேறும் எனப் பரவலாக ஊடகங்களில் கசியத் தொடங்கி இருந்தது. ஆனால் அரசின் உயர் மட்டத் தலைவர்கள் கூட எதிர்பாராதது, எதிர்க்கட்சியினரால் மைத்திரிபால சிறிசேன பொது வேட்பாளராக அறிவிக்கப்பட்டது தான்.

அறுபதுகளில் இதேபோன்ற ஒரு வரவு-செலவு விவாதத்தின் போதுதான் 'மின்னேரிய தெய்வம்' என மக்களால் அழைக்கப்பட்ட மைத்திரபால சேனாநாயக்க, ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியின் உயர் மட்டத் தலைவர், தன் பரிவாரங்களோடு ஆளும் கட்சி வரிசையில் இருந்து ஐ.தே.க. இனர் அமர்ந்திருந்த எதிர்க்கட்சி வரிசைக்கு வந்தார். இப்படித்தான் ஸ்ரீ மாவோ பண்டார நர்யக்கவின் ஆட்சி கவிழ்ந்தது. இப்போது அதே பிரதேசத்தை சேர்ந்த விவசாயியின் மகனான மைத்திரிபால, மஹிந்த ராஜபக்ஷ மூன்றாவது முறையாகத் தெரிவாகக் கூடாது என்பதில் பிரம்மப் பிரயத்தனத்தைக் காட்டி வரும் எதிர்க்கட்சிகளின் பொது வேட்பாளராகத் தெரிவு செய்யப்பட்டுள்ளார். அறுபதுகளின் பின்னர் மற்றோர் அரசியல் மாற்றத்தைக் கொண்டு வருவதற்காக 2010 களில் மற்றொரு மைத்திரிபால.

பொருத்தம் எப்படி என்று பார்த்தீர்களா!

எது, எப்படியானாலும் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ ஓர் ஆளுமை மிக்க அரசியல் வாதியாகவே இன்றைக்கும் திகழ்கிறார். அவரது அரசாங்கம் பல விடயங்களில் மக்களின் வெறுப்பை சம்பாதித்திருந்தாலும் மஹிந்த ராஜபக்ஷவின் தனிப்பட்ட செல்வாக்கு பெரும் சரிவை சந்தித்திருப்பதற்கான ஆதாரங்கள் இல்லை. 2005 இலும் அவர் சிறுபான்மையினரின் வாக்குகளை நம்பி போட்டியிடவில்லை. ஆனால் தந்திரமாக, வட பகுதி வாக்குகள் யாருக்கும் விழாமல் பார்த்துக் கொண்டார். மஹிந்தவா, ரணிலா என்ற கேள்விக்கு அதிகம் அறியப்பட்ட சூத்திரதாரியான ரணிலே எமக்கு அதிக ஆபத்தானவர் என்று பிரபாகரன் என்றைக்கு மஹிந்தவை குறைத்து மதிப்பிட்டு ஒரு முடிவை எடுத்தாரே, அன்றைக்கே விடுதலைப் புலிகளின் ஆதிக்கத்தின் மீது முதலாவது ஆணி அறையப்பட்டது.

> நீங்கள் அனைவருமே ஊழல், மோசடி செய்து மக்களின் பணத்தைக் கொள்ளையடித்திருக்கிறீர்கள். இதற்கான ஆதாரங்கள் என்னிடமிருக்கின்றன என்பதே இதன் அர்த்தம் என்றால், இதன் உள் அர்த்தம் 'எனக்கு விசுவாசமாக இருக்கும் வரை நீங்கள் கொள்ளையடிப்பதில் எனக்கு பிரச்சினையில்லை' என்பதாகவே இருக்கிறது

இவ்வாறு வலியச் சென்று பிரபாகரன் தனது முடிவுக்கு வழிதேடிக் கொண்ட அதே சமயத்தில் மறுபக்கம் மஹிந்த ராஜபக்ஷ, இரண்டாவது துட்டகைமுனுவாக சிங்கள மக்களால் பார்க்கப்பட்டு, ஆராதிக்கப்பட்டார். சரிவுகள் இருப்பினும் பௌத்த சிங்கள மக்கள் மனதில் அவர் இன்றைக்கும் செல்வாக்கு செலுத்தியே வருகிறார்.

ஆனால் சிறுபான்மைச் சமூகங்களுக்கு நன்மை செய்வதாகவும் வளர்ச்சிக்கு வழி வகுப்பதாகவும் அவரின் ஆட்சி இல்லை என்பதுதான் நிதர்சனம். ஆனாலும் மக்கள் என்ன நினைக்கிறார்கள் என்பதை பற்றிக் கவலைப் படாமல் எமது சிறுபான்மையினக் கட்சிகள் அனைத்துமே-தமிழ்த் தேசிய கூட்டணி, மனோ கணேசன் நீங்கலாக-அரசுடன் கைகோர்த்திருந்தமை, ஓர் அரசியல் வினோதம் என்றே கொள்ளப்பட வேண்டும். ஏனெனில் கட்சிகள் இருப்பது மக்களுக்காகவும் அவர்களின் பிரதிநிகளாகவுமே. ஆனால் நிதர்சனத்தில் பெரும்பாலான முஸ்லிம் மற்றும் மலையக மக்கள் அரசுக்கு எதிரான மனப்பான்மையுடன் இருக்க, அவர்களுக்கு மத்தியில் செயற்படும் கட்சிகள் அரசுக்கு ஆதரவாக செயற்படும் விசித்திரத்தை இலங்கையில் மட்டுமே பார்க்கலாம் போலும்!

ஊவா மாகாண சபைத் தேர்தலில் முதல் தடவையாக ஐ.தே.க. சார்பாகப் போட்டியிட்ட வேலாயுதத்தின் மகனுக்கு 31 ஆயிரம் வாக்குகளை தமிழர்கள் அளித்திருக்கின்றார்கள். வெற்றிலை சார்பான இ.தொ.கா. வின் செந்தில் தொண்டமானுக்கு 30 ஆயிரம் வாக்குகளே கிட்டின. அடுத்த பொதுத் தேர்தலில்-பெரும்பாலும் ஏப்ரல் மாதம் நடைபெறலாம்- நுவரெலிய மாவட்டத்தின் வாக்களிப்பும் ஐ.தே.க. வேட்பாளருக்கான தாகவே இருக்கப்போகிறது.

➡11

WORLD FOCUS COLLEGE
MAWANELLA

பதிவுகள் தற்பொழுதிலிருந்தே ஆரம்பம்

Age Limit
வயதெல்லை 16 - 25

முன்மாதிரி முஸ்லிம் பெண்களை உருவாக்குவதற்கென்றே தலைசிறந்த உலமாக்களையும், துறைசார் புத்திஜீவிகளையும் கொண்டு வடிவமைக்கப்பட்டு பலநூற்றுக்கணக்காக பெற்றோர்களின் மனதை வென்று குடும்பங்களிலும் சமூகத்திலும் மாற்றங்கள் பல ஏற்படுத்திய பாடநெறி

எமது 9ஆம் பிரிவு ஜனவரி 4ஆம் திகதி ஆரம்பம்

Gold Medals

ஏழாம் வானம்

OUR 9TH BATCH STARTS ON 4TH OF JANUARY 2015

4 MONTHS Residential Course for Unmarried Girls

திருமணமாகாத பெண்களுக்கான 04 மாத கால வதிவிடப்பயிற்சி நெறி

More Than 5 Certificates

இதில் தமிழ், ஆங்கிலம், சிங்களம் மொழிகளில் கல்வி கற்றவர்களுக்கும் இதில் கலந்து கொள்ள முடியும்.

இதில் 25 ற்கும் மேற்பட்ட பாடங்கள் நடாத்தப்படுகின்றன அவைகளில் சில....

- குர்ஆன் அல் தஜ்வீத் (குர்ஆனை சரளமாக ஓதுதல்)
- ஹதீஸ் (Hadhees)
- அல்குர்ஆன் மனனம் (Hifl)
- பிக்ஹ் (Fiqh)
- தப்ஸீர் சூறா விளக்கம்
- அஹ்லாக் (Ahlaq)
- ஸீரதுல் ஸஹாபிய்யா
- தர்பியா பயிற்சி முகாம்
- Computer Studies
- Spoken English
- Introductions to Social media
- Life learning activities
- Habaya stone works
- Health Care
- Food & Nutrition
- Life Skill (வாழ்க்கை திறன்)
- Child care
- First Aid
- History of Hijab and cartoonisam
- Pre marriage counseling/ Carrier Guidance/ Self Employment/ General Knowledge
- Islamic Medicines
- Paper Quilling, Mehendi Designing, Glass painting
- Psychology
- தையற்கலை (Stitching)
- Nursery Teacher Training (இதற்கு வேறாக அரச அங்கீகாரம் பெற்ற சான்றிதழ் வழங்கப்படும்.)

"வாழ்க்கைத்திறன் பயிற்சி நெறியை"
வளவாளர் :- SAABIR MOHAMED HASHIM
அவர்களால் நடாத்தப்படுகிறது.

இதில் பங்கு கொள்வோர்

- 16 வயது பூர்த்தியடைந்த அனைத்து பெண்கள்
- மௌலவியாக்கள் தாயிகளாக மாறுவதற்காக எதிர்பார்பு உள்ளவர்கள்
- O/L A/L செய்து விட்டு பெறுபேறு வரும் வரை காத்திருப்பவர்கள்
- மார்க்கத்திலும் படிப்பிலும் பின்தங்கியிருப்பவர்கள்
- திருமணம் முடிப்பதற்கு தயாராக இருக்கும் பெண்கள்
- தனது திறமையை வெளிக்காட்ட முடியாது இருக்கும் பெண்கள்
- வீட்டிலிருந்து சம்பாதிப்பதற்கு விருப்பம் உள்ள பெண் கள்
- ஆங்கிலம், தையற்கலை மற்றும் சமயற்கலை ஆகியவற்றில் ஆர்வமுள்ளர்கள்

WORLD FOCUS COLLEGE
20/ 2, Hemmathagama Road, Beminiwaththa, Mawanella.
+ 94 777 344474/ + 94 77 4370320

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**ஜனவரி 8 ஆம் திகதி நடைபெறவுள்ள ஏழாவது ஜனாதிபதித் தேர்தலில் முஸ்லிம் கட்சிகள் தமது ஆதரவை எந்த வேட்பாளருக்கு வழங்கவுள்ளன என்பது தொடர்பாக கட்சி முக்கியஸ்தர்களிடம் வினவினோம். அவர்கள் தமது நிலைப்பாடு தொடர்பாக தெரிவித்த கருத்துக்களை இங்கு தொகுத்துத் தருகின்றோம்.**

நேர்காணல்: வினாசர் ராஜா (இஸ்லாஹி)

## முஸ்லிம்களுக்கு வாய்ப்பு வழங்கப்பட்டது இந்த அரசாங்கத்தில்தான்



### அமைச்சர் பௌசி

முஸ்லிம் மக்கள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கு சார்பாக செயற்படுவார்கள் என்று நான் நினைக்கின்றேன். மஹிந்தவுக்கும் மைத்திரிக்கும் இடையில், மக்களின் ஆதரவு அதிகமாக உள்ளவர் மஹிந்த ராஜபக்ஷவே ஆவார். அவர்தான் இன்று உலகில், இலங்கையில் அனைவரும் அறிந்த நபராவார். மைத்திரிபால சிறிசேன வெறுமனே அமைச்சராக இருந்தவர். அவருக்கு செல்வாக்கு குறைவாகும். அதனால் முஸ்லிம்கள் மஹிந்த ராஜபக்ஷவுடன் இருப்பார்கள் என்றே நம்புகின்றேன்.

நான்தான் இந்த ஜனாதிபதித் தேர்தலில் ஜனாதிபதி மஹிந்த வேட்பாளராக நிற்க வேண்டும் என்ற யோசனையை ஆமோதித்தவன். எனது நேரத்தையும் காலத்தையும் உயிரையும் மஹிந்தவுக்கு கொடுப்பதற்கு தயாராக உள்ளேன்.

முஸ்லிம்களின் உரிமையை பொறுத்தவரையில், இந்த அரசாங்கம்தான் எல்லா வகையிலும் வாய்ப்புகளையும் வரப்பிரசாதங்களையும் வழங்கியுள்ளதாகும். ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவை சின்னச் சின்ன பிரச்சினைகளின் காரணத்தால் முழுமையாக வெறுக்க நினைத்தால் அது மடத்தனமாகும். நாம் அனைவரும் இந்த நிலையில் சேர்ந்தே இருக்க வேண்டும்.

## மக்கள் எல்லோரும் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் பக்கமே



### அமைச்சர் ஏ.எல்.எம். அதாவுல்லா

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, ஆசியாவின் ஆச்சிரியம் மிக்க நாயகனாக திகழ்கின்றார். அவருடன் எத்தனை கட்சிகள் போட்டியிட்டாலும் அதிகூடிய வாக்குகளை பெற்று மூன்றாவது தடவையும் ஜனாதிபதியாக வருவதற்கு மக்கள் ஆணை வழங்கி விட்டார்கள் என தேசிய காங்கிரஸின் தலைவரும் உள்ளூராட்சி மற்றும் மாகாண சபைகள் அமைச்சருமான ஏ.எல்.எம். அதாவுல்லா தெரிவித்தார்.

திவிநெகும கொடுப்பனவு வழங்கும் நிகழ்வு அக்கரைப்பற்றில் நடைபெற்றது. அதில் உரையாற்றுகையிலே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் ஆட்சிக் காலத்தில் இலங்கை வரலாறு காணாத அபிவிருத்திகளைக் கண்டுள்ளது. எங்களை நிம்மதியாகவும் ஒற்றுமையாகவும் வாழ வைத்துள்ளார். அவரை நாம் மறக்கக் கூடாது.

மஹிந்த சிந்தனைத் திட்டத்தில் எங்களது வாழ்க்கைத் தரம் உயர்வடைந்துள்ளது. ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவை யார் எதிர்த்து நின்றாலும் நாம் அவருடனே இருப்போம். கடந்த காலத்தில் மஹிந்த ராஜபக்ஷவை ஜனாதிபதியாக்குவதற்கு தேசிய காங்கிரஸ் முன்னின்று உழைத்தது.

கொடூர யுத்தத்தை ஒழித்தது மட்டுமல்லாமல், வருமானம் குறைந்த மக்களின் வாழ்கைத் தரத்தை உயர்த்துவதற்காகவும் பல அபிவிருத்தி திட்டங்களை ஏற்படுத்தியுள்ளார். ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவை தோற்கடிப்பதற்கு ஐக்கிய தேசியக் கட்சியினரும் வெளிநாட்டு சக்திகளும் கபட நாடகம் ஆடுகின்றன.

இதை ஒருபோதும் மக்கள் அங்கீகரிக்க மாட்டார்கள். இன்று மக்கள் எல்லோரும் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் பக்கமே உள்ளார்கள். நாம் எல்லோரும் ஒற்றுமையாக செயற்பட்டு எதிர்வரும் ஜனவரி மாதம் மஹிந்த ராஜபக்ஷவை ஜனாதிபதியாக்குவதற்கு முன்வர வேண்டும் என்றார்.

## எமக்கு சார்பானவர்களுக்கே நாம் வாக்களிக்க வேண்டும்



### அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் செயலாளர் வை.எல்.எஸ். ஹமீட்

இந்த தேர்தலில் முஸ்லிம்களின் ஆதரவு எந்தப் பக்கம் என்பதை கூற முடியாத நிலையாக இருக்கின்றது. மேலும், முஸ்லிம்களின் உணர்வுகளை புரிந்து கொள்கின்ற கட்சிகளாக முஸ்லிம் கட்சிகள் செயற்பட வேண்டும். இது தொடர்பாக நாம் தெளிவான தீர்மானங்களை எடுக்க இருக்கின்றோம். எதிர்வரும் நாட்களில் எமது கட்சியின் உயர்பீடம் கூட இருக்கின்றது. அதன்போது நாம் தெளிவான ஒரு முடிவை எடுப்பதற்கு தீர்மானித்துள்ளோம். எமது கட்சியின் உயர்பீடம் கூடியதன் பிற்பாடுதான் முடிவை அறிவிக்க முடியும்.

முஸ்லிம்களின் உரிமையை வென்றெடுப்பதற்கான நடவடிக்கை என்கின்ற போது, குறிப்பாக அவர்களது வாக்குச் சீட்டு, ஒரு பாரிய ஆயுதமாகும். எனவே அந்த வாக்குச் சீட்டை சரியான முறையில் சரியான திசையில் பயன்படுத்த வேண்டிய தேவை இருக்கின்றது. அந்த வாக்குச் சீட்டை, யார் எமக்கு சார்பாக உள்ளார்கள் என்று பார்த்தே நாம் வாக்களிக்க வேண்டும். இல்லையேல் அது பிரயோசனமற்றதாக ஆகிவிடும்.

## அரசாங்கத்தை தோற்கடிக்க முஸ்லிம்களின் ஆதரவு வேண்டும்



### மேல் மாகாண சபை உறுப்பினர் முஜிபுர் ரஹ்மான்

கடந்த காலங்களில் முஸ்லிம்களுக்கு எதிராக நடந்த அனைத்து சம்பவங்களும் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் அரசாங்கத்தின் ஆதரவுடன் மேற்கொள்ளப்பட்வை என்பது அனைவருக்கும் தெரியும். எனவே, மஹிந்த ராஜபக்ஷவின் அரசாங்கத்தை தோற்கடிப்பதற்கு முஸ்லிம்களின் ஆதரவு இருக்க வேண்டும். அவ்வாறு தோற்கடிக்கா விட்டால் இந்நாட்டில் முஸ்லிம்களுக்கு நிம்மதியாக வாழ முடியாத நிலைமை ஏற்படும்.

எமது கட்சியின் ஆதரவானது மைத்திரிபால சிறிசேன அவர்களுக்கே. ஐ.தே.க. அவருக்கு ஆதரவளிப்பதாக முழுமையாக தீர்மானித்துள்ளது.

முஸ்லிம்களின் கோரிக்கையாக மைத்திரிபால சிறிசேன அவர்களிடம் நாம் கேட்பது, நீதியை நிலைநாட்ட வேண்டும் என்பதையேயாகும். அவ்வாறு நீதியை நிலைநாட்டினால் கடந்த காலத்தில் முஸ்லிம் சமூகத்திற்கு எதிராக நடந்த இந்த அநியாயங்களை நிறுத்தக் கூடிய வாய்ப்புருவாகும். ஏனெனில் நீதி, சட்டம் சரியான நடைமுறையில் இல்லாத காரணத்தினால்தான் இவ்வாறான வன்முறைகள் ஏற்பட்டன. அதனால் சட்டத்தை நிலைநாட்ட நாங்கள் கட்டாயம் இந்த அரசாங்கத்தை தோற்கடிக்க வேண்டும்.

## தேர்தல் விஞ்ஞாபனத்தை அவதானித்த பின்னரே முடிவெடுப்போம்



### முஸ்லிம் காங்கிரஸ் செயலாளர் ஹஸன் அலி எம்.பி.

முஸ்லிம்களின் ஆதரவு யாருடைய பக்கம் இருக்க வேண்டும் என்பதை நாம் உடனடியாக தீர்மானிக்க முடியாது. ஏனெனில் எதிர்க்கட்சிகளின் தேர்தல் விஞ்ஞாபனம் இன்னும் வெளியாகவில்லை. சிறுபான்மை சமூகங்களுக்கு அவர்கள் என்ன தீர்வை தரப்போகிறார்கள் என்ற பிரச்சினைகள் இருக்கின்றன. மத, கலாசார அனைத்து விடயங்களிலும் நாட்டில் எமக்கு அச்சுறுத்தல்கள் ஏற்பட்டுள்ளன. இதனை இல்லாமல் செய்வதற்கு எதிர்க்கட்சிகள் எந்த உத்தரவாதத்தை தருகிறார்கள் என்று பார்க்க வேண்டும். அதேநேரம், வடக்கு - கிழக்கு மக்களுக்கு இடப் பிரச்சினைகளுக்கான தீர்வும் கிடைக்க வேண்டும். இன்னும் பல அரசியல் மாற்றம் நடைபெற இருப்பதும் தெளிவாக விளங்குகின்றது.

மேலும், அரசாங்கம் எமக்கு தருவத்தாக கூறியுள்ள விடயங்களில் ஆர்வம் காட்டவும் இல்லை. முஸ்லிம்களின் இடப் பிரச்சினை தீர்விலும் தெளிவான முடிவில்லை. இவைக்கு மத்தியில் தீர்க்கமாக யோசித்து நாம் முடிவெடுப்போம்.

எமது உயர்பீடம்தான் எக்கட்சிக்கு ஆதரவு வழங்க வேண்டும் என்ற இறுதித் தீர்மானத்தை எடுக்கும். எமது உரிமைகளை வென்றெடுப்பதற்காக திருமறையில் கூறியது போல் ஒற்றுமையாக செயற்பட வேண்டும். எமது முஸ்லிம்களின் அரசியல், ஒரு தனி நபர் கட்சியை வைத்துக் கொள்வதைப் போன்று செயற்படுகிறது. இதுவல்லாமல் நாம் அனைவரும் ஒற்றுமையாக இருந்து சிந்தித்து செயற்பட வேண்டும்.

## அரசியல் மாற்றத்தை நோக்கியே முஸ்லிம்கள் ஆதரவளிக்க வேண்டும்



### நல்லாட்சிக்கான மக்கள் முன்னணி தலைவர் அப்துர் ரஹ்மான்

எமது நாட்டின் பொதுவான நிலைவரம் என்னவென்பது அனைவருக்கும் தெளிவாக தெரியும். பொதுவாக காணப்படும் சட்ட ஒழுங்கு நிலைமைகள், ஊழல் மோசடி, ஏனைய ஆட்சி முறைகளை இதில் கூற முடியும். இவை எல்லா மக்களையும் மேலிருந்து அடி மட்டம் வரை பாதித்துள்ளன. இந்நிலையில் ஒரு மாற்றத்தை நோக்கி ஆதரவளிக்க வேண்டும் என்பதே தேவையாகும். இவ்வாறு ஆதரவளிக்கின்ற போதுதான் முஸ்லிம்களுக்கு எதிரான இனவாதம், மனித உரிமை, கலாசார பிரச்சினைகளுக்கும் தீர்வு கிட்டும். இந்த நல்ல ஆட்சியை நோக்கி முஸ்லிம்கள் ஆதரவளிக்க வேண்டும் என்பதே எமது நிலைப்பாடு.

மக்களுக்கு அபிவிருத்தியை வழங்குகின்ற, அரசியல் வேலைத் திட்டத்தை முன்னெடுக்கின்ற அணியினருக்கு நாங்கள் ஆதரவளிப்பதாக தீர் மானித்துள்ளோம். அந்த வகையில் இரண்டு யோசனைகளை கொண்டு வந்துள்ளோம். அதில் சர்வதிகார ஜனாதிபதி முறையை ஒழிப்பது. அடுத்ததாக, இதனை கட்டம் கட்டமாக செயற்படுத்த வேண்டும் என்பதாகும். ஏற்கனவே இருந்த ஜனாதிபதி மஹிந்தவின் அரசாங்கம் இதனை நிராகரித்துள்ளது. அதே நேரம், கூட்டணியின் பொது வேட்பாளராக களம் இறங்கியுள்ள மைத்திரிபால அதற்கான உறுதி மொழியை முன்வைத்துள்ளார். ஏற்கனவே 180 நாட்களில் இம்மாற்றத்தை உருவாக்க வேண்டும் என்பதை 100 நாட்களில் செய்வதாக கூறியுள்ளார். எனவே, இந்த உறுதி மொழி எதிரணியின் பக்கம் அதிகமாக உள்ளது. எனவே, நல்லாட்சிக்கான மக்கள் முன்னணி அப்படியான ஒரு மாற்றத்தை பிரதிநிதித்துவப் படுத்தும் குழுவுக்கே ஆதரவை வழங்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜனாதிபதி தேர்தலுக்காக மௌனித்திருக்கும் பொதுபல சேனாக்கள்

## பசி வந்தால் பத்தென்ன பதினொன்றும் பறக்கும்


தமிழில்: சிற்றழகு
நன்றி: ராவய

1915 சிங்கள-முஸ்லிம் கலவரத்தின் பின்னர் இந்நாட்டில் முஸ்லிம் எதிர்ப்பு இயக்கமொன்று ஒருபோதும் செயற்பட்டதில்லை. பிற சமயத்தவர்களை இலக்கு வைத்த ஒரேயோர் எதிர்ப்பு கோஷமாக தமிழ் எதிர்ப்பு கோஷம் மட்டும் காணப்பட்டது. அதாவது, சுதந்திரத்தின் பின்னரான எந்தவோர் அரசாங்கமும் முஸ்லிம்களுக்கு எதிரான உத்தியோகபூர்வ எதிர்ப்பை கட்டவிழ்த்து விடவில்லை என்பது இதன் பொருளாகும்.

ஆனால், மஹிந்த அவ்வாறு நடந்து கொள்ளவில்லை. புலிகள் இயக்கத்தை யுத்த முனையில் வெற்றி கொள்வதற்காக பௌத்தர்களையும் கத்தோலிக்கர்களையும் முஸ்லிம்களையும் மிகவும் அக்கறையுடன் பயன்படுத்திய ராஜபக்ஷ கூட்டணி, வெற்றியின் இறுதிப் பெறுபேற்றை தமது குடும்பத்துக்கு சொந்தமாக்கிக் கொண்டது. போரின் வெற்றிக்காக எல்லா வகையிலும் ஒத்துழைப்பு வழங்கிய சிறுபான்மை இனத்தவரையும் சமயத்தவரையும் பெரும்பான்மை இனத்தின் முன்னிலையில் பலியிடுவதன் ஊடாக யுத்தத்தின் மொத்த வெற்றியை தென்னிலங்கையின் பெரும்பான்மை இனத்தவரிடம் ஒப்படைத்துவிட்டு அப்பெரும்பான்மை இனத்தின் ஈடிணையற்ற தலைவனாக, தன்னிகரில்லா மன்னனாக முடிசூட நினைத்தார். இந்தக் கொந்தராத்தை சமூக அரசியல் முகாமைத்துவத்திற்கு துப்பாக்கியைத் தவிர உருப்படியான மாற்றுவழி இல்லை என நம்பும் தனது இளைய தம்பி கோதபாயவிடம் ஒப்படைத்தார்.

முஸ்லிம்களுக்கு முன்னர் இவர்களின் கோர நகங்களின் பிடியில் கத்தோலிக்கர் அகப்பட்டிருந்தனர். அவ்வப்போது ஏதாவதொரு காரணத்தை கூறிக் கொண்டு கத்தோலிக்க ஆலயங்களை தாக்கியும் பல்வேறு குற்றச்சாட்டுக்களை சுமத்தியும் சில காலம் அவர்களை வஞ்சித்த உத்தியோகபூர்வமற்ற அரசாங்க இயக்கம், யுத்த வெற்றியின் பின்னர் வேறு சமயத்தவர்களையும் இலக்கு வைக்கும் அரசியல் இயக்கமொன்றை வீதிக்கு இறக்க வேண்டுமென ராஜபக்ஷ கூட்டணி தீர்மானித்தது. இதன் இறுதி விளைவாக யுத்த காலத்திலோ, அதன் பின்னராகவோ தமிழ் விரோத ராஜபக்ஷ ஆட்சி குறித்து மனம் கோணாத முஸ்லிம் சமூகத்தின் மீது ராஜபக்ஷ கூட்டணியின் வேட்டை நகங்கள் நீண்டன.

2009 மே 19 ஆம் திகதி புலிகள் இயக்கத்தை யுத்த ரீதியாக வெற்றி கொண்ட பின் கோதாவுக்கு ஒரு விடயம் புரிய ஆரம்பித்தது. அதாவது, பிரபாகரன் இல்லாத இலங்கை, கடுங்கோடையில் அகப்பட்டு வாடி வரண்டு தேய்ந்துபோன ஒரு நாடாகும். ராஜபக்ஷாக்களின் நிரந்தரமான அதிகாரத்தைத் தக்க வைத்துக் கொள்ள பெரிய எதிரி இல்லாமல்போன பெரிய குறை தென்பட்டது. கத்தோலிக்கர்களுக்கு எதிரான செயற்பாடுகளை விட முஸ்லிம் சமூகத்துக்கு எதிரான நடவடிக்கைகள், பரந்த அரசியல் அபிலாஷைகளை வெளிப்படுத்தும் இயக்கமாக உருவாக்கும் பின்னணி தயார் செய்யப்பட்டது.



இரண்டு முறை அல்ல பத்து முறை ஆயினும் அதிகாரத்தில் இருப்பதற்காக அரசியலைப்புச் சட்டத்தினால் ஜனாதிபதி வகை செய்து கொண்டார். அரசியலமைப்புச் சட்டத்தில் இரண்டு முறை என இருந்த எல்லையை நீக்கிக் கொண்ட எந்தவோர் ஆட்சியாளனும் எளிதில் வீடு சென்றதாக வரலாறு இல்லை. ஆபிரிக்காவின் சிம்பாப்வே ஜனாதிபதி 1980 இல் ஆட்சிக்கு வருகின்றார். இவர் மஹிந்தவை விட புரட்சியாளன். ஏகாதிபத்திய ஆட்சிக்கு எதிராக 10 வருடங்கள் சிறைவாசம் அனுபவித்த இவர், வெள்ளைக்கார காலனித்துவ ஆட்சியாளர்களை விரட்டியடித்த புரட்சிப் போராட்டத்திற்கு தலைமை வகித்தவர். எவ்வாறாயினும் சிம்பாப்வேயின் பிரதம மந்திரியாக பதவிக்கு வந்து நாட்டின் சட்டத்தை நிறைவேற்று ஜனாதிபதி முறைக்கு மாற்றிக் கொண்டார். அன்று முதல் இன்று வரை 38 வருடங்களாக தனது 7 வது ஆட்சி காலத்தில் அவர்தான் அந்நாட்டின் ஜனாதிபதி. சுதந்திரமான தேர்தலொன்றின் மூலம் (அது மோசடிகளின் மொத்தம் என்பது வேறு விடயம்) தெரிவு செய்யப்படுவதில் என்ன தவறு உள்ளது என எவரும் வினவலாம். தவறு இருப்பது, இன்று சிம்பாப்வே ஆபிரிக்காவின் மூன்று கடும் வறுமையான நாடுகளில் ஒன்றாக இருப்பதிலும் அதிகமான பண வீக்கமும் அதிகமான வேலையில்லா திண்டாட்டம் நிலவும் நாடாகவும் சட்டரீதியான சர்வாதிகாரம் பச்சையாக கடைப்பிடிக்கும் நாடாகவும் அது மாறியுள்ளதிலும் ஆகும்.

அண்மையில் மக்கள் பேரணியொன்றில் உரையாற்றிய மக்கள் விடுதலை முன்னணியின் தலைவர் அநுரகுமார திஸாநாயக்க குறிப்பிடும்போது, எமது மஹிந்த ராஜபக்ஷ அப்போது நிலவிய இரண்டு முறைகளுக்கான வரம்பை, இரண்டாவது முறையாக தெரிவு செய்யப்பட்டு சத்தியப் பிரமாணம் செய்வதற்கும் முன்னராகவே 18 வது திருத்தத்தின் மூலம் நீக்கிக் கொண்டார். அதாவது முழுமையாக இன்னும் ஆறு வருடங்களுக்கான வரமொன்று தனது கைகளில் வைத்துக் கொண்ட நிலையில் இதை செய்தார். பேராசை என்பது எந்தளவு பிரேக் இல்லாத கிலேசம் என்பதை மஹிந்த ராஜபக்ஷ இதன் மூலம் நாட்டுக்குக் காட்டினார். இதனால் தனது சகோதரனின் இராணுவச் சிந்தையையும் அதன் ஊடாக தயார்படுத்தப்படும் பாதையையும் இந்தத் தலைவன் தலைமேல் ஏற்றுக் கொண்டார். கலகொட அத்தே ஞானசார போன்ற பௌத்த பிக்குத் தன்மையின் புறத்திலும் நாகரிக முள்ள பொது மனித ஒழுக்க மாண்புகளின் புறத்திலும் நற்சான்றிதழ் இல்லாத வெட்கங்கெட்ட புனைவு ஒன்றை கோதபாய ஊடாக பெரிய உண்மையாகவும் நித்திய யதார்த்தமாகவும் இம்மண்ணில் வேரூன்ற இடமளித்தார். இவ்வாறு முஸ்லிம்களின் காலம் ஆரம்பமானது.

இப்படியே காலம் உருண்டோடும் போது, அடுத்த ஜனாதிபதி தேர்தலுக்காக தயாராக வேண்டிய நேரம் நெருங்கியது. மஹிந்த ராஜபக்ஷ எனும் அரசியல்வாதி பூமிக்கு வருகின்றார். தனது இனவாத, சமயவாத, கடும்போக்குவாத இயக்கம் நினைத்த அளவு பிரயோசனத்தைப் பெற்றுக் கொடுக்காது என்பது மெல்ல தெளிவாகின்றது. மேற்கு, தெற்கு, ஊவா தேர்தல்களின் ஊடாக சிறுகச் சிறுக இதனை புரிந்து கொள்ள ஆரம்பிக்கின்றார். இப்போது அவர் தனது நகங்களினால் கிள்ளி அழவைத்த குழந்தைகளுக்கு தாலாட்டுப் பாட ஆரம்பிக்கின்றார். இனி என்ன, இந்நாட்டில் வாழும் அனைத்து முஸ்லிம்களுக்கும் தனது சொந்த செலவில் (அதாவது எமது செலவில்) மக்காவுக்கு அனுப்பும் தாலாட்டைப் பாடினார்.

பிரிவினைவாத தமிழர், அடிப்படைவாத முஸ்லிம் என்ற மாயப் பிசாசுகளுக்கு மேலதிகமாக இந்நாட்டின் எல்லா தீமைகளுக்குமான அபசகுணமாக ராஜபக்ஷாக்கள் காட்டிய இன்னுமொரு புனைவு மேற்கின் கத்தோலிக்க ஆலயமாகும். பௌத்தர்களைப் பயமுறுத்துவதற்காக இந்த கத்தோலிக்க பிசாசை பயன்படுத்திய வேறு தலைவனை வரலாற்றில் தேடிக்கொள்ள முடியாது. ஆனால் ஜனாதிபதி தேர்தல் என வரும் போது கத்தோலிக்கர்களின் வாக்குகளையும் கணக்கில் கொள்ள வேண்டும். ஆகவே அவர்களின் ஆன்மீகத் தலைவர் பாப்பாண்டவரை இலங்கை விஜயத்துக்காக அழைப்பதின் மூலம் காயப்பட்ட கத்தோலிக்க மனங்களுக்கு சாயம் பூசுவதற்காக ராஜபக்ஷாக்கள் நாலா திசையிலும் ஓடுகின்றனர். ஜனாதிபதியின் பிறந்த தினத்திற்கு பாப்பாண்டவர் வாழ்த்து அனுப்பியதாக கூறும் சுவரொட்டி ஒன்று சென்ற தினங்களில் கத்தோலிக்கர்கள் வாழும் பகுதிகளில் ஒட்டப்பட்டிருந்தது.

இவ்வளவு காலமும், அவ்வப்போது, பொதுபல சேனைகள் போன்ற கடும்போக்கு பௌத்த குழுக்களின் ஊடாக அரச அனுசரணையுடன் பிரசாரம் செய்விக்கப்பட்ட கத்தோலிக்க ஆலயத்தின் சதித் திட்டம் எங்கே? அவ்வாறான சதிகாரக் கூட்டத்தின் சர்வதேச தலைவரிடமிருந்து கிடைத்ததாகக் கூறப்படும் வாழ்த்து செய்தியை தன்னுன்னதவாத சிங்கள பௌத்தத் தலைவன் எனக் கூறிக் கொள்பவன் இந்தளவு பெருமிதமாகக் கருதுவது ஏன்? இந்த வினாக்களுக்கு வழங்கக் கூடிய ஒரேயொரு விடைதான், ராஜபக்ஷ குடும்பத்துக்கு பசி வந்தால் பத்தென்ன பதினொன்றும் பறக்கும் என்பது எந்த வகையிலும் அசாதாரண நிகழ்வாகக் கருத முடியாது என்பதாகும்.

---

## ஜனாதிபதி தேர்தல்:...

(05ஆம் பக்கத் தொடர்)

சேவல் சின்னத்தில் கேட்டாலும் அத்தேர்தலில் இ.தொ.கா. சரிவையே சந்திக்கப்போகிறது, வாக்காளரின் பொதுச் சிந்தனையை ஒட்டியதாக அதன் நடவடிக்கைகள் இல்லாதுவிட்டால்.

மலையக மக்கள் முன்னணியின் லோரன்ஸ் ஊடகங்களுக்கு அளித்திருக்கும் நேர்காணலில், தமது கட்சி பொது வேட்பாளரை ஆதரிக்கலாம் என்ற செய்தியை சூசகமாக வெளியிட்டுள்ளார். வாக்காளர்களோடு நிற்க வேண்டுமானால் அக்கட்சி தம் நிலைப்பாட்டை மாற்றிக் கொள்ளத்தான் வேண்டும். லோரன்ஸ் அவ்வாறு வெளியிட்டிருக்கும் கருத்து, 'பூங்கா பிரதியமைச்சர்' இராதா கிருஷ்ணனுக்கு உவப்பானதாக இல்லாதிருக்கலாம். கட்டெறும்பாகிக் கொண்டிருக்கும் அக்கட்சி காணாமல் போவதற்கு முன்னர் மக்களிடமிருந்து தனிமைப் படுவதைத் தவிர்த்துக் கொள்ள வேண்டிய அவசியம் ம.ம.மு. வுக்கு உள்ளது.

மு.கா. வும் இ.தொ.கா. வும் தாம் அரசியலில் தூரநோக்கு கொண்டவர்கள் அல்ல என்பதை, அரசுக்கும் ஜனாதிபதிக்கும் தாம் நிபந்தனையற்ற ஆதரவு தருவதாக முந்திரிக் கொட்டையாக முந்திக் கொண்டு அறிவித்ததில் இருந்தே ஊகித்துக் கொள்ள முடிகிறது. சமீபத்தில் ஜனாதிபதி, தம்மிடம் பல அமைச்சர்கள், எம்.பி. மாரின் கோப்புகள் இருப்பதாக அறிவித்து, ஒரு மிரட்டலை ஊழல் அரசியல்வாதிகளுக்கு விடுத்தார். நீங்கள் அனைவருமே ஊழல், மோசடி செய்து மக்களின் பணத்தைக் கொள்ளையடித்திருக்கிறீர்கள். இதற்கான ஆதாரங்கள் என்னிடமிருக்கின்றன என்பதே இதன் அர்த்தம் என்றால், இதன் உள் அர்த்தம் 'எனக்கு விசுவாசமாக இருக்கும் வரை நீங்கள் கொள்ளையடிப்பதில் எனக்கு பிரச்சினையில்லை' என்பதாகவே இருக்கிறது அல்லவா? இ.தொ.கா. வும், மு.கா. வும் இந்தக் கோப்புகளுக்குத்தான் பயப்பட்டு 'நிபந்தனையற்ற' ஆதரவை அரசுக்கு வழங்கிக் கொண்டிருக்கின்றனவா? என்ற கேள்வி மலையக வாக்காளர்களிடையே எழத்தானே செய்யும்!

பெரும்பாலான இலங்கை மக்கள் ஓர் அரசியல் மாற்றத்தை நாடி நிற்கின்றனர். ஊழல்கள் மலிந்து விட்டிருப்பது கண்கூடாகத் தெரிகிறது. மக்களுக்கு வந்துசேர வேண்டிய தேசிய செல்வம் வேறெங்கோ போய்க் கொண்டிருக்க, ஜனநாயகம் கேலிக்கூத்தாகி நிற்கிறது. ஜனாதிபதியே 'பைல்கள்' மலிந்து விட்டதாகக் கூறுகிறார். சிறுபான்மையினருக்கு நல்லது நடக்கும் என்பது மாதிரித் தெரியவில்லை. வடக்கில் வாய்ப்பேச்சுக்கு அப்பால் எதுவும் நடப்பதாக இல்லை. மத வெறி அவசியமில்லாமல் கிளறிவிடப்பட்டுள்ளது. மதவெறிக் கூச்சல்களுக்கு அரசு மௌனம் காக்கிறது. இவை அனைத்துமே வெளிப்படையாக நடக்க, அரசுக்கு நிபந்தனையற்ற ஆதரவை வழங்க இ.தொ.கா. முன் வந்திருப்பது, மலையக மக்களிடமிருந்து தன்னை தனிமைப்படுத்திக்கொள்ள முனைகிறதா, இக்கட்சி? என்ற வினாவையே எழுப்புகிறது.

இ.தொ.கா. தன்னை மீள்பரிசோதனை செய்து கொள்ள வேண்டும். கடந்த 10 ஆண்டுகளில் மலையக மக்களுக்கு கிட்டிய நன்மைகள் என்ன என்பதை நாம் சீர்தூக்கிப் பார்த்தால், வெற்றிலைச் சின்னத்துக்கு மலையகத் தமிழர் வாக்குகள் விழுந்த அளவுக்கு எந்த நன்மையும் இம்மக்களுக்கு கிடைத்ததாகத் தெரியவில்லை. மீரியபெத்த அவலத்தையே எடுத்துக் கொள்ளுங்கள். விரைவாகவே அவர்களுக்கு சொந்த வீடுகள் வழங்கப்படும் என அரசு அறிவித்தது. இராணுவமே வீடுகளை அமைக்கும் என்றும் சொல்லப்பட்டது. ஆனால் வீடு அமைக்கப் படுவதற்கான எந்த அறிகுறியும் இல்லை.

வாக்குகள் கொள்ளையடிக்கப் படுவதாகச் சொல்வார்கள். இ.தொ.கா. தன்னை மீள்பரிசோதனைக்கு உட்படுத்தி, தமது மக்களுக்கு அதிகபட்ச நன்மைகளை இச்சந்தர்ப்பத்தைப் பயன்படுத்துவதன் மூலம் பெற்றுக் கொடுக்க முன்வர வேண்டும். வாக்குகளை யாருக்கோ கொள்ளையடிக்க முனையக் கூடாது.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# அமெரிக்கா முஸ்லிம் மாலுமிகளாலேயே கண்டுபிடிக்கப்பட்டது

## துருக்கி ஜனாதிபதி



அமெரிக்காவைக் கண்டுபிடிப்பதில் கிறிஸ்தோபர் கொலம்பஸை முஸ்லிம் மாலுமிகள் விஞ்சியுள்ளதாக துருக்கிய ஜனாதிபதி றஜெப் தய்யிப் அர்துகான் தெரிவித்தார்.

இஸ்லாமிய மாலுமிகள் புதிய உலகை (அமெரிக்காவை) 1178 ஆம் ஆண்டு கண்டுபிடித்து கியூபாவில் பள்ளிவாசலொன்றை நிர்மாணித்தனர். ஆனால் கொலம்பஸ் 1492 ஆம் ஆண்டிலேயே அமெரிக்காவை கண்டுபிடித்துள்ளார் என எர்டோகன் ஸ்தான்புல்லில் இடம்பெற்ற உச்சி மாநாடொன்றில் லத்தீன் அமெரிக்க தலைவர்கள் மத்தியில் உரையாற்றுகையில் தெரிவித்தார்.

லத்தீன் அமெரிக்காவுக்கும் இஸ்லாத்திற்குமிடையிலான தொடர்பு 12 ஆவது நூற்றாண்டுக்கு முற்பட்டது. முதன் முதலாக அமெரிக்காவை கண்டுபிடித்தது கிறிஸ்தோப்பர் கொலம்பஸ் அல்ல, முஸ்லிம்கள் 1178 ஆம் ஆண்டில் அந்நாட்டை கண்டுபிடித்து விட்டனர் என அவர் கூறினார்.

கொலம்பஸ் கியூப கடற்கரையில் குன்றொன்றில் பள்ளிவாசல் ஒன்று இருந்ததாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

# பாகிஸ்தானுடன் ரஷ்யா இராணுவ ஒப்பந்தம்



அமெரிக்கா நேட்டோ படைகளை இந்த ஆண்டு இறுதியில் ஆப்கானிஸ்தானில் இருந்து திரும்ப பெறவுள்ள நிலையில், 45 ஆண்டுகளுக்கு பிறகு முதன்முறையாக ரஷ்ய பாதுகாப்பு அமைச்சர் ஷெர்கிய் ஷோய்கு பாகிஸ்தானுக்கு வருகை தந்துள்ளார்.

இரு நாடுகளுக்கிடையே பரஸ்பரம், பாதுகாப்பு உறவுகளை மேம்படுத்திக் கொள்ளும் வகையில் இராணுவ கூட்டுறவு ஒப்பந்தம் கையெழுத்தானது. ஆனால், ஒப்பந்தம் குறித்த வேறெந்த தகவலையும் ரஷ்ய இராணுவ அமைச்சர் வெளியிடவில்லை. ஏற்கனவே, பாகிஸ்தானுக்கு எம்.ஐ. 35 ரக ஹெலிகப்டர்களை ரஷ்யா விற்பனை செய்யவிருப்பதாக கூறப்பட்டது. அதை நிரூபிக்கும் வகையில் ரஷ்ய இராணுவ மந்திரியின் பாகிஸ்தான் பயணம் அமைந்துள்ளது.

அடுத்த மாதம் ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புடின் புதுடில்லிக்கு வருகை தர உள்ளதால் ஷோய்குவின் பாகிஸ்தான் வருகை பற்றி ரஷ்யா எவ்வித முன்னறிவிப்பையும் வெளியிடவில்லை. இதற்கு முன்னதாக கடந்த 1969 ஆம் ஆண்டு ஒருங்கிணைந்த ரஷ்யாவின் பாதுகாப்பு அமைச்சர் ஆன்ட்ரி கிரென்கோ பாகிஸ்தான் வந்திருந்தார்.

# அமெரிக்க நியூயோர்க்கில் பனிப்புயல்



அமெரிக்க நியூயோர்க் மாநிலத்திலுள்ள பவலோ பிராந்தியத்தை கடும் பனிப்புயல் தாக்கியுள்ளது. இதன் காரணமாக பலர் பலியாகியுள்ளனர்.

பல பிரதேசங்களில் 4 அடி முதல் 5 அடி வரையான பனிப் பொழிவு இடம்பெற்றதில், பலர் வீடுகளிலிருந்து வெளியேற முடியாது சிக்கியுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

சில பகுதிகளில் 3 நாட்களில் ஒரு வருட காலத்தில் இடம்பெறும் அளவான பனிப் பொழிவு இடம்பெற்றுள்ளது.

பனிப் பொழிவால் வீடுகள், கட்டடங்கள் ஆகியவை இடிந்து விழுந்துள்ளன.

நெடுஞ்சாலைகள் பனியால் மூடப்பட்டுள்ளதால் வாகனங்கள் செலுத்துவதற்கும் தடை விதிக்கப்பட்டுள்ளது.

# ஜனவரியில் வருகிறார் ஒபாமா



இந்திய பிரதமர் நரேந்திர மோடியின் அழைப்பின்பேரில் அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமா 2015 ஜனவரியில் இந்தியாவுக்கான விஜயத்தை மேற்கொள்ளவுள்ளார் என இந்திய ஊடகங்கள் செய்தி வெளியிட்டு வருகின்றன.

இந்தியாவின் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த இந்திய குடியரசு தின நிகழ்வில் மரியாதைக்குரிய விருந்தினராக ஒபாமா கலந்து கொள்ளவுள்ளார். ஜனவரி மாதம் 25, 26 ஆகிய தினங்கள் ஒபாமாவின் இந்திய விஜய தினம் எனவும் தெரிவிக்கப்படுகிறது. இந்தியாவுக்கு விஜயம் செய்யும் முதலாவது அமெரிக்க ஜனாதிபதி ஒபாமா என்பது குறிப்பிடத்தக்கது.

# பிளேக் நோயினால் 40 பேர் பலி



மடகாஸ்கரில் பிளேக் நோய்த் தொற்றினால் இதுவரை 40 பேர் உயிரிழந்துள்ளதாகவும் மேலும் 80 பேருக்கு இந்த நோய்த் தொற்று ஏற்பட்டுள்ளதாகவும் உலக சுகாதார ஸ்தாபனம் கூறியுள்ளது.

இதனால் தலைநகர் அந்தனாநரிவோவில் பிளேக் நோய் வேகமாக பரவும் அபாயம் அதிகரித்துள்ளதாகவும் அந்த நிறுவனம் எச்சரித்துள்ளது.

முக்கிய பூச்சி மருந்தொன்றுக்கு எதிராக பூச்சி புழுக்கள் தங்களின் எதிர்ப்பு சக்தியை அதிகளவில் வளர்த்துக் கொண்டுள்ளமையே இந்த நோய் பரவல் மோசமடையக் காரணம் என்றும் உலக சுகாதார ஸ்தாபனம் கூறியுள்ளது.

கிருமித் தொற்றுள்ள ஒட்டுண்ணிகள், எலி போன்ற கொறித்துண்ணும் சிறிய உயிரினங்களின் உடலில் ஒட்டியிருக்கின்றன. இந்த உயிரினம் மனிதர்களைக் கடிக்கும்போது புபோனிக் பிளேக் என்ற நோய் மனிதர்களிடத்தில் தொற்றுகிறது.

உலகின் நான்காவது பெரிய தீவு நாடான மடகாஸ்கரின் தலைநகரில் அதிகரித்த சன நெருக்கடி மற்றும் பலவீனமான சுகாதார முறைமை காரணமாகவே இந்த நோய் வேகமாக பரவும் அபாயம் மோசமாக அதிகரித்துள்ளதாக உலக சுகாதார ஸ்தாபனம் கூறியுள்ளது.

# கென்யாவில் பள்ளிவாசல்களுக்கு பூட்டு



கென்யா பொலிஸார் மொம்பாசா நகரில் அமைந்துள்ள பள்ளிவாசல்களுக்கு பூட்டுப் போட்டு பலவந்தமாக மூடியுள்ளதாகவும் இதனால், அங்குள்ள பள்ளிவாசல்கள் வெறிச்சோடிப் போயுள்ளதாகவும் குறித்த பிரதேசத்தில் பதற்றம் அதிகரித்துள்ளதாகவும் அந்நாட்டு செய்திகள் தெரிவிக்கின்றன.

கடந்த வாரம், கனரக ஆயுதந் தாங்கிய துணை பொலிஸ் பிரிவினர் மொம்பாசா நகரில் அமைந்துள்ள மூசா, சகினா, சுவாப்பா மற்றும் மினா பள்ளிவாசல்களில் அத்துமீறி நுழைந்து, அவற்றுக்கு பூட்டுப் போட்டுள்ளதுடன் நூற்றுக்கணக்கானவர்களை கைது செய்துள்ளனர் என மேலும் அந்த செய்திகள் தெரிவிக்கின்றன.

குறித்த மஸ்ஜித்களில் ஆயுதங்கள் இருந்ததாக கென்யா பொலிஸார் குற்றம் சுமத்துவதும் பிரதேச வாசிகள் அதனை முற்றிலும் மறுத்து வருகின்றமையும் குறிப்பிடத்தக்கது.

# எதிராக வாக்களிக்கும் நாடுகள் விளைவுகளை சந்திக்க நேரிடும்

## வடகொரியா எச்சரிக்கை



மனித உரிமை மீறல் குறித்து சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தில் விசாரணைகளை முன்னெடுப்பதற்கு ஆதரவு தெரிவிக்கும் நாடுகள் மிகுந்த அவதானத்துடனேயே செயற்பட வேண்டும் என வடகொரியா தெரிவித்துள்ளது.

தமது நாட்டுக்கு எதிராக வாக்களிக்கும் எந்தவொரு நாடும் அதற்கான பின்விளைவுகளை சந்திக்க நேரிடும் என வடகொரிய ஜனாதிபதி கிம் ஜோங் உன் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

பியோங்யோங் விவகாரத்தில் பொது மக்கள் மீது தாக்குதல் நடத்தப்பட்டமை, கொலை, பாலியல் வன்கொடுமைகள் உள்ளிட்ட மனித உரிமை மீறல்களில் ஈடுபட்டதாக ஐ.நா. பாதுகாப்பு பேரவையில் தெரிவிக்கப்பட்டது.

அத்துடன் இது தொடர்பில் ஹேக்கிலுள்ள சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தில் விசாரணைகள் நடத்தப்பட வேண்டும் என வாக்கெடுப்பின் மூலம் தீர்மானிக்கப்பட்டது. எனினும் இறுதி முடிவு எட்டுவதற்கு ஐ.நா. வில் மற்றுமொரு வாக்கெடுப்பு நடத்தப்பட வேண்டும் எனவும் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது. இந்நிலையில் தமது நாட்டுக்கு எதிராக வாக்களிக்கும் பட்சத்தில் கடுமையான பின்விளைவுகளை எதிர்கொள்ள நேரிடும் என வடகொரியா எச்சரித்துள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரசியல் மாற்றத்தின் தேவையை ஏற்படுத்தியுள்ள சூடானிய ஆட்சிமுறை



ஸகி பவ்ஸ் (நளீமி)

கடந்த மாதம் நடுப் பகுதியில் தேசிய காங்கிரஸ் கட்சியின் நான்காவது அங்கத்தவர் மாநாடு தலைநகர் கார்டூமில் நடைபெற்றது. நடுநிலையான சர்வதேச அரசியல் விற்பன்னர்களும் இஸ்லாமிய சிந்தனையாளர்களும் அங்கு எடுக்கப்பட்ட தீர்மானங்களைமிகக்கடுமையாகவிமர்சனம் செய்கின்றனர். அம்மாநாட்டில் எடுக்கப்பட்ட பிரதான தீர்மானமாக உமர் பஷீர் மீண்டும் 2015 ஆவது வருடம் நடைபெற இருக்கும் ஜனாதிபதித் தேர்தலில் குதிப்பதற்கான அனுமதியை கட்சி உயர்பீட அங்கத்தவர்கள் வழங்கியுள்ளனர். இன்னும், சூடான் ஒற்றை ஆட்சிக்குள்ளான பெடரல் முறைமைக்கு ஊடாகவே ஆட்சி புரியப்படுகிறது. இப்பெடரல் முறைமையில் சில மாற்றங்களை ஏற்படுத்துவதற்கானஅங்கீகாரத்தைஉமர்பஷீருக்கும்கட்சி அங்கத்தவர்கள் வழங்கியுள்ளனர். இத்தீர்மானங்களே அரசியல் விமர்சகர்களுக்கு மத்தியில் கடுமையான விமர்சனத்தை ஏற்படுத்தியவையாகும். இந்தப் பகைப்புலனில், சூடானில் ஆட்சி மாற்றமொன்று ஏற்பட வேண்டும் என்பதற்கு பல்வேறு நியாயங்களை அவ்விமர்சகர்கள் முன்வைக்கின்றனர்.

அதில் முதலாவது, நாட்டின் அரசியல் பொறிமுறை மிகவும் பலவீனமாக இருப்பதாகும். ஒருதலைப் பட்சமான கால் நூற்றாண்டு கால உமர் பஷீரின் ஆட்சி எதிர்க்கட்சிகளை பலவீனப்படுத்தியுள்ளது. இன்னும், தேசிய காங்கிரஸ் கட்சிக்குள்ளும் உமர் பஷீர் பதவியை விட்டும் விலக வேண்டும் என்ற கருத்து வேகமாக பரவி வருகின்றது. இவ்விரண்டு காரணிகளும் இணைந்து உமர் பஷீரின் ஆட்சிக்கு எதிரான புரட்சியொன்றை கட்சிக்கு வெளியிலும் உள்ளளவிலும் ஏற்படுத்தலாம் என ஆரூடம் கூறப்படுகின்றது. இவ்வருட ஆரம்பப் பகுதியில் ஜனாதிபதிக்கு எதிரான புரட்சியின் அறிகுறிகள் வெளிப்படத் துவங்கின. உடனே, உமர் பஷீரின் அரசு ஏனைய எதிர்க்கட்சிகளுடன் இணைந்து தேசிய ஒற்றுமைக்கான கலந்துரையாடல் என்ற பெயரில் நாட்டின் யாப்புச் சீர்திருத்தம் மற்றும் அரசியல் கட்டமைப்பு மாற்றம் தொடர்பான பரஸ்பர கலந்துரையாடல்அமர்வுகளைநடத்தின. அதில் நல்ல பல முடிவுகள் எட்டப்பட்டாலும் கூட, அதன் தீர்மானங்களை உமர் பஷீரே பொருட்படுத்தாமல் நடந்து கொள்வதாக எதிர்க்கட்சிகள் குற்றம் சாட்டுகின்றன. இந்நிலையில் உமர் பஷீர் மீண்டும் ஆட்சிபீட மேறுவது, சூடானிய அரசியல் கலாசாரத்தை முழுமையான படுகுழிக்குல் தள்ளிவிடும் அபாயத்தை உண்டு பண்ணலாம் என அரசியல் ஆய்வாளர்கள் கருதுகின்றனர்.

சூடானில் ஆட்சி மாற்றமொன்று தேவை என்பதற்கான இரண்டாவது நியாயத்தைப் பொறுத்தவரை, உமர் பஷீரின் பொருளாதார செயற்திட்டங்கள் மிகவும் ஆரோக்கியமற்ற நிலையில் காணப்படுவதாகும். குறிப்பாக, தென் சூடானின் பிரிவுடன் நாட்டின் 75 வீதமான எண்ணெய் உற்பத்திக்கான நிலங்கள் கைமாற்றப்பட்டன. அதனோடு இணைந்த வகையில், கார்டூமின் மீது விதிக்கப்பட்டுள்ள பொருளாதாரத் தடையின் அகோர விளைவுகள் நாட்டின் பொருளாதாரத்தை மிகவும் பலவீனப்படுத்தியுள்ளன. அதுமாத்திரமன்றி, தென் சூடானில் தொடரும் அரசியல் ஸ்தீரமற்ற நிலையும் கார்டூமின் பொருளாதார நகர்வுகளை தாக்கியுள்ளது. ஏனென்றால், தென் சூடானின் எண்ணெய் உற்பத்திகளை சர்வதேச சந்தைக்கு பாய்ச்சும் பிரதான வாயிலாக வட சூடானின் துறைமுகங்களே காணப்பட்டன. இது வடக்கு சூடானுக்கான முதன்மை வருமான வழியாகவும் கருதப்பட்டது. சடுதியாக தென் சூடானிய அரசியல் ஸ்தீரமற்ற தன்மை வலிமையடையவே, இவ்வருமானம் பாரியளவில் குறைய ஆரம்பித்தது. போதாமைக்கு, நாட்டில் பயங்கர ஊழல் பரவி வருவதாகவும் சுட்டிக் காட்டப்படுகின்றது. இவ்வாறு உமர் பஷீரின் அரசின் பொருளாதார திட்டமிடல்களின் போதாமையினால், அவரின் கட்சிக்கான மக்களாதரவில் படிப்படியான வீழ்ச்சியை அவதானிக்க கூடியதாக உள்ளதென அல் ஜெஸீரா ஆய்வு நிலையத்திற்கு சமர்பிக்கப்பட்ட கட்டுரையொன்றில் சூடானிய அரசியல் ஆய்வாளர் ஷஹாதா அவ்ல் குறிப்பிடுகிறார். எனவே, நாட்டின் பொருளாதார மந்த நிலையிலிருந்து நாட்டை நகர்த்துவதற்கு புதிய ஒரு ஜனாதிபதியினதும் அரசினதும் தேவை உணரப்படுகிறது.

மூன்றாவது, பாதுகாப்பு காரணங்களுக்காகவும் உமர் பஷீரின் அரசில் மாற்றங்கள் தேவை என வலியுறுத்தப்படுகிறது. தென் சூடானின் பரிவுடன் டார்புர் மற்றும் ஏனைய தென் பகுதி மாநிலங்களில் இயங்கும் ஆயுதக் குழுக்களும் அரசுக்கு எதிராக போர்ப் பிரகடனம் செய்துள்ளனர். அவர்களினதும் பிரிவினை வாத சுலோகங்களுக்கு உளவியல் ஆதரவை தென் சூடானின் பிரிவு வழங்கியுள்ளது. இந்தப் பின்புலத்தில், சூடானின் உள்ளக அரசியலை பலவீனப்படுத்தும் வகையில் சர்வதேச நாடுகள் மூக்கை நுழைப்பதற்கான சாத்தியப்பாடுகள்அதிகமாககாணப்படுகின்றன. ஏற்கனவே, சர்வதேச அரங்கில் உமர் பஷீரின் அரசு கறுப்புப் பட்டியலில் இணைக்கப்பட்டுள்ளமை அறிந்த விடயம். இதனால், சர்வதேச சமூகத்திற்கு முகங்கொடுக்க முடியுமான பலமான சூடானாக கட்டியெழுப்ப வேண்டிய அதீத அவசியப்பாட்டினை சூடான் எதிர்கொண்டிருக்கிறது. இதனை சாதிப்பதற்கு உமர் பஷீரின் அரசு தவறிவிட்டது. எனவே, உடனடியாக அரசியல் மாற்றமொன்றை நோக்கி சூடான் நகர வேண்டும் என வாதிக்கப்படுகிறது.

## உமர் பஷீர் சர்வதிகாரியா?


நாட்டின் பிரதான எதிர்க்கட்சியான ஹிஸ்புல் உம்மா கட்சியின் தலைவர் உஸ்தாத் ஸாதிக் அல் மஹ்தி சர்வதிகாரியற்ற சர்வதிகாரம் (The dictatorship without a dictator) என உமர் பஷீரின் ஆட்சியை வர்ணிக்கிறார். அதாவது, உமர் பஷீர் தனிப்பட்ட முறையில் மிகவும் மக்கள் மயப்பட்ட சிந்தனையை சுமந்தவர். மிகவும் பணிவானவர். அவர் ஓர் இஸ்லாமியவாதி. மேலும், இஸ்லாமிய இயக்க சிந்தனையை சுமந்தவர். ஆனால், அவரின் அரசு சர்வதிகாரத் தன்மையினை கொண்டது என்கிறார் ஸாதிக் அல் மஹ்தி. யதார்த்தம் என்னவென்றால், தனது அதிகாரத்தை நிலைநாட்டிக் கொள்ளும் நோக்கில் சுதந்திரமாக தீர்மானங்களை எடுக்கக் கூடிய பொறிமுறைகளை அரசுக்குள்ளும் கட்சிக்குள்ளும் அதி சாணக்கியம் மிக்க முறையில் உமர் பஷீர் வடிவமைத்திருக்கிறார். இதனால், உமர் பஷீரின் தீர்மானங்கள் மற்றும் அடுத்த கட்ட நகர்வுகள் பற்றிய யோசனைகள் மிகவும் வசதியாக கட்சிக்குள்ளும் பாராளுமன்றத்திற்குள்ளும் அங்கீகரிக்கப்படும் நிலை காணப்படுகிறது.

உதாரணமாக, தேசிய காங்கிரஸ் கட்சியின் உள்ளக கட்டமைப்பின் உயிர்ப்பை பேணும் வகையில் தலைமை பீடத்தில் அடிக்கடி மாற்றங்களை உமர் பஷீர் மேற்கொள்கிறார். கடந்த நான்காவது அங்கத்தவர் மாநாட்டிலும் இத்தகைய பிரதான புள்ளிகள் தலைமை பீடத்திலிருந்து வெளியேற்றப்பட்டதுடன், புதிய இரண்டாம் கட்ட உறுப்பினர்கள் கட்சியின் உயர்பீடத்திற்கு தெரிவு செய்யப்பட்டனர். இதனை கட்சியின் ஆதரவாளர்கள் தேசிய காங்கிரஸ் கட்சியின் ஆரோக்கியத்தன்மையை சுட்டிக் காட்டும் ஆதாரமாக குறிப்பிடுகின்றனர். ஆனால், கட்சியின் உள்ளக ஒருமைப்பாட்டை பலப்படுத்தும் இந்த இராஜதந்திரத்தை விமர்சனம் செய்கின்றனர். ஏனென்றால், கட்சியின் பிரதான புள்ளிகள் தலைமை பீடத்திலிருந்து வெளியேற்றப்படுவதனால் கட்சியின் ஆலோசனை சபையில் உமர் பஷீரின் அனுபவத்திற்கும் வலிமைக்கும் சவாலான புள்ளிகள் இல்லாமல் செய்யப்படுகின்றன. எனவே, எந்தத் தேர்தல் வந்தாலும் உமர் பஷீரைத் தவிர, வேறு தெரிவு இல்லை என்ற கோஷமே ஆலோசனை சபையில் ஓங்கி ஒலிக்கிறது. கடந்த பேராளர் மாநாட்டில் கூட, ஏற்கனவே கட்சியின் உயர்பீடத்தில் உமர் பஷீருக்கு சவாலாக இருந்த உஸ்மான்தாஹா போன்றவர்கள் பதவி மாற்றம் செய்யப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது. அதே போன்று, பாராளுமன்றத்தில் 90 வீதத்திற்கும் அதிகமான ஆசனங்களை உமர் பஷீரின் தேசிய காங்கிரஸ் கட்சியே கைப்பற்றியுள்ளது. இன்னும், சூடானின் மிகப் பெரும் இஸ்லாமிய இயக்கமான சூடான் இஸ்லாமிய இயக்கத்தின் தலைவராகவும் உமர் பஷீரே செயற்படுகிறார். இத்தகைய நாட்டின் பிரதான நிறுவனங்களை உமர் பஷீர் தன் கரங்களுக்குள் வைத்திருப்பதே சூடானின் அரசியல் மாற்றத்திற்கான பிரதான தடை என்றும் குறிப்பிடலாம்.

## எதிர்க்கட்சிகள் பலவீனம்

சூடானிய அரசியல் பொறிமுறையை பலவீனப்படுத்துவதில் எதிர்க்கட்சிகளுக்கு நியாயமான பங்கிருக்கிறது. காரணம், சூடானிய எதிர்க்கட்சிகள் அனைத்தும் இணைந்து உமர் பஷீரின் ஆட்சிக்கு எதிரான விசையை கொடுப்பதற்கு முடியாதளவு பலவீனமாகக் காணப்படுகின்றன. குறிப்பாக, ஹிஸ்புல் உம்மா கட்சிக்குள் பிளவுகள் காணப்படுகின்றன. சிலர் அரசுடன் இணைந்து செல்ல வேண்டும் என வாதிக்கின்றனர். வேறு சிலர் அரசின் திட்டங்களை பகிஷ்கரிக்க வேண்டும் என குறிப்பிடுகின்றனர். ஹிஸ்புல் உம்மா கட்சியின் உறுப்பினர்களுக்கு மத்தியில் காணப்படும் இப்பிளவுகள் காரணமாக தேசிய கலந்துரையாடல் அமர்வுகளில் கூட அக்கட்சி பங்கேற்கவில்லை. இன்னும், அரசினை பலவீனப்படுத்துவதற்கான உடன்படிக்கைகளில் ஹிஸ்புல் உம்மா கட்சியின் சிலர் பிரிவினை வாதக் குழுக்களுடன் கைச்சாத்திட்டனர். இம்முயற்சி மக்களுக்கு மத்தியில் பிரதான எதிர்க்கட்சியின் ஆதரவை சுருங்கச் செய்தது. மறுபுறம், நாட்டின் அரசியல் மாற்றம் தொடர்பாக தேசிய மக்கள் காங்கிரஸ் கட்சியின் தலைவர் கலாநிதி ஹஸன் துராபி வேறொரு சிந்தனையில் காய் நகர்த்துகிறார். அதாவது, தற்போதைய சூடானின் அரசியல் நிலைவரங்களுக்கு அமைய, அரசுக்கு எதிராக செயற்பட முடியாது. எனவே, அரசுடன் பேச்சுவார்த்தைகளை நடத்துவதினூடாகவே மாற்றங்களை சாதிக்கலாம் என ஹஸன் துராபி கருதுகிறார். இவ்வாறு நாட்டின் அரசியல் எதிர்காலம் பற்றிய பிரதான எதிர்க்கட்சிகளுக்குள் நிலவும் பிளவுகள் உமர் பஷீரை பலப்படுத்துகின்றன என்பதே உண்மை.

சூடானின் ஆரோக்கியமான அரசியல் எதிர்காலத்தை பற்றி சிந்திக்கும்போது உமர் பஷீர் தனது அதிகாரத்தை விட்டுக் கொடுப்பது இன்றியமையாதது என பலமுன்னணி இஸ்லாமிய சிந்தனையாளர்களான கலாநிதி அஹ்மத் ரைசூனி மற்றும் முஹ்தார் அஷ்ஷங்கீதி போன்றவர்கள் கருத்துச் சொல்கின்றனர். அவ்வாறு நடைபெற்றால் முழு மொத்த பிராந்திய இஸ்லாமியக் கட்சிகளுக்கும் அது முன்மாதிரியாகவும் அமையும் என அவர்கள் வாதிக்கின்றனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Firefox

# பயர்பொக்ஸ் பாதுகாப்பு

இன்டர்நெட் பயன்படுத்துபவர்கள், குறிப்பாக பிளாக்குகள் அமைப்பவர்களிடையே, பயர்பொக்ஸ் பிரவுசர் தொகுப்பு மிக வேகமாக பிரபலமாகி வருகிறது. நம் விருப்பங்களுக்கு ஏற்றபடி அமைத்துக் கொள்ளக் கூடிய வசதி, பயன்படுத்த எளிமையான இன்டர்பேஸ், நம்பிக்கை தரும் இயக்க தன்மை ஆகிய இதன் சிறப்புகள், பலரை இன்டர்நெட் எக்ஸ்புளோரரை விட்டு இதனைப் பயன்படுத்தத் தூண்டுகின்றன. அனைத்து இன்டர்நெட் பிரவுசர்களும் கட்டாயம் பாதுகாக்கப்பட வேண்டிய சூழ்நிலையில் உள்ளன. ஏதேனும் ஒரு வகையில் வைரஸ் புரோகிராம்கள் மற்றும் கெடுதல் விளைவிப்பதற்காகவே எழுதப்படும் புரோகிராம்கள் பிரவுசர் வழியாக வந்துவிடுகின்றன. பொதுவாக, ஏதேனும் ஒரு புரோகிராமினை டவுண்லோட் செய்கையில் அடிப்படையில் ஒரு சில பாதுகாப்பு முறைகள் செயற்படுத்தப்படுகின்றன. ஆனால், இவை பழகிப் போனதால், கெடுதல் விளைவிக்கும் புரோகிராம்களை அனுப்புபவர்கள் இவற்றை மீறிச் செயற்படும் வகையில் அவற்றை வடிவமைத்து விடுகின்றனர். எனவே, தொடர்ந்து பிரவுசரைப் பாதுகாக்கும் வகையில் நாம் அதனைப் பலப்படுத்த வேண்டியுள்ளது.

பயர்பொக்ஸ் பிரவுசருக்கென வடிவமைக்கப்பட்டுள்ள பல ஆட் ஆன் தொகுப்புகளும் கூடுதல் பாதுகாப்பு தரும் வகையில் உருவாக்கப்பட்டு கிடைக்கின்றன. இவற்றையும் பயர்பொக்ஸ் ஏற்றுக் கொள்கிறது. வங்கிக் கணக்குகள் கையாளுதல், ஒன்லைனில் பொருட்களை ஓடர் செய்து வாங்குதல், அவற்றிற்குப் பணம் செலுத்துதல், சோஷியல் நெட்வொர்கிங்கில் நண்பர்களுடன் தொடர்பு கொள்ளல், கல்வி கற்றல் போன்ற பணிகளில் நாம் இன்டர்நெட்டினைப் பயன்படுத்துதல் போன்றவற்றில் ஒரு பாதுகாப்பான சூழ்நிலை நமக்கு அவசியமாகிறது.

மொஸில்லா பயர்பொக்ஸ் பிரவுசருக்கு அதிக பாதுகாப்பு தரும் வகையில் தரப்பட்டுள்ள ஆட் ஆன் தொகுப்புகளிலிருந்து சிறப்பாக செயற்படும் சில தொகுப்புகளின் பட்டியல் இங்கு தரப்படுகிறது.

**அட் ப்ளொக் ப்ளஸ் (AdblockPlus)**

இந்த ஆட் ஆன் தொகுப்பு வாரந்தோறும் ஏறத்தாழ 8 இலட்சம் பேரால் டவுண்லோட் செய்யப்பட்டு பயன்படுத்தப்படுகிறது. பேனர்கள், விளம்பரங்களைத் தாங்கி வரும் பாப் அப் விண்டோக்களை முற்றிலுமாய்த் தடுக்கிறது. கிடைக்கும் இணையதள முகவரி: http://addons.mozilla.org/enUS/firefox/addon/1865 இந்த தொகுப்பைப் பதிந்த பின்னர், ஏதேனும் பேனர் விளம்பரம் வந்தால், அதன் மீது ரைட் கிளிக் செய்திடுங்கள். கிடைக்கும் கான்டெக்ஸ்ட் மெனுவில் Adblock Plus என்பதைத் தேர்ந்தெடுங்கள். அந்த பேனர் மீண்டும் ஒரு முறை அந்த கம்பியூட்டரில் டவுண்லோட் செய்யப்பட மாட்டாது. அல்லது தொகுப்பை முதலில் பயன்படுத்தத் தொடங்குகையில் பில்டர் பயன்பாட்டினை இயக்கிவிட்டால் இதுபோன்ற பேனர் விளம்பரங்களை அண்டவிடாது.

**பெட்டர் பிரைவெசி (Better Privacy)**

பொதுவாக, குக்கிகளால் (Cookie) நமக்கு சில நன்மைகள் இருந்தாலும், பல குக்கிகள் நம் கம்பியூட்டரை வேவு பார்க்கும் வேலைக்கே அனுப்பப்படுகின்றன. இவற்றை நம் பிரவுசிங் முடிந்த பின்னர் அழித்துவிடலாம். ஆனால் சில குக்கிகள் அழிக்கப்பட முடியாத வகையில் உருவாக்கப்பட்டு பதிக்கப்படுகின்றன. இவற்றை சூப்பர் குக்கிகள் என அழைக்கின்றனர். இவற்றிலிருந்தும் பாதுகாக்கும் வேலையை இந்த ஆட் ஆன் புரோகிராம் தருகிறது. இந்த ஆட் ஆன் புரோகிராமை https://addons.mozilla. org/enUS/firefox/addon/6623 என்ற முகவரியிலிருந்து டவுண்லோட் செய்து கொள்ளலாம். இந்த பிளாஷ் குக்கிகளை எல்.எஸ்.ஓ. குக்கிகள் எனவும் அழைக்கின்றனர். இவை நம் கம்பியூட்டரில் எப்போதும் நிரந்தரமாக இருக்கும் வகையில் பதியப்படும். ஒரு குக்கியின் அளவு 100 கே.பி. வழக்கமான சாதாரண குக்கியின் அளவு 4 கே.பி. மட்டுமே. இந்த குக்கிகளை பிரவுசர்கள் அறிவதில்லை. எல்.எஸ்.ஓ. குக்கிகளை பிரவுசர்களாலும் அழிக்க முடிவதில்லை. இந்த வகை குக்கிகள் சிஸ்டத்தில் பதிந்து வைக்கப்பட்டுள்ள தகவல்களை எளிதாகப் பெற்று, நாம் அறியாமலேயே மற்ற கம்பியூட்டருக்கு அனுப்பும் தன்மை கொண்டவை.

பிளாஷ் குக்கிகள் எப்போதும் சென்ட்ரல் சிஸ்டம் போல்டரில்தான் பதியப்படுகின்றன. எனவே இவை நீக்கப்படாது. நீக்குவதும் சிரமம். Better Privacy புரோகிராம் ஒவ்வொரு முறை நீங்கள் பிரவுசரை மூடும்போது, இவை அனைத்தையும் நீக்கிவிடுகிறது. அல்லது ஒவ்வொரு பிளாஷ் குக்கியாக இந்த புரோகிராம் மூலம் பெற்று அவற்றை நீக்குவதா, வைத்துக் கொள்வதா? என நீங்கள் தீர்மானிக்கலாம்.

ஹஸன் இக்பால் – யாழ்ப்பாணம்


(தொடரும்...)




# விந்தை மிகு மனித உடலைப் பற்றி தெரிந்து கொள்வோமா?

சிரிக்கத் தெரிந்த ஒரே விலங்கு மனிதனாவான். மனித உடலின் சராசரி வெப்பநிலை 98.4 பரனைட் அல்லது 37 செல்சியஸ் ஆகும். மனித உடலில் மிகப் பெரிய உறுப்பு கல்லீரலாகும். மிகப் பெரிய அங்கம் தோல். மிகப் பெரிய சுரப்பி ஈரல். மனித மூளையில் 85 சதவீதமான நீர் உள்ளது. மூளை அதிகமாக வேலை வாங்கும் உறுப்பு கட்டை விரல். மூளை அதிகமான செல்களால் உருவாக்கப்பட்டது. அது மட்டுமல்லாது ஆண்களின் மூளை பெண்களின் மூளையை விட பெரியது. ஒரு நிமிடத்துக்கு 6 இலட்சம் தகவல்களை நரம்பு மண்டலம் மூளைக்கு அனுப்புகின்றது.

உடலிலுள்ள மொத்த என்புகள் 207 ஆகும். 45 பிரதான நரம்புகளும் 250 மூட்டுக்களும் 7450 தசைகளும் காணப்படுகின்றன. புன்னகைக்கும்போது 17 வகையான தசைகள் மட்டுமே தொழிற்படுகின்றன. ஆனால் கோபத்தில் முகத்தை சுளிக்கையில் 43 வகையான தசைகள் தொழிற்படுகின்றதாம். 22 வயதிற்கு பிறகு என்புகள் வளர்வதில்லை. அது போல 12 வயதிற்கு பிறகு விழுந்த பற்களும் முளைப்பதில்லை. மனித உடலில் மிக நீளமான என்பு, தொடை என்பு. இது 48 செ.மீ. நீளம் உடையது. உடலிலுள்ள மிகச் சிறிய என்பு காதிலுள்ள சம்மட்டி என்பு ஆகும். ஒரு நாளைக்கு தலைமயிர் 0.001714 அங்குலம் வளரும். நகம் 0.000046 அங்குலமே வளரும். ஒரு நாளைக்கு ஒரு மனிதன் 4800 வார்த்தைகள் பேசுகின்றான். ஒரு நாளில் இதயமானது 103689 தடவைகள் துடிக்கின்றன.



மனித உடலின் முள்ளந்தண்டிலுள்ள என்புகள் 33, கையிலுள்ள என்புகள் 27 ஆகும். மனித உடலில் ஒரு நிமிடத்துக்கு சராசரியாக 300 கோடி அணுக்கள் செத்து மடிகின்றன. ஒரு மனிதனின் தலையில் சுமார் 1 இலட்சம் முடிகள் இருக்கும். இதயத்தின் நிறை 280 கிராம். வளர்ந்த ஒருவரது உடலில் 4.75 லீ. குருதி காணப்படும். இரத்தம் மனித உடலில் 16 கோடி 80 இலட்சம் மைல்கள் பயணிக்கிறது. குருதியிலுள்ள செங்குருதி துணிக்கைகள் உடலில் செல்ல 20 செக்கன்களே எடுக்கும்.

மனித உடலில் இரத்தம் பாயாத ஒரேயொரு பகுதி கருவிழிகள். மனித உடலில் இரட்டைக் குருதி சுற்றோட்டம் இல்லாத பகுதி விழித்திரை. காரணம் இப்பகுதி நேரடியாகவே ஒட்சிசனை பெற்றுக் கொள்ளும். கண்மணியின் உச்சவிட்டம் 8 மி.மீ. ஆகும். கண்ணின் அண்ணளவான விட்டம் 2.5 செ.மீ. மனிதக் கண்ணில் 6 வகையான கண் தசைகள் இணைந்துள்ளன. கண்ணீரும் ஒரு வகையான கிருமி நாசினி தான். ஒரு மனிதன் சராசரியாக 250 மில்லியன் முறை கண் சிமிட்டுவான். கண் சிமிட்டுவதால் ஒரு மனிதன் சராசரியாக ஒரு நாளைக்கு அரை மணிநேரம் கண்ணை மூடியே வைத்திருக்கிறான். மனித உடலில் வியர்க்காத பகுதி உதடு. நோய் ஏற்பட்டால் தானாகவே குணமடைய முடியாத பகுதி பற்கள். மனித உடலில் பலத்த தசை கொண்ட பகுதி நாக்கு. மனிதர்களினால் 10,000 வகையான வாசனைகளை நுகர்ந்து அறிந்து கொள்ள முடியும்.

அஸ்னா பிஷ்ரி
களு/ நளீம் ஹாஜியார் மகளிர் கல்லூரி
பேருவளை

## தெரிந்து கொள்வோம்

பழ மரங்களில் நீண்ட காலம் விளைச்சல் தருவது ஆரஞ்சு மரம். சுமார் 400 ஆண்டுகளாக தொடர்ந்து அது விளைச்சல் தரும்.

உலகிலேயே மிகச் சிறிய மரம் குட்டை வில்லோ மரம். அதன் உயரம் இரண்டே அங்குலம்தான்.

பொதுவாக தாவரங்கள் நகராது. ஆனால் கிலாமிடோமொனாஸ் என்ற ஒரு செல் தாவரம் நகர்ந்து போகும் தன்மை உடையது.

பச்சோந்தியின் நாக்கு, தன் உடலின் நீளத்தை விட இரண்டு மடங்கு அதிகமாக இருக்கும்.

நாக்கை நீட்ட முடியாத ஒரே விலங்கு முதலை.

நீல திமிங்கலத்தின் எடை 22 யானைகளின் எடைக்கு சமம். அதன் இதயம் ஒரு சிறிய கார் அளவில் இருக்கும்.

ஒரு புள்ளி அளவு இடத்தை எழுபதாயிரம் அமிபாக்களால் நிரப்ப முடியும்.

தரையில் முதுகு படும்படி உறங்கும் ஒரே உயிரினம் மனிதன்.

முன்னால், பின்னால் பக்கவாட்டில் என அனைத்து பக்கங்களிலும் பறக்க முடிந்த பறவை தேன்சிட்டு.

தேன்சிட்டு, மரங்கொத்தி போன்ற பறவைகளுக்கு நடக்க தெரியாது.

புற்றுநோய் உட்பட எந்த நோயுமே வராத ஒரே உயிரினம் சுறாமீன். நீந்துவதை நிறுத்தினால் உடனே இறந்துவிடும் ஒரே மீன் சுறாமீன்.

தயிராக மாற்ற முடியாத ஒரே பால் ஒட்டகப் பால்.

ஒட்டகத்தை விட அதிக நாட்கள் தண்ணீரின்றி வாழும் ஓர் உயரினம் கங்காரு, எலி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர் நல்ல மருந்து



இம்லா இக்பால்
நாம்புளுவ, பஸ்யால

துன்பத்தை விரட்டியடிக்க இறைவன் அளித்த பெரும் அருட்பேறுதான் சிரிப்பும் அழுகையும். கண்ணீர் இல்லாத அழுகை இதயத்தை உடைத்தெறியும் சம்மட்டியாகும். இறைவன் கண்ணீரைப் படைத்தது இதயத்தில் அதிகமான கவலை ஏற்பட்டால் அதை வெளிப்படுத்துவதற்காகவே ஆகும். எப்படியாவது தன் துக்கத்தை, அழுது வெளியே கொட்டிவிட வேண்டும். இவ்வாறு செய்தால் மனதிலுள்ள பெரும் பாரம் நீங்கி வாழ்க்கையை வழக்கம் போல் கழிக்க முடியும்.

கண்ணீரானது பலவீனத்தின் அறிகுறி என்று சிலர் சொல்கிறார்கள். ஆனால், அதில் சில போது மகத்தான ஆற்றல் உள்ளதாக தெரிகின்றது. கண்ணீரானது ஆயிரம் நாவுகளால் பேசுவதை விட வன்மையாக முழங்குகிறது. அது அளவற்ற துக்கம், பாவமன்னிப்பு, வெளியே எடுத்துரைக்க இயலாக் காதல், பிரியம், துயரம், கவலை ஆகியவற்றின் தூதாக விளங்குகின்றது. கண்ணீரின் மீது தோன்றுகின்ற புன்முறுவலானது சாதாரணப் புன்முறுவலை விட மேலானதாக விளங்குகிறது. தன்னுடைய பாவங்களை நினைத்து ஒருவன் வடிக்கும் கண்ணீர் அவனுடைய ஆன்மாவில் நற்குண வித்துக்கள் முளையிட மழை பெய்வது போன்றுள்ளது.

ஓர் அறிஞர் கூறியது போன்று, மனிதர்கள் இறைவனைக் காண்பதற்கான தொலைநோக்கி கண்ணாடியாகவும் கண்ணீர் விளங்குகின்றது. எவ்வாறு காலையிலும் மாலையிலும் பனி பெய்கின்றதோ அதுபோன்று மனிதனின் இளமைப் பருவத்திலும் முதுமைப் பருவத்திலும்தான் அழுகை அதிகமாக ஏற்படுகின்றது. ஆனால் ஒரு மனிதன் தன்னுடைய நடுப் பருவத்தில் அழ வேண்டிய சூழ்நிலை ஏற்படும்போது அழவில்லையாயின் அவன் ஒரு காட்டுமிராண்டியேயாவான் என்று ஓர் அறிஞர் கூறுகிறார். அழுகையை அடக்கி னால் சில வேளை மனிதன் ஏக்கமும் பைத்தியமும் பிடித்தவனாகி விடுவதோடு இதயம் வெடித்து இறந்துவிடவும் ஏதுவாகும்.

கண்ணீரில் இரண்டு வகையுண்டு. ஒன்று, மகிழ்ச்சிக் கண்ணீர். மற்றொன்று, துக்கக் கண்ணீர். மகிழ்ச்சி அதிகப்பட்டாலும் துக்கம், துயரம் அதிகரித்தாலும் கண்ணீர் வடிகிறது. மகிழ்ச்சிக் கண்ணீர்தான் முதல் தரமானது. சிரித்தாலும் கண்ணீர் வரும் அழுதாலும் கண்ணீர் வரும். கண்ணீர் வெளிப்படும்போது கண்ணிலுள்ள தூசி, கிருமிகள், அழுக்குகள் என்பன வெளியேற்றப்படுகின்றன.

## பெண்கள் தேசம்

தயாரிப்பு: சமீலா யூசுப் அலி

# சமையலறைப் பக்கம் முதல் பயணமா?



பெண்கள் படிப்பு, வேலை என்று இறங்கி விட்டதால் சமையல் அறை அவர்களுக்கு கொஞ்சம் தூரமாகிவிட்டது. திருமணம் நிச்சயிக்கப்பட்ட பின் சமைக்கப் பழகுவதும் திருமணத்திற்குப் பிறகு சமைக்கப் படிப்பவர்களும் ஏராளம். பல பெண்கள் சமையல் கற்றுக் கொள்வதற்காக பயிற்சி வகுப்புகளுக்கு கூட செல்கிறார்கள்.

எது எப்படியோ, நீங்கள் இப்போது தான் 'கிச்சன்' பக்கம் முதன் முதலாக போகிறீர்கள் என்றால் உங்களுக்கு நிறையவே தயக்கம் வரும். அந்த தயக்கத்தை விரட்ட சில டிப்ஸ்:

- என்ன சமைக்கப் போகிறோம் என்பதை முதலில் முடிவு செய்து விடுங்கள். அதற்கு தேவையான பொருட்களையும் பட்டியலிடுங்கள். பிறகு தோலை உரிக்க வேண்டியது, வெட்டி துண்டுகளாக்க வேண்டியது, அரைத்து பக்குவப்படுத்த வேண்டியது என்பன போன்ற வேலைகளை செய்து விடுங்கள். அதன் பிறகு அடுப்பை பற்ற வையுங்கள்.

- உதவிக்கு ஏற்கனவே சமையல் அனுபவம் உள்ளவர்களையோ அல்லது சமையல் புத்தகங்களையோ பக்கத்தில் வைத்துக் கொள்ளுங்கள். உதவிக்கு புத்தகமோ, ஆட்களோ இல்லாவிட்டால் கூட உங்கள் மீது நம்பிக்கை வைத்து களத்தில் இறங்கி விடுங்கள்.

- நம்பிக்கையுடன் சமைத்துவிட்டு ருசி வைத்துப் பார்க்கும் போதுதான் உப்பு, உறைப்பு கூடியிருப்பது தெரியவரும். கவலையே படாதீர்கள். நேரமும் அனுபவமும் சிறந்த ஆசிரியர்கள் என்பதை நினைவில் வைத்துக் கொண்டு, தொடர்ந்து சமைத்துப் பாருங்கள். தவறுகளை மெல்ல மெல்ல திருத்திக் கொள்ளலாம்.

- சமையலுக்கு முக்கியமானது பொருட்களின் அளவுதான் என்பதை நினைவில் வைத்துக் கொள்ளுங்கள். எது, எது தேவை என்பதைப் போலவே அவற்றை எந்த அளவில் பயன்படுத்த வேண்டும் என்பதையும் மறக்கக் கூடாது. அதற்காக கரண்டி, கப் மற்றும் பாத்திரங்களின் அளவுகளை ஞாபகத்தில் வைத்திருப்பதன் மூலம் ஒவ்வொன்றின் அளவையும் மாற்றிவிடாமல் பயன்படுத்த முடியும்.

- முதன் முதலாக சமைக்கும்போது எளிதாக சமைக்க முடிந்ததும், குறுகிய நேரங்களில் சமைக்கக் கூடியதுமான குழம்புகளை வைத்துப் பழகுங்கள்.

அப்புறமென்ன? சீக்கிரமே நீங்களும் நன்றாக சமைக்கக் கூடியவராக மாறி விடுவீர்கள்.

## ஆரோக்கிய தேசம்

# உடல் நோயுறுவது போல் உளமும் நோயிவாய்ப்படும்

ஆரோக்கியமான வாழ்வுக்கு உடல் நலத்தை போல மன நலமும் முக்கியம். உலகில் 35 கோடி பேர், மனோநிலை பாதிக்கப்பட்டவர்களாக வாழ்கின்றனர் என்று ஆய்வுகள் தெரிவிக்கின்றன.

ஆரோக்கியமாக வாழ்தல் என்பதில் உடல் மட்டும் நோயற்று இருப்பதில்லை. மனமும் நோயற்றிருக்க வேண்டும். குடும்பம், சமூகம் அத்தோடு ஆன்மீகமும் நன்நிலையில் இருப்பதையே ஆரோக்கியமாக வாழ்தல் குறிப்பிடுகிறது.

உடல் நோயுறுவது போல் உளமும் நோய்வாய்ப்படும் தன்மையுள்ளது. உடல், உள நோய்கள் இரண்டும் ஒன்றாகத் தோன்றும் சந்தர்ப்பங்கள் அதிகமாக காணப்படுகின்றன. அன்றாட வாழ்வில் பிரச்சினைகளால் எழும் துன்ப துயரங்களில் இருந்து மீண்டு வாழ உளநலன் அனைவருக்கும் இன்றியமையாததாகும்.

முன்னைய காலங்களில் தொற்று நோய்களுக்கு எதிராக போராடிய மருத்துவ உலகம், இன்று உள நோய்களுக்கு எதிராகவும் போராட நிர்ப்பந்திக்கப்பட்டுள்ளது.

உள நோய்கள் பொதுவாக மைய நரம்புத் தொகுதியிலேயே ஏற்படுகின்றன. உதாரணமாக: உள பிரழ்வு நோய் பாரிய உள நோயாகும். சனத்தொகையில் 2 வீத மானவர்கள் இந்நோயுடன் வாழ்வதாக அறிக்கைகள் தெரிவிக்கின்றன. இந்நோயாளியின் சிந்தனைகள், பேச்சுவழக்கு, பார்வை, உணர்வுகளை உணர்ந்து கொள்ளும் விதம் மாறுபட்டவையாகவும் மாயமான தோற்றங்களை காண்பவையாகவும் அமையும்.



பெரும்பாலும் கட்டிளமைப் பருவத்தில் இந்நோய் ஏற்படலாம்.

ஏதாவதுதொரு தோல்வியால் ஏற்படும் கவலை, பதற்றம், வெட்கம், குற்ற உணர்வு, பயம் அன்புக்குரியவரின் மரணத்தினால் ஏற்படும் அதிர்ச்சி, சமூக உறவில் சிக்கல்கள் போன்றன மனோநிலையைப் பாதிப்பதும் இந்நோய் வருவதற்கு தூண்டுகோலாக அமையலாம்.

காதல் தோல்வி, வேலையின்மை, தனிமை, வாழ்க்கையில் ஏற்படும் எதிர்பாராத ஏமாற்றங்கள், இழப்புகள் முதலிய உளவியல் காரணங்களும் மனநோய்க்கு வித்திடலாம்.

மேலும் மது, கஞ்சா, போதை மாத்திரைகளின் தொடர் உபயோகம், தொடர்ச்சியான தூக்கமின்மை, உடலில் சேரும் நச்சுப் பொருட்களினாலும் உளநோய் ஏற்படலாம். கணவன் தனது குடும்பத்தில் அக்கறை காட்டாமை, கணவன் - மனைவி வாழ்வில் ஏற்படும் கசப்புத் தன்மையும் குடும்பம் எனும் பிணைப்பில் தளர்வுகள் ஏற்படுவதும் உளநலப் பிரச்சினைகளே.

இவ்வாறான உளநலப் பிரச்சினைகள் அதிகரிக்கின்ற போது தற்கொலை செய்யும் மனோநிலையும் அதிகரிக்கின்றது.

### உள நோய்க்கான அறிகுறிகள்

குழப்பமான, உண்மைக்குப் புறம்பான சிந்தனை, தனக்குத்தானே பேசிக் கொள்ளுதல், காரணம் ஏதுமில்லாமலே சிரிப்பது, அழுவது, தொடர்ந்து நெடுநேரம் கவலையாக சிடுசிடுப்புடன் இருத்தல், அளவுக்கு அதிகமாகவோ, குறைந்தோ உணர்ச்சி வயப்படுதல், அளவுக்கு அதிகமான அச்சம், கவலை, ஏக்கம், சமூகப் பின்னடைவு, உண்ணுதல், உறங்குதல் வழமைக்கு மாற்றமான நடத்தை, கோபம், மாயக் காட்சிகள், நாளாந்த செயல்களில் சரிவர ஈடுபட முடியாமை, தற்கொலை எண்ணம், அளவு கடந்த கவலையும் குற்ற உணர்வும்.

### உள நோயைத் தடுப்பதற்கான வழிகள்

உள நோயைத் தடுப்பது அவசியமாகும். முதலாவதாக உளவள ஆலோசகர்கள் மூலம் மனநோய்களுக்கான காரணத்தை கண்டறிய வேண்டும். அதன் பின்னர் இந்நோயை குணப்படுத்த சிகிச்சை மற்றும் ஆரோக்கியமான மனநலம் வளரக் கூடிய சூழ்நிலைகளை ஏற்படுத்துதல் வேண்டும். உள நோய்களைத் தடுப்பதற்கான சமூக சார்புடைய பாதுகாப்பு முறைகளையும் பயன்படுத்துதல் வேண்டும்.

உளவள ஆலோசனை அல்லது உதவி மற்றும் வழிகாட்டல் வழங்குவதற்காக பிரதேச செயலகத்திலும் உளவள ஆலோசகர்கள் இணைக்கப்பட்டுள்ளார்கள். இவர்கள் ஒவ்வொரு பிரதேச மட்டத்தில் உளப் பாதிப்புக்குள்ளானவர்களை இனங்கண்டு உளவள முறைமைகள், சிகிச்சைகள் மற்றும் ஆலோசனைகளை வழங்கி வருகின்றனர். இவர்களை அணுகுவதன் மூலமும் இந்நோயைக் குணப்படுத்துவதற்கான, வழிகாட்டல்களையும் சேவைகளையும் இலகுவாக பெற்றுக் கொள்ள முடியும்.

றினோஸ் ஹனீபா,
உளவள ஆலோசகர்,
பிரதேச செயலகம் கல்முனை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அதிகரித்து வரும்...

(05 ஆம் பக்கத் தொடர்)

இப்படியிருக்க 200 இலட்சம் மக்கள் மத்தியில் சுமார் 20 இலட்சம் சிறுபான்மையினராக, இந்த நாட்டில் வாழும் முஸ்லிம்களையும் அவர்கள் உயர் தரமாக மதிக்கும் அல்குர்ஆனையும் சவாலுக்கு உட்படுத்தும் காரியங்கள் சாமானியமானவையல்ல. புனித அல்குர்ஆன் குறித்த விமர்சனங்களுக்கு பதிலளிக்க வேண்டியவர்களும் அதனைப் பாதுகாக்க கடப்பாடு கொண்டவர்களும் இலங்கை முஸ்லிம்கள் மாத்திரமல்ல. இது உலகளாவிய முஸ்லிம்களோடு தொடர்புபட்ட விடயம். இதில் ஒரு பகுதியே இலங்கை முஸ்லிம்கள். ஆனால் இங்கு வலியுறுத்தப்படுகின்ற இலங்கை முஸ்லிம்களின் பூர்வீகம் தொடர்பான முரண்பட்ட கருத்துக்களுக்கும் கூற்றுக்களுக்கும் இலங்கை முஸ்லிம்கள் ஆவண ரீதியாக பதிலளிக்கக் கடமைப்பட்டுள்ளார்கள்.

இந்த நாட்டில் அடுத்த 2015 ஆம் ஆண்டை நோக்கிய முஸ்லிம்களின் வாழ்க்கை என்பது நூலில் நடப்பதைப் போன்றதாக இருக்கிறது. 1915 ஆம் ஆண்டின் அந்த இருண்ட நாட்களை நினைவுபடுத்துவதன் மூலம் கால சூழல் கருதி அவதானம், பொறுமை, சகிப்புத் தன்மை, விட்டுக் கொடுப்பு என்பன வழமையை விட இன்னும் அதிகமாகவே வேண்டி நிற்கப்படுகின்றன. இதனால் முஸ்லிம்களுடைய ஆளுமை, தனித்துவம் கொஞ்சம் இழக்கப்படலாம். எனினும் இன்னும் எத்தனை காலத்துக்குத்தான் இந்த நாட்டு முஸ்லிம்கள் குனிந்து, நிமிர்ந்து, வளைந்து, நெளிந்து வாழ்ந்து கொண்டிருப்பது? இப்படியான வாழ்க்கை முறை தற்காலிகமானதாக இருக்கலாமே தவிர, இதுவே காலம் பூராகவுமான வாழ்க்கையாக இருக்க முடியாது.

நாட்டில் முஸ்லிம்களுக்கு இருக்கின்ற சில உரிமைகளை வரப்பிரசாதங்களாகக் கூறி பெருமைபட்டுக் கொண்டிருக்காமல் இழந்து வருகின்ற உரிமைகளை மீட்டெடுக்கவும் எதிர்காலத்தில் சகல உரிமைகளையும் பெற்று தனித்துவமாக தலைநிமிர்ந்து வாழவும் திட்டமிடப்பட வேண்டும். வெறுமனே மேடைகளிலும் ஊடகங்களிலும் உணர்ச்சிபூர்வ, வீராவே, ஆக்ரோஷமான பேச்சுக்களைப் பேசுவதை விடுத்து அவற்றை செயலில் காட்ட முன்வர வேண்டும். இல்லையேல் புதிய முஸ்லிம் அரசியல் தலைமைத்துவம் குறித்து இலங்கை முஸ்லிம்கள் சிந்திக்க வேண்டும்.

இக்கால சூழலில் முஸ்லிம்களையும் அவர்களின் உயிர் உடைமைகளையும் அவர்களின் தன்மானத்தையும் மத கலாசாரத்தையும் பாதுகாக்கத் தவறிய முஸ்லிம் அரசியல் தலைவர்களை மாத்திரம் நம்பி அவர்களின் பின்னால் அணிதிரளும் போக்கு சரிப்பட்டு வராது. ஏனெனில் அவர்கள் வெறுமனே முஸ்லிமான அரசியல்வாதிகளே தவிர, முஸ்லிம் சமூகத்துக்கு அரசியல் தலைமைத்துவம் வழங்கும் தகுதியுடையவர்களாக இல்லை. ஏனெனில் முஸ்லிம்களின் அரசியல் பிரதிநிதிகளின் அரசியல், சமூகத்துக்கான அரசியல் என்ற நிலையைத் தாண்டி தனது இருப்புக்கான அரசியலாக மாறிவிட்டதுதான் காரணம்.

இன்று, இந்த நாட்டில் பௌத்த மதகுருமாரும் அரசியல் செய்யத் தொடங்கி விட்டார்கள். ஆனால், முஸ்லிம் சமுதாயம் மாத்திரம் ஏதோ அரசியலுக்கும் இஸ்லாத்துக்கும் சம்பந்தமில்லாதது போல், அரசியலை இஸ்லாம் மறுப்பது போல் உலமாக்கள் தூரமாகி விடுகின்றனர். நிலைமை உலமாக்கள் மத ரீதியான வீதிச் சண்டைகளுக்குத் தலைமை தாங்கிக் கொண்டிருக்க, யார் யாரோவெல்லாம் முஸ்லிம் சமூக அரசியலுக்கு தலைமைத்துவம் வழங்கிக் கொண்டிருக்கிறார்கள். அவர்கள் இலாபந் தரும் மிகச் சிறந்த ஒரு தொழிலாக இன்று அரசியலைச் செய்கின்றனர்.

இப்பேர்ப்பட்ட பரிதாப நிலையிலிருந்து முஸ்லிம் சமூகம் மீட்டெடுக்கப்பட வேண்டும். இஸ்லாமிய அமைப்புகள் இயக்கரீதியில் பிரிந்திருப்பதாகத் தங்களுக்குள் பிளவுபட்டு, கைவிட்டு அரசியலில் நட்டாற்றில் விடப்பட்டுள்ள முஸ்லிம் சமுதாயத்தின் அரசியல் எதிர்காலம் குறித்து சிந்திக்கவும் விவாதிக்கவும் விளக்கமளிக்கவும் முன்வர வேண்டும். ஏனெனில் இன்று அல்குர்ஆன் குறித்து பௌத்த மத அமைப்புகள் கேட்கும் கேள்விகளை நாளை இந்த பௌத்த மத அரசும் கேட்கலாம். அப்போது அதற்கு ஈடுகொடுக்கக் கூடிய இஸ்லாமியமயப்பட்ட முஸ்லிம் அரசியல் தலைமை மிக அவசியமானதாக இருக்க வேண்டும்.

பிரதேச ரீதியாகவும் தமது இருப்புகளுக்காகவும் அரசியல் கட்சிகளமைத்து பிரிந்து கிடக்கும் அரசியல் தலைமைகள் அவ்வாறான அரசியல் போக்கிலிருந்து தம்மை சமூக அரசியலுக்காக மீளமைத்துக் கொள்ள தயாராக வேண்டும். அரசியல் வேறு, இஸ்லாம் வேறு என்று யாரும் வேறுபடுத்திப் பார்க்கவும் முடியாது. இவற்றையெல்லாம் தனதாக்கிக் கொண்டதாகத்தான் இன்று அரசியல் புரிய வேண்டிய நிலைமையுள்ளது. ஏனைய சமூகங்களையும் மதித்து தமது சமூகத்தின் உரிமை, பாதுகாப்பை பேணிக் கொள்வது என்பதை இஸ்லாம் அதிகம் வலியுறுத்தி இருக்கின்றது. ஆனால் அவ்வுயரிய தன்மையும் பண்பும் இன்றைய முஸ்லிம் அரசியல் தலைமைகளிடம் இல்லாததால்தான் அவர்கள் இலகுவாகவும் அலட்டிக் கொள்ளாமலும் உயர் தரமான இஸ்லாமிய பண்புகளை அடகு வைத்துவிட்டு மற்றைய சமூகங்களுடன் முட்டி மோதிக் கொண்டு அரசியல் செய்கின்றனர். எனவே இது குறித்து முஸ்லிம்கள் சிந்திக்க வேண்டும்.

## ஜனாதிபதி தேர்தலில் உணர்வுபூர்வமான வேட்பாளருக்கே கூட்டமைப்பின் ஆதரவு

### சுரேஷ் பிரேமச் சந்திரன்



தமிழ் மக்களின் பிரச்சினைகள் தொடர்பில் மிகவும் உணர்வுபூர்வமாக நடந்து கொள்ளும் வேட்பாளருக்கு ஜனாதிபதித் தேர்தலில் தமது கூட்டமைப்பு ஆதரவு வழங்கும் என தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் பேச்சாளரான பாராளுமன்ற உறுப்பினர் சுரேஷ் பிரேமச் சந்திரன் ஊடகங்களுக்கு தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதித் தேர்தல் தொடர்பான சில விடயங்கள் குறித்து கூட்டமைப்பு கவனம் செலுத்தி வருகிறது. இருப்பினும் தேர்தல் தொடர்பான தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் நிலைப்பாடு துரிதமாக அறிவிக்கப்படும்.

மேலும், போரில் இடம்பெயர்ந்தவர்களை மீள்குடியேற்றும் நடவடிக்கை, வடக்கு - கிழக்கு தேசிய பிரச்சினைக்கு தீர்வு காண்பது, தமிழ் மக்களுக்கு ஏற்பட்டு வரும் பல்வேறு அழுத்தங்களை நிறுத்துவது ஆகியன இந்த விடயங்களில் அடங்குகின்றன.

இந்த நிலையில், ஜனாதிபதித் தேர்தலில் ஆதரவளிக்கப்போகும் வேட்பாளரை தெரிவு செய்யும்போது இந்த விடயங்கள் கவனத்தில் கொள்ளப்படும் எனவும் சுரேஷ் பிரேமச் சந்திரன் தெரிவித்துள்ளார்.

## சர்வதேச...

(04 ஆம் பக்கத் தொடர்)

ஏனெனில் எமது புனிதஸ்தலமான மஸ்ஜிதுல் அக்ஸா இங்குள்ளது. மேலும், அல்லாஹ் வெறுத்த யூதர்களின் நாடு ஏற்படுவதை எமது ஒற்றுமையால் தடுக்க முடியும். மேலும், பலஸ்தீனுக்காக நான் அனைத்து முஸ்லிம்களுக்கும் அனைத்து முஸ்லிம் அரசுகளுக்கும் அறிவுரை வழங்குகின்றேன் எனக் கூறினார்.

## இலங்கை மீது...

முன் பக்கத் தொடர்

இலங்கை அரசாங்கம் சர்வதே விசாரணையாளர்களை இலங்கைக்குள் அனுமதிக்க மறுத்தால், ஐ.நா.வுடன் ஒத்துழைக்கும் மனித உரிமை பாதுகாவலர்களின் பாதுகாப்பை உறுதி செய்ய தவறினால் இலங்கைக்கு வழங்கப்படும் ஜி.எஸ்.பி. வரிச்சலுகையை நீக்குவது குறித்து ஐரோப்பிய ஒன்றியத்துடன் பிரித்தானியா ஆராய வேண்டும் என பரிந்துரை செய்கிறோம் என வெளிவிவகார குழு தெரிவித்துள்ளது.

## மேற்கொள்ளும் முடிவில்....

முன் பக்கத் தொடர்

எவ்வாறான அரசியலென எண்ணத் தோன்றுகிறது. இருக்கின்றோமோ என்ற விவஸ்தையே இல்லாமல் இருந்தவர்கள், போய் விடுவார்களோ என்ற பதற்றத்தை பார்க்கும் போதே அதிலுள்ள குதூகலம் சொல்லிமாளாதது. இந்த குதூகலம் இன்னும் எவ்வளவு காலத்துக்கு நீடிக்கப் போகின்றது என்பதைத்தான் பார்க்க வேண்டும்.

என்றாலும், இது வித்தியாசமான காலம். ஆனால் எதில் வெற்றியிருக்கின்றது என்று பார்த்தால் எங்கிருந்தாலும் சரி, இருக்குமிடத்தில் இருந்தாலும் சரி, வேறெங்கும் போவதென்றாலும் சரி சேதாரம் குறைவானதாக அது நடைபெற வேண்டும். இதிலுள்ள சவால்தான் தாரக மந்திரம். எனவே, அதைப் பற்றித்தான் நாங்கள் எல்லோரும் இப்பொழுது சிந்தித்துக் கொண்டிருக்கிறோம். கள நிலைவரத்தை நாங்கள் சரியாக புரிந்து கொண்டு செயற்பட வேண்டும் என்றும் அமைச்சர் ஹக்கீம் கூறினார்.

## ஜம்இய்யத்துல் உலமா...

முன் பக்கத் தொடர்

இலங்கை ஜம்இய்யத்துல் உலமா சந்தித்துள்ளது குறிப்பிடத்தக்கதாகும்.

சிறுபான்மையினராக முஸ்லிம்கள் வாழும் இந்நாட்டில் முஸ்லிம்களது உரிமைகளையும் நலன்களையும் பாதுகாக்க முஸ்லிம் அரசியல்வாதிகள் ஒற்றுமையுடனும் புத்திசாலித் தனமாகவும் நடந்து கொள்ள வேண்டும். முஸ்லிம் சமூகத்தை அரசியல் ரீதியாக பிரதிநிதித்துவப் படுத்துவோர் தக்வா, அமானிதம் பேணுதல் மற்றும் தூரநோக்கு போன்ற உயர்ந்த பண்பாடுகளைக் கொண்ட முன்மாதிரியானவர்களாக தங்களை மாற்றிக் கொள்ள வேண்டும். முஸ்லிம்களுக்கு எதிராக பல தீய சக்திகள் செயற்பட்டுக் கொண்டிருக்கும் இந்நிலையில், சுயலாபங்களை மறந்து, பொது இலக்குகளை நோக்கியும் பொது பிரச்சினைகளுக்கு தீர்வுகாணும் வகையிலும் செயற்பட வேண்டும் என்று முஸ்லிம் அரசியல்வாதிகளை அகில இலங்கை ஜம்இய்யத்துல் உலமா வினயமாக வேண்டிக் கொள்கின்றது.

## மஹிந்தவுக்கு....

முன் பக்கத் தொடர்

பெற்றுள்ளார் என்ற செய்தியை அவருக்கு நாம் சொல்ல வேண்டும். அப்போது தான் அடுத்து வரும் காலத்தில் எமக்கு இந்த நாட்டில் எதிர்காலமிருக்கும் எனவும் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

## முஸ்லிம்களுக்கு எதிராக...

முன் பக்கத் தொடர்

இணைந்து சிங்கள பௌத்த சமூகத்தின் மேலாதிக்கத்தை பிரகடனப்படுத்தும் வகையில் இனவாத கருத்துக்களை முன்வைத்து வருகின்றது. சிறுபான்மையின சமூகங்களால் புத்தரின் சிலைகள் இடித்தழிக்கப்பட்டதாகவும் கிறிஸ்தவர்களால் நலிந்த மக்கள் மதமாற்றத்துக்கு உட்படுத்தப் படுவதாகவும் கூறி மக்கள் மத்தியில் அச்ச உணர்வை ஏற்படுத்தி வருவதாக அவ்வறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளன.

## பொதுபல சேனாவுக்கு...

முன் பக்கத் தொடர்

கொடுமைப்படுத்திய விராது தேரருக்கு நாட்டுக்குள் வருவதற்கு வீஸா அனுமதி கொடுத்தனர். அவர் இங்கு வி.ஐ.பி. நபராக வருகை தந்து முஸ்லிம்களுக்கு எதிரான மாநாட்டில் கலந்து கொண்டு இனவாதக் கருத்துக்களை பரப்பிச் சென்றுள்ளார். இதற்குப் பின்னால் பாதுகாப்புச் செயலாளர் இருப்பதை மறைக்க முடியாது.

இவ்வாறான செயற்பாடுகளினால் முஸ்லிம்கள் கோதபாய ராஜபக்ஷ மீது அதிருப்தியுடன் உள்ளனர் என்று அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

## குடும்ப ஆட்சியிலிருந்து...

முன் பக்கத் தொடர்

முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க உள்ளிட்ட ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி பிரமுகர்கள் கலந்து கொண்ட ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அமைச்சர் சிறிசேன இவ்வாறு தெரிவித்தார்.

தான் வெற்றி பெறும் நாள் முதல் 100 நாட்களுக்குள் நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறை இரத்துச் செய்யப்படும் என்றும் தான் அமைக்கும் அரசாங்கத்தின் பிரதமராக ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவை நியமிக்கவுள்ளதாகவும் கூறினார்.

## பேராசிரியை லோனா...

முன் பக்கத் தொடர்

செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கை வரலாறு தொடர்பாக அவர் பல நூல்களை எழுதியுள்ளார். அவர் எழுதிய இலங்கை முஸ்லிம்கள்-ஆயிரம் ஆண்டு இன நல்லிணக்கம் (THE MUSLIMS OF SRILANKA- ONE THOUSAND YEARS OF ETHENIC HARMONY 900-1915) என்ற நூல் எல்லாச் சமூகங்களினாலும் வரவேற்கப்பட்ட ஒரு நூலாகும். நீண்ட காலமாக சுவர்ணவாஹினி தொலைக்காட்சி சேவையில் ஒளிபரப்பான 'மகா சிங்களே வன்ச கதாவ' இலங்கை வரலாற்றுத் தொடர் நிகழ்ச்சி மூலம் இலங்கை முஸ்லிம்கள் கண்டி இராச்சியத்தில் பெற்றிருந்த முக்கியத்துவம் மற்றும் சிங்கள மன்னர்களுக்கு ஆற்றிய உதவிகள் என்பவற்றை ஆதாரங்களோடு முன்வைத்தார்.

கண்டி இராச்சிய காலத்தில் முஸ்லிம்களின் வரலாறு பற்றி ஆய்வு செய்து எழுதிய வேறொரு நூல் இலங்கையில் வெளிவரவில்லை. கண்டி இராச்சிய வரலாறுகள் பற்றி பல ஆய்வுகளை செய்து அத்துறையில் பாண்டித்தியம் பெற்ற ஒருவரான இவர், இந்த நூலை எழுதியிருக்கின்றமை குறித்து இலங்கை முஸ்லிம்கள் அவருக்கு நன்றி கூற கடமைப்பட்டுள்ளனர். அவருக்காக நாம் மேற்கொள்ள முடியுமான நன்றிக் கடன் அவரை இந்த நாட்டு மக்களுக்கு அறிமுகம் செய்து வைப்பதுடன், அவர் எழுதிய நூலை வாஞ்சையுடன் வாசித்து விளங்குவதுமாகும் என்று அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முஸ்லிம் அரசியல் சில கருத்தாடல்கள்:

# குறைந்தளவு தீங்கை தேர்ந்தெடுத்தல்

இலங்கையின் முஸ்லிம் அரசியல் போக்கானது இன்றைய சூழ்நிலையில் மிகக் கவனமாக தீர்மானங்களை எடுக்க வேண்டிய நிலைமைக்கு வந்திருப்பதை அனைவரும் அறிந்து வைத்துள்ளோம். 2015 ஜனவரி 8 ஆம் திகதி நடைபெறவுள்ள ஜனாபதித் தேர்தல் தொடர்பாக மிகப் பொருத்தமான தீர்மானமொன்றை முஸ்லிம் அரசியல் கட்சிகள் ஒன்றிணைந்து எடுக்க வேண்டும். இதன்போது பல்வேறு அம்சங்களை கருத்திற் கொள்ள வேண்டும்.

இலங்கையின் சமகால அரசியல் செல்நெறியானது பல ஜாஹிலிய்ய மற்றும் மறைமுக அடக்குமுறையான ஜனநாயகம், சிறுபான்மையினரின் உரிமை மீறல்களுக்கான சந்தர்ப்பங்கள், குடும்ப ஆட்சி போன்றவையால் சூழப்பட்டிருந்தாலும் மூன்று தசாப்த காலத்திற்கும் மேலான யுத்தத்தை முடிவுக்குக் கொண்டு வந்தமை, பாரிய அபிவிருத்தித் திட்டங்கள் முன்னெடுக்கப்படுகின்றமை, ஆசியாவின் ஆச்சரியமாக மாற்றியமைப்பதற்கான முன்னெடுப்புகள் மேற்கொள்ளப்படுகின்றமை போன்ற அம்சங்களும் மறுக்க முடியாத உண்மைகளே. இவ்வாறான விடயங்களை முன்னிறுத்தி தீர்மானங்களை மேற்கொள்ள வேண்டிய கடப்பாடு முஸ்லிம் அரசியல் கட்சிகளுக்கு உண்டு என்பதைப் புரிந்து கொள்ள வேண்டும்.

இலங்கையில் முஸ்லிம் கட்சிகள் தீர்மானம் எடுக்கின்றபோது, இஸ்லாமிய சட்டவியலின் பிரதான விதிகளில் ஒன்றான இரு தீங்குகளில் குறைந்தளவு தீங்கைத் தேர்ந்தெடுத்தல் என்ற விதியைப் பிரயோகிக்க வேண்டும். சமகால அரசியல் அரங்கின் நிகழ்வுகளை ஒப்பிட்டு நோக்கி, பிரதான இரு கட்சிகளிலும் முஸ்லிம்களுக்கான நலன்களை கொடுக்க எக்கட்சியால் முடியும் என்பதையும் கவனத்தில் கொள்ள வேண்டும். எத்தரப்பாரின் ஆட்சியில் முஸ்லிம்கள் அதிகளவிலான கஷ்டங்களை, நெருக்கடிகளை எதிர்கொண்டனர். அரசியல், பொருளாதார, சமூக விடயங்களை செய்யவிடாமல் தடுத்த நிகழ்வுகள், இவற்றுக்கான மறைமுக திட்டங்கள் வகுக்கப்பட்டு அமுல்படுத்தப்பட்டமை எத்தரப்பின் ஆட்சிக் காலங்களில் போன்ற பல்வேறு அம்சங்கள் கவனத்திற் கொள்ளப்பட வேண்டும். குறிப்பாக, யுத்தத்தின் பின்னரான காலப் பகுதிகளில் முஸ்லிம்கள் எதிர்கொண்ட பொருளாதார மற்றும் சமய ரீதியான நெருக்கடிகள், அவற்றுக்குப் பின்னாலிருந்த மறைமுக சக்திகள், அவற்றுக்கான அரசியல் ரீதியான ஆதரவுகள் போன்ற விடயங்களும் ஆராயப்பட வேண்டும். அத்தோடு, மறுதரப்பின் பின்னணியில் செயற்படும் ஆட்சிக் காலங்களிலும் முஸ்லிம்கள் எதிர்கொண்ட பெரும் பிரச்சினைகள் பற்றியும் ஆய்வுக்குட்படுத்தப்பட வேண்டும். குறிப்பாக, வடக்கிலிருந்து முஸ்லிம்கள் வெளியேற்றப்பட்டமை, கிழக்கில் பள்ளிவாசல்களில் படுகொலைகள், முஸ்லிம்களின் உயிர், உடைமை, உரிமைகள் மீதான அத்துமீறல்கள் போன்ற அம்சங்களும் கருத்திற் கொள்ளப்பட்டே முடிவுகள் எடுக்கப்பட வேண்டும்.

எனவே, தீர்மானம் எடுத்தலில் இஸ்லாமிய பிக்ஹின் மேற்போந்த விதி கவனமாக முன்னெடுக்கப்பட வேண்டும். இது ஓர் ஆன்மீகச் செயற்பாடு; தனக்கு அல்லாஹ்வால் வழங்கப்பட்டுள்ள அருட்கொடை; விசாரணை உண்டு; அல்லாஹ்வின் அரசின் நிழலைப் பெற்றுத் தரக்கூடியது போன்ற பல்வேறு அம்சங்களையும் கவனத்திற் கொள்ள வேண்டும்.

முஸ்லிம் அரசியல் என்பதை குறுகிய கண்ணோட்டத்தில் நோக்காமல் அதனை இஸ்லாமியம், இஸ்லாமியப் பண்பாட்டியலை நோக்கி என்ற கண்ணோட்டத்திலும் முஸ்லிம் கட்சிகள் நோக்க வேண்டும். பண்பாடுகளுடனான அரசியல் கலாசாரம் ஒன்றை சக சகோதர அரசியல் கட்சிகளுக்கு முன்மாதிரியாகக் கொடுக்க வேண்டும்; செயற்படவும் வேண்டும். குறிப்பாக, தேர்தல் காலங்களில் இம்முன்மாதிரிகள் அதிகமாக வெளிப்படுத்தப்பட வேண்டும்.

தேர்தல் காலங்களிலான நற்பண்புகளை தமது கட்சி அங்கத்தவர்கள், ஆதரவாளர்களுக்கு அறிவூட்ட வேண்டும்; பயிற்சியளிக்க வேண்டும். மதுபானப் பாவனை, புகைத்தல் செயற்பாடுகள், அடிதடி அரசியல், வன்முறைகள், கொலைகள், தந்திரோபாயங்கள் போன்ற மோசமான நடவடிக்கைகளிலிருந்து தவிர்ந்து கொள்ள வேண்டும். கட்சிப்பற்று என்ற போர்வையில் விடிய விடிய கட்சிக் காரியாலயங்களில், கிளைகளில் இருந்து கொண்டு அரட்டை அடித்தல், வெட்டிப் பேச்சுக்களில் ஈடுபடுதல், அதான் சொல்லியும் கட்சிகளின் உறுப்பினர்கள் முதல் அடிமட்ட ஆதரவாளர்கள் கூட தொழுகையில் எந்தவிதமான கரிசனையும் அற்றவர்களாக இருப்பதானது எந்தளவு தூரம் முஸ்லிம் கட்சிகளின் பொடுபோக்கான அரசியலை கொண்டு சென்றுள்ளது என்பது நோக்கத்தக்கது.

இலங்கையின் முஸ்லிம் அரசியல் கட்சிகளானவை தான் சார்ந்த சமூகத்தின் உரிமைகள், உடைமைகள், பொருளாதார நலன்கள் என்பவற்றைப் பாதுகாப்பதற்கான முயற்சிகளை மேற்கொள்வதோடு, வணக்கஸ்தலங்கள் என்பவற்றைப் பாதுகாப்பதிலும் கவனஞ் செலுத்த வேண்டும்.

இன்றைய சூழ்நிலையில் முஸ்லிம் அரசியல் கட்சிகள் மிக அவதானமாக தமது தீர்மானங்களை எடுத்து முஸ்லிம்களின் அரசியல் உரிமைகள் உட்பட அனைத்து உரிமைகளையும் பாதுகாக்க முன்வர வேண்டும்.

# மாற்றமுறும் உலகில் எமது சமூகத்தின் அறிவுப் பங்களிப்பு

அபூபக்கர் நளீம் MA (Sociology), M.Ed
வருகை தரு விரிவுரையாளர், இலங்கை திறந்த பல்கலைக்கழகம்

இன்று அறிவுப் பிரவாகம் உச்சத்தை நோக்கிச் சென்று கொண்டிருக்கிறது. அறிவு வெடித்துச் சிதறும் ஒரு யுகம் (*Era of knowledge explosion*) என்றும் இதை அழைக்கிறார்கள். அறிவு மையச் சமூகத்தின் கையே உலகில் இன்று ஓங்கி இருக்கிறது. இக்காலகட்டத்தில் எமது சமூகத்தின் கல்விச் செயற்பாடுகள் அதன் நகர்வுகள் பற்றிய தெளிவு எமக்கு இன்றியமையாதது.

மனித உருவாக்கத்தின் ஆரம்பம் முதல் இஸ்லாம் கல்விக்கு முக்கியத்துவம் கொடுத்திருக்கிறது. முதல் மனிதன் ஆதம் (அலைஹிஸ்ஸலாம்) அவர்களைப் படைத்த அல்லாஹ் அவருக்கு முதலில் கல்வி அறிவையே வழங்கினான். அல்குர்ஆனின் முதல் வசனம் இக்ரஃ வாசிப்பீராக என்று அறிவின்பால் மனித சமூகத்தை அழைக்கிறது. இஸ்லாத்தின் அறிவிற்கான அழைப்பினால் தூண்டப்பட்டதால்தான் முஸ்லிம்கள் ஐரோப்பா இருண்டு கிடந்த காலத்தில் அறிவு வெளிச்சத்தை உலகிற்கு கொடுத்தார்கள்.

இன்று உலகின் ஒதுக்கப்பட்ட சமூகமாக (*Marginalized Society*) முஸ்லிம் சமூகம் மாறி இருப்பதற்கு அடிப்படை, அறிவைக் கையிலிருந்து நழுவவிட்டதுதான் என்ற கருத்து அறிஞர்களால் முன்வைக்கப்படுகிறது. பெரும்பாலான முஸ்லிம் நாடுகளில் வளங்கள் செழித்துக் கிடந்தாலும் அறிவு என்ற வளம் பற்றாக்குறையாகவே காணப்படுகிறது. இதனால் இன்று அமெரிக்கா, ஐரோப்பாவிடம் தொழில்நுட்ப, நவீன முகாமைத்துவ அறிவைப் பெற முஸ்லிம் நாடுகள் சுருண்டுபோய் கைகளை கட்டிக் கொண்டு நிற்கின்றன.

முஸ்லிம்களுக்கெதிராக உலகில் முடுக்கி விடப்பட்டுள்ள இரண்டு போராட்டங்களில் ஒன்று, ஆயுதப் போராட்டம். மற்றையது, அறிவுப் போராகும். நாம் எல்லோருமே எதிர்க்கத் தயாரான ஆயுதப் போரிலும் பார்க்க எம்மால் எதிர்கொள்ள முடியாத போரே அறிவுப் போராகும். இதற்காக எம் முஸ்லிம்கள் மத்தியில் சிறந்த பேராசிரியர்களும் கலாநிதிகளும் தேவைப்படுகின்றனர். அறிவுப் போராட்டத்திலிருந்து வெற்றி பெற அறிவுச் சக்தியே அவசியம். எமது சமூகத்தின் துறைசார் வல்லுநர்கள் எல்லோரும் சமூக இருப்பு பற்றிய உந்துதல்களை நிறைவாகப் பெற்றவர்களாக மாற வேண்டும். அத்துடன் புதிதாகவும் எம்மால் கல்விப்புல ஆளுமைகள் உருவாக்கப்பட வேண்டும்.

ஒரு குறிப்பிட்ட சமூகத்தின் அசைவியக்கத்தில் கல்வி எப்போதும் முன்னணிப் பங்கை ஆற்றி வருகின்றது. (றவூப் ஸெய்ன், 2009, ப.56)

கல்விப் புலம் இன்று நவீன தொழில்நுட்பத்தினூடாக பல்வேறு பரிணாமங்களை அடைந்திருப்பதைக் காணலாம். இன்று மின்னியல் கற்றல் (e-learning) முக்கிய இடம் பிடித்திருப்பதைக் காணலாம். எதிர்காலவியல் (Futurism) தொடர்பான கல்வியும் ஆய்வும் இன்று மேலோங்கி வருகின்றன.

ஒரு காலத்தில் இளமையில் கற்ற கல்வி வாழ்நாள் முழுவதும் நிலைத்து நின்று பயன்தரக் கூடியது என்று கருதப்பட்டது. அத்துடன் கல்வியைக் கற்று முடித்துவிடலாம் என்ற நிலைப்பாடும் இருந்தது. பெற்றோரிடம் பிள்ளைகளை பற்றிக் கேட்டால் பிள்ளைகள் படித்து முடித்துவிட்டார்கள் என்றே கூறி வந்தனர். மாறி வரும் உலகில் கல்வி என்பது முடிக்கப்படாததொன்று. (சேர். சந்திரசேகரன், 2011)

உலகில் கல்வி மிக வேகமாக காலாவதியாகும் (*Expired*) ஓர் அம்சமாக இருப்பதும் இங்கு கவனிக்கத்தக்க விடயமாகும். கால மாற்றங்களுக்கேற்ப கல்வியும் மாறிக் கொண்டு வருவதால் இவற்றின்பால் எமது கண்கள் அகலத் திறக்கப்பட வேண்டும்.

இலங்கை முஸ்லிம் கல்வி பற்றி நோக்கின் முன்னரிலும் பார்க்க தற்போது கல்வியில் எல்லா மாவட்டங்களிலும் முன்னேற்றகரமான நகர்வுகள் பதிவளித்து வருகின்றது. இது ஆரோக்கியமான நிலைமையாகும். இருப்பினும் எமது முஸ்லிம்களின் விகிதாசாரத்திற்கேற்ப நாம் இன்னும் முன்னே செல்ல வேண்டியுள்ளது.

பிள்ளைகளின் கல்வியை பாடசாலைகள் மீது சுமத்திவிட்டு நாம் இருக்க முடியாது. பெற்றோர், சமூக நிறுவனங்கள், கல்வியியலாளர்கள், கல்வி நிருவாகிகள், தனவந்தர்கள், முஸ்லிம் அரசியல் தலைமைகள் அனைவரும் கல்வி முன்னேற்றத்திற்கான தமது பங்களிப்புகளைச் செய்தாக வேண்டும்.

## முஸ்லிம்...

(05 ஆம் பக்கத் தொடர்)



அ.இ.ம.கா. கிழக்கு மாகாண சபை உறுப்பினர்களான சுபைர், சிப்லி பாரூக், அமீர் அலி ஆகியோர் கிழக்கு மாகாண சபையில் அரசுக்கு வழங்கிய ஆதரவை விலக்கி தனித்தியங்க முடிவெடுத்துள்ளதாக அறிவித்துள்ளனர். ஆனால் இக்கட்சிகளின் முக்கியஸ்தர்களான அமைச்சர் றிஷாட், அமைச்சர் ஹிஸ்புல்லாஹ் ஆகியோரின் நிலைப்பாடு என்னவாக இருக்கும் என்பது கேள்விக்குறியே. இதேபோன்று தேசிய காங்கிரஸ் பெரும்பாலும் அரசோடு சார்ந்திருக்கும் என்றே எதிர்பார்க்கப்படுகிறது.

ஜனாதிபதித் தேர்தல் எதிர்வரும் ஜனவரியில் நடைபெறவுள்ள நிலையில் முஸ்லிம் கட்சிகள் தமது ஆதரவை மக்களின் நலனுக்கேற்ப வழங்க முனைய வேண்டும். மு.கா. கடந்த காலங்களில் 18 ஆவது திருத்தத்திற்கு ஆதரவு வழங்கியது தவறு என்ற விமர்சனம் முன்வைக்கப்படுகின்ற நிலையில் அதுபோன்றதொரு தவறை இந்த ஜனாதிபதித் தேர்தலிலும் அது செய்துவிடக் கூடாது.

பொது வேட்பாளர் தமது தேர்தல் விஞ்ஞாபனத்தை இன்னும் வெளியிடாத நிலையில் அவரது சில அறிவிப்புகளே வெளிவந்துள்ளன. ஆனால் சிறுபான்மையினரின் உரிமை தொடர்பில் இன்னும் எந்தவித அறிவிப்பும் வெளியிடப்படவில்லை. அதேவேளை, ஜனாதிபதி முறையை மாற்ற வேண்டும் என்ற கோரிக்கையோடு ஜாதிக ஹெல உறுமய 13 ஆவது சீர்திருத்தத்தை எடுக்க வேண்டும் என்ற கோரிக்கையை முன்வைத்து வருகிறது. தற்போது இந்தக் கட்சி தமது ஆதரவை பொது வேட்பாளருக்கு வழங்கியுள்ளது. இக்கட்சியின் கோரிக்கையை பொது வேட்பாளர் முழுமையாக ஏற்றுள்ளாரா என்பதையும் மு.கா. மற்றும் முஸ்லிம் கட்சிகள் உற்றுநோக்க வேண்டும்.

அண்மைக் காலமாக இந்நாட்டில் முஸ்லிம் எதிர்ப்பு பிரசாரங்கள் மற்றும் முஸ்லிம்களுக்கு எதிரான வன்முறைகள் கட்டவிழ்த்து விடப்பட்டிருக்கின்ற நிலையில் முஸ்லிம் கட்சிகள் தமது ஆதரவை மிகக் கவனமாகவும் தூரநோக்கோடும் பயன்படுத்த வேண்டும். அது இந்த நாட்டில் நல்[illegible] மற்றும் சகவாழ்வை ஏற்படுத்துவதாக அமைதல் வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொதுசன நூலகம்

# அப்பாவிகளின் சமாதி



பள்ளிவாசலின் கோபுரத்தில் அடைக்கலத்திற்கு குந்தியிருந்த புறாக்கள் திசைகெட்டுப் பறந்தன. இதயங்கள் சுமந்த மனிதர்கள் மலிந்த பூமியாய் வெறுமையாய்க் கிடந்தது மண்.

ஊரின் நிசப்தம் மனித முகங்களில் அப்பியிருந்தது. தூக்கம் வர மறுத்து சும்மாவே கழிந்து போயின இரவுகள். தினமும் ஒவ்வொரு துயரம் கடந்து சென்றது. ஏதோ? ஒரு சோகச் சுமையினை தாங்கிக் கொள்ளும் உணர்வாய் கழிந்து போகும் பொழுதுகள்.

இப்பொழுதுகளில்தான் ஒரு தொலைபேசி ஈனக் குரலில் அலறியது. வயிற்றுப் பசி அடங்கி, நாவரண்டு, தொண்டையை அடைத்தது. எனது குடும்ப நண்பன் றஸீனின் குரல். றஸீனின் குரல் வெளிவர மறுத்தது. அவன் பேச்சை விட கண்ணீரை அதிகம் சிந்திக் கொண்டிருப்பதாக தெரிந்தது. எனக்கும் இம்முனையில் வார்த்தைகள் இறுகிக் கொண்டன.

"என்ன றஸீன் சொல்லு? என்ன நடந்த?"

"எல்லாமே போச்சு என் தலையெழுத்து முடிஞ்சுற்று... ஒரு குடும்பம்.. சாம்பல்தான் மீதமிருக்கு. என் குடும்பமும் நானும் நடுத்தெருவில் கிடக்கிறோம்."

அவன் தன் சுய சரிதையை எனக்கு ஒப்புவிக்கும்போது, என் பாதங்களிலிருந்து பாரம் கொஞ்சம் கொஞ்சமாய் குறைந்து சோர்வுற்றது. அந்த ஊரில் மிகவும் கண்ணியத்துடன் வாழ்வியலை நகர்த்தியவன். பால்ய கால சிநேகிதனான அவனை திருமணம்தான் அங்கு இழுத்துச் சென்றது. அநீதங்கள் அவனை வெறும் கையாக்கிவிட்டன.

எனக்கு உடல் நடுங்கியது; இருப்புக் கொள்ளவில்லை. அவனையும் அவனது குடும்பத்தையும் பார்க்கத் துடித்துக் கொண்டது மனசு. ஒருவாறு புறப்பட்டு றஸீனைச் சந்திக்கும் எண்ணம் மேலோங்கியது.

அவனது இடத்தை நெருங்கியபோது எல்லாமே உருக்குலைந்து கிடந்தது. அகதிமுகாமில் இருப்பதாய் அறிந்தபோது வெப்பிசாரம் தலைக்குள் ஏறியது. சுவர்களெல்லாம் துப்பாக்கிகளின் கோரப்பசிக்கு அடங்கியிருந்தன. இரத்தக் கறைகள் ஆங்காங்கே, சிதறிக் கிடந்தன. பூச்சுகள் உடைந்த சுவர்களில் சுவரொட்டி வாசகங்கள் மின்னிக் கொண்டிருந்தன.

எங்கள் உடைமைகள் எங்கே?

எங்கள் உணர்வுகளை வதைக்காதீர்கள்!

நாங்கள் அப்பாவிகள்!

தலையில் தொப்பியும் எங்கள் விரல்களுக்குள் உருளும் தஸ்பீஹ் மணிக் கோர்வையும் என்ன பாவம் செய்தன? இந்தச் சின்னச் சின்ன எழுத்துகள் சுவர்களில் பேசிக் கொண்டிருந்தன. எல்லாச் சுவர்களும் பேசும் சுவர்களாயின.

இளம் மையித்துகளின் உடல்களில் தாய்மார் கதறினர். துப்பாக்கிகள் சுமந்த முதுகுகள் கவலை அடையாளப்படுத்தின. தலையில் கை வைத்து தெருவை மறைக்கும் முகாம்களில் குந்தியிருந்தனர் சிலர்.

"ஆ ... என்ன? தம்பி... யாரைத் தேடுறயள்."

"நம்மட ஆக்கள் எங்கிருக்கினம்."

"ஒரு ஆளச் சந்திக்க வந்த நாங்கள்"

என்றபோது சில பெரியவர்கள் இடத்தைக் காட்டினர்.

அடுத்த நிமிடம் என்ன நடக்கும். யாரை யார் காப்பாற்றுவார்கள்; புரியாத புதிராயிருந்தது.

றஸீனும் அவனது குடும்பமும் என்னை நோக்கி வருவது தூரத்தில் தெரிகிறது. அவனது பாதங்கள் தள்ளாடின. என்னைக் கட்டியணைத்தான். அந்த பிடியில் பல்லாயிரம் கதைகள் இதயத்தை நொறுக்கின.

"என்ன? றஸீன், என்ன நடந்தது"

"என்ன சொல்ல... எல்லாமே நெருப்பின் ருசிக்கு தீனியாகிற்று"

கவலைகளை உடம்பிலிருந்து இறக்கிக் கொண்டிருந்தான். றஸீன் வெறுங்கையோடு திரிகிறான் என்பதை அவனது உணர்வுகள் சொல்லிக் கொண்டன.


ஒரு மெழுகுவர்த்தியில் பெரும் சாம்ராஜ்யமே சிதைக்கப்பட்டு விட்டது. இவ்வளவு தூரமிருந்து பார்க்க வந்திருக்கக் கூடாது. மனதுக்குள் அழுகின்றேன். மனம் ஆறுதல் தரவில்லை. அவனது கண்ணீர் மழை முகம் கழுவி அவன் பாதங்களில் வழிந்தோடியது. மனிதாபிமானம் புதைக்கப்பட்டு விட்டதாக வானைத்தொடும் புகைமண்டலம் சாட்சி சொன்னது.

மெல்ல மெல்ல இருள் முட்டியது. ஆங்காங்கே புற்கள் முளைப்பது போல மஞ்சள் நிறத்தில் பெரும் சேனைகளும் வளரத் தொடங்கின. உசிர்களைக் கையில் பிடித்துக் கொண்டு திரிந்தனர் சனங்கள். இரவுச் சாப்பாட்டிற்காக வெறும் தட்டுகளுடன் அணி திரண்டனர். குப்பி விளக்குகள் அகதிமுகாம்களை அடையாளப்படுத்தின. றஸீன் குடும்பத்தினருடன் சாப்பாட்டை பீங்கானில் நிரப்பியபடி. தூங்குவதற்கு ஆயத்தமானோம். அந்தச் சோற்றுப் பருக்கைகள் தொண்டைக்குள் இறங்க மறுத்தன. ஊரே நிசப்பதமாய் அழுதது.

பள்ளிவாசல்களின் ஒலிபெருக்கிகள் ஊரின் அமைதியோடு சங்கமித்தது. அந்தக் குரல்களில் பொறுமை இருந்தது. இறை பொருத்தம் இழையோடியது. ஊரின் எல்லையில் குழுமியிருந்தனர் மக்கள். அரசியல் பிரமுகர்கள் பிரபல்யம் பெற தவித்தனர். யார் கழுத்திலும் மாலைகள் விழவில்லை.

நாக்கைத் தொங்கவிட்டபடி வலம் வந்தனர். கையசைத்தனர்; சனங்களுக்கு ஒன்றும் புரியவில்லை. ஜீப்புகளை விட்டு மந்திரிப் பிரதானிகள் புடை சூழ இறங்கினர். மக்களை வளைத்தனர். ஆறுதல் கூறினர். வேலி பயிர்களை மேய்ந்து விட்டதாக மக்கள் முணுமுணுத்தனர். குளிர் தாங்க முடியாமல் சிறுசுகள் நடுங்கினர். நிறையச் சால்வைகள் கிடைத்தன. அதனைப் போர்த்த முடியவில்லை. ஒவ்வோர் இரவையும் இப்படிக் குளிரில் கழித்ததாக மக்கள் முறையிட்டனர். மரணத்தைச் சுவைத்தவர்களுக்கு பிரார்த்திப்பதாகச் சொன்னார்கள். இனி ஒன்றும் நடக்காது என்றார்கள். நடந்தவற்றை மறப்போம் என்று வாய் உணர்வினர். மானிட உள்ளங்கள் மசியவில்லை. மாறவில்லை. அச்சம் உடம்பெல்லாம் பரவும் வேதனை. வேதாளம் மறுபடியும் முருங்கை மரத்தில் ஏறிக்கொண்டது. வானரச் சேனைகள் திறந்து விடப்பட்டன. மறுபடியும் பள்ளிவாசல் மேல் புறாக்கள் வந்தன, அடைக்கலம் தேடி.

-மருதமுனை விஜிலி-



# குரலாகி ஒலி, ஒளி இறுவட்டு




ஆசிரியர்: எஸ். ஜனூஸ்

தொ.பேசி: 076 6610565, 071 6642992

விலை: ரூபா 350

காட்சிகளை நம் மனங்களில் விரித்துச் சென்ற எவ்வளவோ கவிதைகள் இருக்கின்றன. நாம் காட்சிகளை உருவகித்து வரிகளின் சாலையிலே நடந்த காலம் என்று ஒன்றிருந்தது. இப்போதும் இருக்கிறது. ஆனால் அகக் காட்சிகளுக்கு எல்லாம் இடம் வைக்காமல் இந்த நவீன யுகத்தில் எஸ். ஜனூஸ் கண் வழியாகவும் செவி மூலமாகவும் கவிதைகளைப் பரிமாற முனைகின்றார்.

கவிதைகளின் தொகுப்பை அச்சு வடிவில் புத்தகமாக நாங்கள் பார்த்திருக்கிறோம். பின்னொரு காலத்தில் கவிஞனின் குரலில் இறுவட்டு வடிவில் கவிதைகளைக் கேட்டிருக்கிறோம்.

ஆனால், ஜனூஸ் அவர்களின் குரலாகி என்ற இந்தக் கவிதை இறுவட்டு காணொளி, ஒலி என இரண்டையும் ஒருங்கே கொண்டிருப்பதால் அதற்கு ஒரு வரலாற்றுப் புகழ் கிட்டுகின்றது.

ஈழத்தில் மட்டுமல்லாமல், தமிழ் கூறு நல்லுலகிலேயே ஒருவர் தன் கவிதைகளைப் பண்பட்ட பல குரல்கள் வழியாகவும் தேர்ந்தெடுத்த பொருத்தமான காட்சிகளின் வாயிலாகவும் வெளிப்படுத்தும் முதல் இறுவட்டு இது என எண்ணுகிறேன்.

அந்த வகையில், இந்த இறுவட்டுக்கு முப்பரிமாணங்கள் இருக்கின்றன. ஒன்று இதில் உள்ளடக்கப்பட்டிருக்கும் கவிதைகள். மற்றையது, இந்தக் கவிதைகளுக்கு குரல்கள் வழங்கும் உயிர்த்துடிப்பு. மூன்றாவது, கவிதை ரசனைக்குப் பக்கபலமாக, சமாந்தரமாக தோன்றுகின்ற காட்சிகள். இந்த மூன்று அம்சங்களையும் இங்கே நாம் கணக்கில் எடுக்க வேண்டியுள்ளது.

இந்த இறுவட்டில் மொத்தம் 35 கவிதைகள் உள்ளன. 21 குரல்கள் பயன்படுத்தப் பட்டிருக்கின்றன. இக்கவிதைகளின் உள்ளடக்கங்களை ஒரு வசதி கருதி 11 பிரிவுகளின் கீழ் அடக்கிவிடலாம். இயற்கை அனர்த்தங்களின் பேரவலம், நாட்டார் பாடல் பாணியில் வட்டார வழக்கில் வெளிப்படும் காதல், நவீன மயமாக்கல் தவிர்க்க இயலாதபடி நம் வேர்களை அசைத்துச் செல்வது பற்றிய ஆதங்கம், சகிப்புத் தன்மையற்ற அரசியலுக்கு எதிரான பார்வை, மானிடத்தின் இழிநிலை குறித்த வெப்புசாரம், இயற்கையின் கொடைகள் மீதான லயிப்பு, கனவுக்கும் நடைமுறை வாழ்க்கைக்குமான இடைவெளி குறித்த பெருமூச்சு, கை நழுவிய காதல்கள் மீதான பிரிவேக்கங்கள், மனதில் பதிந்த அல்லது மனதைப் பாதித்த மாந்தர்கள், படைப்பு மனோநிலையின் எழுச்சியில் பிறந்த தன்னுணர்வுக் கவிதைகள், இளம்பிராயத்து மீள் நினைவுகள் என்பவை அவை.

நிலாத் தெறிக்கும் குருத்துமணல், கள்ளப்பட்ட காற்று, கபடமில்லாத அணிலாகிய நான், நெட்டி முறித்த நிலா, மூசாப்பும் ஒரு முழ வெயிலும், ஒரு தும்பியின் மனம் பறித்து, காற்றலைத் தோப்புக் குயில், முகத்தைக் கழுவிக் காயப்போடு ஆகிய கவிதைத் தலைப்புகள் கொண்டிருக்கும் வசீகரம் வாசிக்கும் ஆர்வத்தைத் நமக்குள் தூண்டுகின்றன. ஜனூஸின் இன்னோரு சிறப்பம்சம் அவருடைய கவிதைகளில் பரவலாகத் தென்படும் தென்கிழக்கின் வட்டார வழக்குச் சொற்கள்.

இந்த இறுவட்டின் இன்னொரு முக்கிய அம்சம், இதில்பயன்படுத்தப் பட்டிருக்கும் பண்பட்ட குரல்கள் மற்றும் ஒலிச் சேர்க்கைகள். மிகவும் அர்ப்பணிப்புடனும் அக்கறையுடனும் குரல் வழியாக இந்தக் கவிதைகளுக்கு உயிர் கொடுத்திருக்கிறார்கள் சம்பந்தப்பட்டவர்கள். பொதுவாக இலங்கையின் கிழக்கு நில மாந்தர்களின் பேச்சு வழக்கில் ஒரு நாடகீயத் தன்மை வெளிப்படுவதுண்டு. ஏற்ற இறக்கங்களுடனும் இழுவையுடனும் உடல் உறுப்புகளின் அசைவுகளுடனும் கூடிய உரையாடல் அது. இந்த இறுவட்டின் கவிதைகள் பலவற்றிலும் அந்தத் தன்மை பிரதிபலிக்கின்றது. இந்த இறுவட்டின் கவிதைகளை ரயில் பெட்டிகளை இழுத்துச் செல்லும் ஓர் எஞ்சினின் பணியை ஒத்த மகத்தான செயலை இந்தக் குரல்கள் செய்திருக்கின்றன. மாடு போல முட்டுதுகா, என்ன இல்லை கிழக்கில், நெட்டி முறித்த நிலா ஆகியவை சிறந்த உதாரணங்கள்.

கவிதைகளின் பின்னணியில் ஒலிக்கும் இனிய மெல்லிய இசையும் ஓசைகளும் கவிதைகளுக்கு குறிப்பிடத்தக்க பரிமாணங்களை வழங்குகின்றன.

மழைக் கவிதை வாசிப்பின் போது, பெய்யெனப் பெய்யுமாம் மழை என்பது போல மழையோசை கேட்கின்றது. ரயில் கவிதை வரும் போது ரயிலோசை தட தடத்து விரைகின்றது. சுனாமி அனர்த்தத்தின் பேரவல நினைவுகளைத் தாங்கிய கவிதைகளின் போது அலை ஓசை நம் மனத்தைக் கரைக்கின்றது. காற்று இன்னொரு கவிதையில் சுழன்றடிக்கின்றது.

விதம் விதமான குரல்கள். விதம் விதமான ஓசைகள்.


இந்த இறுவட்டின் இன்னொரு கவர்ச்சிகரமான அம்சம் அது கொண்டிருக்கும் காட்சிகள். ஏற்கனவே சேகரிப்பில் இருக்கும் காட்சிகளிருந்து பொருத்தமான காட்சிகளைத் தேர்ந்தெடுப்பது என்பது வெளிப்பார்வைக்கு லேசாகத் தெரியலாம். ஆனால் அதன் பின்னால் இருக்கும் தேடலும் கடினமான உழைப்பும் அபரிமிதமானவை.

இந்த இறுவட்டை வெளிக்கொணர்வதில் இதனுடன் சம்பந்தப்பட்ட எல்லாவற்றையும் எல்லோரையும் ஒருங்கிணைப்பதில் ஜனூஸ் எவ்வளவு சிரமங்களை எதிர்நோக்கியிருப்பார் என்பதை ஓரளவு ஊகிக்க முடிகின்றது.

உமா வரதராஜன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மீண்டுமொரு கிலாபத்



துணிவு தேவை...
துணிந்த பின் தனித்துவம் தேவை
தன்னம்பிக்கையை வேராய் விதைத்து
அமாவாசை ஆகிப்போன அகிலத்திற்கு

அல்லாஹ்வின் அருள் கொண்டு
முஹம்மதின் வழி நின்று
அலியின் வீரம் கொண்டு
உமரின் ஆட்சி நடத்து

உலகப் பொதுமறையை யாப்பாக்கி
உலகின் மத்தியை தலைநகராக்கி
இருபத்திநாலில் இடிந்து போன
கிலாபத்தினை கிப்லாவை நோக்கி உயர்த்திடு

புனிதப் பயணத்திற்காய்- காத்திருக்கிறேன்...
பெருநாளாய் அதை வரவேற்கிறேன்
அந்நாளில் கேட்கும் தக்பீருக்காய் - தவமிருக்கிறேன்
அன்னை சுமையாவுடன் சுவனத்தில் வீட்டிருக்க
ஆசைப்படுகிறேன்!!!

பீர் முஹம்மட் றுபிதா பானு,
சுங்காவில

## ஆகு முன் யோசி





## உயிர் மொழி

நீயொரு பிள்ளை
உன் அன்னை முன்னே!
நீயொரு பட்டதாரி
உன் கல்லூரி முன்னே!
நீயோர் ஆசிரியன்
உன் மாணவர் முன்னே!
நீயொரு கணவன்
உன் மனைவி முன்னே!
நீயொரு தந்தை
உன் பிள்ளை முன்னே!
நீயொரு பூச்சியம்
உன்னைப் படைத்தவன் முன்னே!
ஆகி விடாதிருக்க
அஞ்சி தொழுது
நல்லடியான் ஆகு!

ராணி பௌசியா - கல்லெளை

## ஓர் அடியானின் துஆ

தனிமையில் அவனைத் தஹஜ்ஜத்தில் தொழுது
தருக நின் அருளெனக் கேட்பேன்
இனியொரு பாவம் இயற்றிட மாட்டேன்
என் பிழை பொறுத்தருள் என்பேன்!

தாயவள் செய்த தவறுகள் மற்றும்
தந்தையின் பிழைகளைப் பொறுத்து
தூயவன் உந்தன் தூதரின் பாதை
துயர்ந்திட அருள்குவை என்பேன்!

மனைவியோ டெந்தன் மக்களும் செய்யும்
மா பெரும் பிழைகளைப் பொறுத்து
தினைத் துணையேனும் தீங்குகள் புரியா
தீன் வழி தந்திடு என்பேன்!

உற்றவர் மற்றும் உறவினர் ஆசான்
உறு பிழை யாவையும் பொறுத்து
நற்றவச் சிறப்பொடு நலமுடன் வாழ
நாயனே அருள்குவை என்பேன்!


கலாபூஷணம்,கொட்டாரமுல்லை ஸஸீம்



கொந்தளிக்கும் அலைகளின்
குமுறலும் தோற்கும்!
கோடைக் காலத்து
பெருந் தீயும் தோற்கும்!!
மாந்தரை அழிக்கின்ற
வெள்ளமும் தோற்கும்!!
மனதில் தேங்கும்
பொறாமையின் தாக்கம்!!!

இரக்கமற்ற
வேங்கையும் தோற்கும்!
விஷத்தைக் கொண்ட
நாகமும் தோற்கும்!!
புவியை அழித்திடும்
புயலும் தோற்கும்!!
மனதை அழித்திடும்
பொறாமையின் தாக்கம்!!!


இடியை விஞ்சும்
மின்னலும் தோற்கும்!!
இரும்பை உருக்கிடும்
நெருப்பும் தோற்கும்!!
வஞ்சத்தின் பிடியில்
வாழ்வுகளை அழித்திடும்
மாந்தரிடம் நிறைந்த - இந்த
பொறாமையின் தாக்கம்!!!




வெளிவிட்ட - ஜரீனா முஸ்தபா

# மானுட தேசம்

9



## சமூகச் செம்மல் முஸாதீக் ஆசிரியர்

யாழ்ப்பாணம், சோனக தெரு மீரான் மொஹிதீன் செய்த்தூன் தம்பதியினருக்கு 22.08.1953 இல் மகனாக முஸாதீக் பிறந்தார். இவர் தனது ஆரம்பக் கல்வியை 1959 இல் யாழ். மஸ்ரஉத்தீன் பாடசாலையில் கற்றார். தொடர்ந்து 1966 ஆம் ஆண்டு யாழ். ஒஸ்மானியா கல்லூரியில் தனது படிப்பை தொடர்ந்தார். பாடசாலைக் கல்வியை முடித்த பின்னர், அதே பாடசாலையில் ஆய்வுகூட உதவியாளராக நியமனம் பெற்றார்.

பின்னர் இவருக்கு ஆசிரியர் நியமனம் கிடைத்தது. 1990 ஆம் ஆண்டு யாழ்ப்பாண முஸ்லிம் மக்கள் வெளியேற்றப்பட்ட போது, அவரும் குடும்பத்துடன் அங்கிருந்து வெளியேறி மல்வானை அல் முபாரக் மத்திய கல்லூரி, கொழும்பு ஹமீட் அல் ஹுஸைனி பாடசாலை, பம்பலப்பிட்டி இராமநாதன் இந்து மகளிர் கல்லூரி போன்ற பிரபல்யமான பாடசாலைகளில் ஆசிரியராக கடமையாற்றினார். தற்போது தனது அறுபதாவது வயதில் 36 வருடங்கள் சேவையாற்றி விட்டு இளைப்பாறியுள்ளார்.

முஸாதீக் ஆசிரியர் அவர்கள் யாழ். சோனக தெருவைச் சேர்ந்த சிந்தா பேகம் என்பவரை திருமணம் செய்து றிஸ்மி, றிஸ்னா, அப்துல் முஜீப் ஆகிய முத்தான பிள்ளைகளை பெற்றெடுத்தார். இவர் மன்னாரில் அரசாங்க அதிபராக இருந்து தமிழீழ விடுதலைப் புலிகளினால் சுட்டுக் கொல்லப்பட்டு இறையடி சேர்ந்த எம். எம். மக்பூல் அவர்களின் இளைய சகோதரர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

கல்வி பயிலும் காலங்களில் பாடசாலை உதைப் பந்தாட்ட அணியிலும் சம்சுன் விளையாட்டுக் கழக அணியிலும் சிறந்து விளங்கிய இவர், பின்னர் யாழ்ப்பாணத்திலுள்ள அனைத்து முஸ்லிம் விளையாட்டுக் கழகங்களும் இணைந்து ஒரே அணியாக யாழ். முஸ்லிம் விளையாட்டுக் கழகம் என இயங்கியபோது அதிலும் தன்னை இணைத்துக் கொண்டு ஒரு சிறந்த முன்வரிசை வீரராக விளங்கி பல வெற்றிகளுக்கும் வளர்ச்சிகளுக்கும் உறுதுணையாக இருந்தார்.

மர்ஹூம் [illegible] ஆசிரியர் அவர்களின் இல்லத்தில் 1986 ஆம் ஆண்டு நடந்த யாழ். முஸ்லிம் விளையாட்டுக் கழக பொதுச் சபை கூட்டத்தில் அக்கழகத்தின் தலைவராக இவர் ஏகமனதாக தெரிவு செய்யப்பட்டார். 1990 ஆம் ஆண்டு யாழ். முஸ்லிம் மக்கள் யாழ்ப்பாணத்திலிருந்து வெளியேற்றப்படும் வரை இவர், தலைவராக இருந்து சிறந்த முறையில் அக்கழகத்தை நெறிப்படுத்தினார்.

முஸாதீக் ஆசிரியர் ஒரு சிறந்த விளையாட்டு வீரராக மட்டுமல்ல, ஒரு சிறந்த உதைப்பந்தாட்ட பயிற்றுவிப்பாளராகவும் இருந்து பாடசாலை அணியையும் கழக அணியையும் ஒழுங்கான முறையில் நெறிப்படுத்தியதுடன் யாழ்ப்பாண பாடசாலைகள் நடுவர் சங்கத்தினால் நடத்தப்பட்ட பரீட்சையில் சித்தியடைந்து, உதைப்பந்தாட்ட நடுவராகவும் கடமையாற்றினார்.

இவர், பலவத்துறையில் ஏ.எச். மன்சூர், ஏ. ஸலாம், ஷபீக் காக்கா, சின்ன ராசா போன்ற நண்பர்களுடன் இணைந்து, இடம்பெயர்ந்து வந்த மக்களுக்காக இயங்கும் யாழ். முஸ்லிம் அகதிகள் சங்கத்தின் செயலாளராக தன்னை இணைத்து அம்மக்களுக்காக பல நிறுவனங்கள் மூலமும் தனவந்தர்கள் மூலமும் பல உதவிகளைப் பெற்று உதவினார். நோன்பு காலங்களில் விசேடமாக அம்மக்களுக்கு உலர் உணவுப் பொதிகளை வழங்கி அம்மக்களின் கஷ்ட, துன்பங்களில் பங்கெடுத் [illegible] நீர்கொழும்பு பெரிய முல்லைக்கு குடியேறி வசிக்கும் இவர், அங்கு வாழும் யாழ். முஸ்லிம் மக்களை பெரிய முல்லை பெரிய பள்ளிவாசலோடு ஒரு தொடர்பை உண்டாக்குவதற்கான ஒரு முயற்சியாக எஸ்.கே.எம். ராசிக் ஹாஜியார், ஏ.எல். சுபுஹான் ஹாஜியார், எம்.எஸ். முபாரக் போன்ற நண்பர்களுடன் இணைந்து அப்பள்ளிவாசலினால் ஒவ்வொரு வருடமும் ரமழான் மாதத்தில் வழங்கப்படும் நோன்புக் கஞ்சிக்கு பெரிய முல்லையில் வாழும், இடம்பெயர்ந்த யாழ்ப்பாண முஸ்லிம்கள் தொடர்பாக இங்கு வாழும் யாழ். தனவந்தர்களிடம் கணிசமான பணத்தை திரட்டி யாழ். பள்ளிவாசல் நிர்வாகத்திடம் ஒப்படைக்கும் ஒரு நல்ல திட்டத்தை 1996 தொடக்கம் இன்று வரை செய்து வருகிறார்.

ஏறத்தாழ 13 வருடங்களுக்கு மேலாக நீர்கொழும்பு பெரிய முல்லையில் இயங்கி வரும் "sedo" அமைப்பில் தன்னை ஓர் அங்கத்தவராக இணைத்துக் கொண்டு, அவ் அமைப்பால் மேற்கொள்ளப்படும் அனைத்து நடவடிக்கைகளிலும் ஈடுபடுகிறார்.

கிராம சேவகர் ஜனாப் எம்.எஸ். ஜினூஸ் அவர்களால் உருவாக்கப்பட்ட யாழ். சின்னப் பள்ளிவாசல் புனர்நிர்மாணக் குழுவில் தலைவராக இருந்து, பள்ளிவாசலின் மீள் கட்டுமானத்திற்கு தலைமை தாங்கி இப்பள்ளிவாசலின் புதிய தோற்றத்திற்கு கடுமையாக உதவினார். இப்பள்ளிவாசல் பரிபாலன சபை அங்கத்தவராக இயங்கும் இவர், தன்னை முழுமையாக தஃவா பணியிலும் ஈடுபடுத்தி வருகிறார்.

அல்ஹாஜ் எம்.எப்.எம். இக்பால் (JP)
யாழ்ப்பாணம்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

After A/L Exam... What Next?
NATIONAL DIPLOMA IN PRE SCHOOL TEACHING
முன்பள்ளி டிப்ளோமா பாடநெறி
(அரச அங்கீகாரம் பெற்ற ஒரு வருட முழு நேர வதிவிடப் பாடநெறி)
தகைமை:
க.பொ.த. (உ/த) மூன்று பாடங்களில் சித்தி
ஆரம்பம்: 2015 பெப்ரவரி
மேலதிக விபரங்களுக்கு:
Pre-School என Type செய்து
077 3171722 என்ற இலக்கத்துக்கு SMS
அனுப்பவும்
பொருளாதார வசதி குறைந்த
விண்ணப்பதாரிகளுக்கு
புலமைப்பரிசில் வசதிகள் உண்டு
INSIGHT
School of Education
Insight Institute of Managment and Technology
Ayesha Siddeeqa Campus - Mawanella
Head Office: City Campus: 18A, Palmyrah Avenue, Colombo - 03

LONDON SOUTH BANK UNIVERSITY | WOLVERHAMPTON | edexcel
After A/Ls
Brighten your
Future with
World-Class
Qualifications
•Business Management •Marketing •HRM
BTEC HND
Leading to BA (Hons) from the UK Universities
Quantity Surveying
BTEC HND
Leading to BSc (Hons) from the UK Universities
Bio-Medical Science
BTEC HND
Leading to BSc (Hons) from the UK Universities
Civil Engineering
BTEC HND
Leading to BEng/BSc (Hons) from the UK Universities
Telecom Engineering
BTEC HND
Leading to BEng (Hons) from the UK Universities
Computing
BTEC HND
Leading to BSc (Hons) from the UK Universities
Enrol with Pending A\L Results. November Intake: NOW ON
BCAS CAMPUS
BRITISH COLLEGE OF APPLIED STUDIES
BCAS Corporate office - No.32, Dharmarama Road, Colombo 06, Sri Lanka 0112559255
BCAS Wayamba Campus- 103/2, Dambulla Road, Kurunegala, Sri Lanka 0372221144, 0773534707
BCAS Kandy Campus - 344, Peradeniya Road, Kandy. Sri Lanka 0812224731
BCAS Jaffna Campus: 16, Point Pedro Road, Jaffna. Tel: 0212 219910,0777444407
BCAS Batticaloa Campus - 294,1/4, Trinco Road, Batticaloa, Sri Lanka 0652228451
BCAS Ampara Campus - No.392/1, Main Street, Kalmunai, Sri Lanka 0762226899
For details: •Manjula - 077 283 4595 •Mayuri - 077 264 0129
Ranked as No.1 Higher Education Provider (Private Sector) - Survey by LMD
ISO 9001 : 2008
www.skillsads.com

## தேசிய ஷூரா சபை அங்கத்துவ அமைப்புகளுடன் கலந்துரையாடல்






இலங்கை முஸ்லிம் சமூகத்தைச் சேர்ந்த அமைப்புகள் மற்றும் சங்கங்களின் கூட்டமைப்பான தேசிய ஷூரா சபை தனது அங்கத்துவ அமைப்புகளுடனான சந்திப்பு ஒன்றை கொழும்பில் நடத்தியது.

இச்சந்திப்பில் அங்கத்துவ அமைப்புகளின் செயற்திட்டங்கள், எதிர்கால இலக்குகள், தொடர்பாகவும் முஸ்லிம் சமூகம் எதிர் நோக்கும் சவால்கள் மற்றும் அச்சுறுத்தல்களை எதிர்கொள்வதி தேசிய ஷூரா சபையும் அங்கத்துவ அமைப்புகளும் இணைந்து செயற்படுவதற்கான வழிமுறைகளைக் கண்டறிதல் போன்றவை தொடர்பாகவும் ஆராயப்பட்டன.

இந்த சந்திப்பின்போது ஒவ்வோர் அங்கத்துவ அமைப்பும் தமது கடந்த கால செயற்பாடுகள், தற்போதைய முன்னெடுப்புகள், எதிர்காலத் திட்டங்கள் தொடர்பாக விளக்கங்களை முன்வைத்தன. மேலும் அங்கத்துவ அமைப்புகள் வேலைகளை ஒழுங்குபடுத்தி, பகிர்ந்தளித்தல் சமூக, தேச, சக வாழ்வுக்காக தமது வேலைகளை எவ்வாறு திட்டமிட்ட அடிப்படையில் செயற்படுத்தல் என்பன தொடர்பாக கலந்துரையாடப்பட்டது.

இந்நிகழ்வில் ஒவ்வோர் அமைப்பினதும் தலைவர், செயலாளர் உட்பட உயர் மட்ட மற்றும் ஆலோசனை சபை குழுவைச் சேர்ந்த உறுப்பினர்கள் பங்குபற்றியமை குறிப்பிடத்தக்கதாகும்.

எங்கள் தேச இணையம்...
www.engalthesam.lk

2015 ஆம் ஆண்டுக்கான கலண்டர்
உங்களுக்குத் தேவையான கலண்டர்களைப் பெற்றுக் கொள்ள நாடுங்கள்...
IPC Press
■ அரபு எழுத்தணிக் கலை
■ இஸ்லாமிய கலண்டர்
உங்கள் நிறுவனத்தின் பெயரிலேயே அச்சிட்டுத் தரப்படும்.
தொடர்புகளுக்கு: 077 2649151
0777 412146

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Published by: Just Media Foundation, Printed at AJ Prints (Pvt) Ltd. 44, Station Road, Dehiwela.